மஞ்சரி

SARASWATHI MAHAL LIBRARY
RECEIVED
5. APR. 1951

கர - சித்திரை

ருஷிய ஸினிமா

கடற்கன்னி நாடு

குட்டிச்சாத்தான் வேலை

டீயின் கதை

பெரிய மணி (சிறுகதை)

பண்ணை வாழ்க்கை (புத்தகச் சுருக்கம்)

-6- அணா

தனிப்பெருந் தலைவன்

இருளுக்கு அப்பால் கதிரவனுடைய வண்ணம் கொண்டு அந்தப் பரம புருஷன் விளங்குகிறான். அவன் எல்லா உருவங்களையும் படைத்துப் பெயர்களைக் கற்பிக்கிறான். அவற்றுக்கு நாயகனாய் அவற்றின் உள்ளே நிலவுகிறான். அவன் பிறப்பு இல்லாதவன்; ஆயினும் பல வடிவங்கள் எடுக்கிறான். அவனை அறிந்த கல்வியாளன் சாவை வெல்கிறான்.

—நாராயண உபநிஷத்.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன் — கா. ஸ்ரீ. ஸ்ரீ.

த. நா. ஸேனாபதி — 'குமுதினி'

வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி — கி. சாவித்திரி அம்மாள்

சீதா தேவி — 'ஆர்வி'

கௌரி அம்மாள் — மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி; சங்கர்; மகான்.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

மஞ்சரி
மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

ஜனப் பெருக்கம்: 'குழலினிது யாழினிது என்ப தம் மக்கள் மழலைச்சொல் கேளாதவர்' என்றார் வள்ளுவர். இந்த இன்பம் நாட்டில் இப்போது குறைவற்றிருக்கிறது. ஜனசங்கியைக் கணக்கில் லண்டனையும் நியூ யார்க்கையும் தோற்கடித்து விட்டது நம் சென்னை மாநகரம். அதன் ஜனத்தொகை இப்போது 14,29,374. சென்ற பத்து வருஷத்தில் 83·8 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. சதுரமைலுக்கு 28,588 பேர் சென்னை நகரில் வசிக்கிறார்கள். இது லண்டனைப் போல் இரு மடங்கு; நியூ யார்க்கை விடச் சிறிது அதிகம். சென்னை ராஜ்யமும் பின் தங்கவில்லை. 5 கோடியே 65 லட்சம் அதன் ஜனத்தொகை. இது 1941 நிலையைவிட 14 சதவிகிதம் அதிகம்.

உபவாச ரேஷன்: பம்பாய் 'இல்லஸ்டிரேட்டட் வீக்லி'யின் லண்டன் நிருபர், தம் நாட்டிலும் உணவுப் பொருளெல்லாம் விலையேறியிருப்பதாகத்தான் சொல்லுகிறார். ஆனால், இந்தியாவில் 9 அவுன்ஸ் ரேஷன் கொடுக்கிறார்களே, இதைக் கேட்டு அவர் திடுக்கிடுகிறார். "எங்கள் நாட்டில் 18 அல்லது 27 அவுன்ஸ் தானியத்தை ரேஷனாகக் கொடுத்தால்கூட அதைப் பட்டினி என்றே சொல்லுவோம். இப்போது நம் நாட்டில் வழங்கும் உபவாச ரேஷன் எப்போது நீங்குமோ?

பஞ்சம் காத்திராது: 20 லட்சம் டன் தானியத்தை இந்தியாவுக்கு இனாம் அளிக்கப்போவதாக அமெரிக்கா டமாரம் அடித்துக்கொண்டிருக்கிறது. ஆனால், அது சுலபத்தில் வந்து சேரப்போவதில்லையாம். அதுபற்றிய மசோதா, அமெரிக்க ஜனப்பிரதிநிதி சபையின் முன்பு ஏப்ரல் முதல் வாரத்துக்குள் ஆஜராகாதாம். அப்புறமும் நிறைவேற ஒரு வாரமாவது பிடிக்குமாம். கொரியா விஷயத்தில் இந்தியாவின் கொள்கை பிடிக்காத பல அமெரிக்கர், இந்தியாவுக்கு உதவக் கூடாது என்று தகராறு வேறு செய்கிறார்களாம். 'அமெரிக்கச் சடங்கெல்லாம் முடிந்து தானியம் புறப்படும் வரைக்கும், பஞ்சம் காத்திராது' என்று பிரபல 'நியூ யார்க் டைம்ஸ்' எச்சரிக்கிறது. இதை அவர்கள் கவனிப்பதாகவே தெரியவில்லை.

வரிகள் பெருகிய பட்ஜெட்: தேசத்தின் பொருளாதார முன்னேற்றத்தை நோக்கமாகக்

கொண்டே சர்க்காரின் பட்ஜெட் திட்டத்தைத் தயாரிக்கவேண்டும் என்கிறார்கள் தற்கால நிபுணர்கள். தங்கள் நிர்வாகத்தை எப்படியாவது நடத்தியாகவேண்டும் என்ற ஒரே நோக்கம் கொண்டு பட்ஜெட் தயாரிப்பது நம் சர்க்காரின் பழைய சம்பிரதாயம். அதை மீறவில்லை இந்திய நிதி மந்திரி சிந்தாமணி தேஷ்முக். காலணாவிலிருந்து 2¾ அணா வரையில் கார்ப்பொரேஷன் வரி உயர்வு, வருமான வரிக்கும் ஸூப்பர் டாக்ஸுக்கும் 5 சதவிகிதம் அதிக வரி, பெரும்பாலான இறக்குமதிகளுக்கு 5 சதவிகிதம் அதிகத் தீர்வை, மதுவகை இறக்குமதிகளுக்கு 50 சதவிகிதம் அதிகத் தீர்வை, நிலக்கடலை ஏற்றுமதிக்கு டன் ஒன்றுக்கு 80 ரூபாய் வரி, பெட்ரோலியத்துக்கும் கிரோஸினுக்கும் இறக்குமதித் தீர்வையில் 5 சதவிகிதம் அதிகம், புகையிலை, சிகரெட், பீடி, பொடி இவைகளின் வரிகளில் ஏற்றம், டில்லியில் விற்பனை வரி இப்படிப் பல வரி உயர்வுகள் அடங்கியிருக்கிறது அவருடைய பட்ஜெட்!

யார், எவ்வளவு கொடுக்கிறார்கள்? 1950-51-இல் மதுபானத் தீர்வை ரூ. 164 லட்சமும் புகையிலை வரி ரூ. 475 லட்சமும் வசூலாகியிருக்கிறது. அடுத்த வருஷம் இதைவிட அதிகமாகக் குடிகாரர்கள் ரூ. 40 லட்சமும், புகை குடிப்போர் அல்லது புகையிலை போடுவோர் ரூ. 19 கோடியும் மத்தியச் சர்க்காருக்குச் செலுத்தப் போகிறார்கள். "பார்த்தீர்களா; குடிகாரர்களும் புகை குடிப்போருங்கூடச் சர்க்காருக்கு எவ்வளவு உபயோகமாயிருக்கிறார்கள்! காங்கிரஸ் தலைவர் பேச்சைக் கேட்டுக்கொண்டு, மது, புகை, க்ஷவரம் இதையெல்லாம் எல்லாரும் கைவிட்டுவிட்டால், நிதிமந்திரி பாடு பெருந்திண்டாட்டமாய்ப் போகாதா?" என்று கேலி செய்கிறார் சென்னை 'மெயில்' நிருபர். அவருக்கு இது கேலியாயிருக்கலாம். நாட்டின் நலத்தில் கருத்துள்ளவருக்கெல்லாம், இது அளவற்ற வருத்தம் தரும் விஷயமாகும்.

ஆசிய விளையாட்டுக்கள்: 35,000 ஜனங்கள் 'ஜனகண மன' கீதம் பாட, புது டில்லி 'நேஷனல் ஸ்டேடியம்' என்ற விளையாட்டரங்கில் ஆசிய விளையாட்டுக்கள் தொடங்கின. மார்ச்சு 4-ஆம் தேதியிலிருந்து 7 நாள் வரை 11 நாடுகளின் 500 விளையாட்டுக்காரர்களுக்கு மேல் போட்டியிட்டார்கள். விளையாட்டுக்கள் பலவற்றில் வெற்றி கொண்டு முதல் இடம் பெற்றது ஜப்பான். நீச்சு, கனந்தூக்குதல் இரண்டிலும் சிங்கப்பூர், பிலிப்பைன் இரண்டும் முதன்மையாய் விளங்கின. புட்பால் ஆட்டத்தில் இந்தியாவும் பாஸ்கட் பால் ஆட்டத்தில் பிலிப்பைனும் வென்றன. சைக்கிள் விடுவதில் ஜப்பானியர் தலைசிறந்து விளங்கினார்கள். 19 வயதுள்ள நியோ ச்வீ கோச் என்ற சிங்கப்பூர் மாணவன் நாலு தங்க மெடல்கள் வாங்கினான். அடுத்த தடவை ஆசிய விளையாட்டுக்கள் 1955-இல் பிலிப்பைன் நாட்டில் உள்ள மணில்லா என்ற நகரில் நடக்கும். இந்தக் கணக்குப்படி சுமார் 55 வருஷங்களுக்குப் பிறகுதான் மறுபடியும் இந்தியாவில் இந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்.

திபேத் சீனச் சமரசம்: திபேத்தைப் பிடிக்க நான்கு மாதங்களுக்கு முன் கம்யூனிஸ்ட் சீனப் படை புறப்பட்டது. உண்மையான

சண்டை எதுவும் போடாமலே அது இப்போது வெற்றி அடைந்துவிட்டது. 15 வயது டலாய் லாமாவுக்குச் சீன சர்க்கார் ஒரு கடிதம் அனுப்பியது. 'நமக்குள் ஏற்பட்ட தப்பபிப்பிராயத்துக்கு வருந்துகிறோம். சீனாவின் பாதுகாப்பை உத்தேசித்துத் திபேத் எல்லையைக் காப்பதே எங்கள் நோக்கம். சட்டப்படி வயது வருவதற்கு முன்பே ஆட்சி அதிகாரம் முழுவதையும் தாங்கள் ஏற்றதைப் பாராட்டுகிறோம். எங்கள் செலவில் உங்கள் பிரதிநிதி ஒருவரை உடனே பீப்பிங் நகருக்கு அனுப்புங்கள். சமரச ஒப்பந்தம் செய்துகொள்ளலாம்' என்பதுதான் அதன் சாரமாம். இதன்படி திபேத் பிரதிநிதி சீனாவுக்குச் செல்கிறார். முன்னே இருந்தபடி திபேத்தில் டலாய் லாமா பூரண ஆதிக்கம் பெற்றிருப்பார்; திபேத்தின் பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம் இரண்டையும் சீனா ஏற்கும்; ஆனால், இந்தியாவுடன் மட்டுப் டலாய் லாமா நேரே சம்பந்தம் வைத்துக்கொள்ளச் சீனா அநுமதிக்கும். இவையே ஒப்பந்த நிபந்தனைகளாக இருக்கும் என்று தோன்றுகிறது.

நான்கு வல்லரசுகள் பேச்சு: பிரான்ஸ், ஸோவியத் யூனியன், இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா இந்த நான்கின் வெளி விவகார மந்திரிகளும் 1946 நவம்பர் 4 முதல் டிசம்பர் 12 வரைக்கும் கூடி, இதாலி, ருமேனியா, பல்கேரியா, ஹங்கரி, பின்லந்து இந்த நாடுகள்பற்றிய சமாதான ஷரத்துகளில் ஓர் ஒப்பந்தத்துக்கு வந்தார்கள். அதன் பிறகு இந்த நான்கு வல்லரசு மந்திரிகளின் கூட்டம் மூன்று முறை நடந்தாயிற்று. ஒரு பயனுமில்லை. இப்போது நாலாவது முயற்சிக்கு விஷய அட்டவணை தயாரிப்பதற்காக இந்த நாடுகளின் வெளி விவகார உதவி மந்திரிகளின் பூர்வாங்கக் கூட்டம் பாரிஸ் நகரில் நடக்கிறது. இதில் ஸோவியத் ஒரு கட்சி; மற்ற மூன்றும் மறு கட்சி. (1) ஜெர்மனியில் உள்ள ராணுவத்தைக் கலைப்பது; (2) ஜெர்மனியுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொள்வது; ஜெர்மனியை ஐக்கியப்படுத்துவது; (3) நாலு வல்லரசுகளும் ஆயுதங்களைக் குறைத்துக் கொள்வது—இவை ஸோவியத் சொல்லும் அட்டவணை. (1) தற்போது சர்வதேச நெருக்கடி ஏற்படுத்தியிருக்கும் சகல விவகாரங்களையும் அலசுவது; (2) ஜெர்மனியுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொள்வது; ஜெர்மனியை ஐக்கியப்படுத்துவது; (3) சுதந்தர ஜனநாயக ஆஸ்திரியாவை ஸ்தாபித்து அதனுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொள்வது - இவை மற்றவை சொல்லும் விஷய அட்டவணை. ஒரு கட்சி சொல்லுவதை மறு கட்சி ஒப்புக்கொள்ளாமலே, உக்கிரமாய் வாதம் நடந்து கொண்டிருக்கிறது. ஒற்றுமையான முடிவு எதுவும் ஏற்படாமலே இரண்டு கட்சிகளும் கடைசியில் பிரியும். பிறகு இரண்டும் 'குற்றம் மற்றதன் பேரில்' என்று உலகத்துக்குத் தண்டோரா போடத் தொடங்கிவிடும்!

பாகிஸ்தானில் சதி: பாகிஸ்தான் மந்திரிகளை யெல்லாம் சுட்டுக் கொல்லவும், பலாத்காரத்தின் மூலம் கம்யூனிஸ்ட் ஆட்சியை ஸ்தாபிக்கவும் ஒரு சதி நடந்ததாம். இதில் சம்பந்தப்பட்டதாகப் பாகிஸ்தான் ராணுவக் காரியாலய நிர்வாகத் தலைவர் (சீப் அவ் ஸ்டாப்) அக்பர் கான், அவர் மனைவி நஸீம் ஷா நவாஸ், பிரிகடீர் எம். ஏ. லத்

தீப், 'பாகிஸ்தான் டைம்ஸ்' ஆசிரியர் பைஸ் அஹமத் பைஸ் முதலிய பலரை வியாகத் சர்க்கார் கைது செய்திருக்கிறது. விசாரணையும் நடக்கப்போகிறதாம். உலகத்திலேயே பெரிய முஸ்லிம் ராஜ்யத்தில், சதியில் சம்பந்தப்பட்டதாகக் கைதானவர்களெல்லாம் நல்லவேளையாக முஸ்லிம்கள்தான். 'காபிர்'களான பிற மதத்தினர் அல்ல. மற்றவர்மீது எத்தனைதான் முஸ்லிம் லீக் துவேஷப் பிரசாரம் செய்தாலும், சகோதர முஸ்லிம்களை வெகுகாலம் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. இந்தச் சதி கம்யூனிஸ்ட் சதி என்கிறார் லியாகத். பிடிபட்டிருப்பவரின் தன்மையைப் பார்த்தால் நமக்கு அப்படித் தோன்றவில்லை. காஷ்மீரில் கலகக்காரர்களுக்குத் தலைமை வகித்து முதல் முதல் மாறுபெயருடன் நடத்திச் சென்ற பட்டாணியர் அக்பர் கான். அவர் மனைவி பிரசித்தி பெற்ற ஷா நவாஸ் என்ற முஸ்லிம் பிரபு குடும்பத்தைச் சேர்ந்தவர். 'பாகிஸ்தான் டைம்ஸ்' ஆசிரியருக்குக் கம்யூனிஸத்தில் அநுதாபம் உண்டு; என்றாலும் தீவிரமாய்ச் செயல் புரியக்கூடியவர் அல்ல. விசாரணை நடக்கப்போகிறதாமே, அதில் என்ன ரகசியங்கள் வெளிப்படுகின்றனவோ? பார்ப்போம்.

காமன்ஸ் சபையில் இரவுக் கூத்து: பிரிட்டிஷ் காமன்ஸ் சபை அங்கத்தினர்களில் பெரும்பாலோர் அன்றாடம் கூட்டத்துக்கு நேரே வீட்டிலிருந்து வந்துவிடுவார்கள். கூட்டம் முடிந்ததும் வீட்டுக்குத் திரும்பிவிடுவார்கள். பணங்காசு உள்ள சிலர்தான் - அநேகமாய்க் கன்ஸர்வடிவ் கட்சியாரே- சபைக்கு அருகில் விடுதி முதலியவை வைத்துக்கொண்டு-அங்கேயே தங்கியிருப்பார்கள். இராக்கூத்தடிப்பதால், தொழிற்கட்சி அங்கத்தினர்களுக்குப் பெருங் கஷ்டம். ஆகவே, தொழிற்கட்சி மந்திரி சபையைக் கவிழ்க்க, இப்படி இராக்கூத்தடிக்கும் தந்திரத்தை ஏன் கையாளக்கூடாது என்று எண்ணினார் சர்ச்சில். தம் கன்ஸர்வடிவ் கட்சிச் சகாக்களை ஏவிவிட்டார். அவர்களுக்கு ஒரு யுக்தி சொல்லிக் கொடுத்தார். அதை அவர்கள் கடைப் பிடிக்கத் தொடங்கினார்கள். அது இதுதான்: சபையில் கன்ஸர்வடிவ்களுக்குத் திடீரென்று தெய்வபக்தி வந்துவிடும்; உடனே ஏதாவது ஒரு விஷயம்பற்றிப் 'பிரார்த்தனை' செய்யவேண்டும் என்று பிரேரணை கொண்டுவருவார்கள். இதுபற்றிய விவாதத்திலே வெகுநேரம் போய்விடும். சபையின் நியாயமான நடவடிக்கைகள் பொழுது விடிகிறவரை தள்ளிப் போய்விடும். அவ்வளவு நேரம் கழித்து வீட்டுக்குப் போகிறவர்கள், மறுநாள் கூட்டத்துக்குக் குறித்த நேரத்தில் வந்தாக வேண்டும். தொழிற்கட்சியாரில் சிலர் வீட்டுக்குப் போவார்கள். மற்றவர் சபை நாற்காலியிலேயே உட்கார்ந்தபடி தூங்குவார்கள். பொழுது விடிந்ததும் அடுத்த கூட்டத்தில் ஆஜராயிருக்க வேண்டுமே, அதற்காகத்தான் தொழிற்கட்சி அங்கத்தினர்கள் எப்போதும் முஸ்தீப்பாய் இருக்கவேண்டியிருக்கிறது. ஏனென்றால், சபையின் மொத்த எண்ணிக்கையிலே, அவர்களுடைய பெரும்பான்மையெல்லாம் ஐந்தாறு அங்கத்தினர்களுக்கு மேல் இல்லை. கன்ஸர்வடிவ்கள் எந்தச் சமயத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவார்களோ என்று தொழிற் கட்சியாருக்குப்

பயம். கன்ஸர்வடிவ்களோ முறை போட்டுக்கொண்டு மிகச் சில பேர் சபையில் எப்போதும் இருக்கிறார்கள்; ஏதாவது தொல்லை கொடுக்கிறார்கள். இதற்குப் பழிக்குப் பழியாக ஒரு வேலை செய்ய எண்ணினார்கள் தொழிற்கட்சியார். சபைக்கு அருகே உள்ள மதுபானக் கடைகளையெல்லாம் இரவில் மூடிவிடும்படி உத்தரவு போடவேண்டுமென்று ஒரு பிரேரணை கொண்டுவர முடிவு செய்தார்கள். பெரும்பாலும் குடிப்பவர் பணங்காசுள்ள கன்ஸர்வடிவ்கள் தான். ஆகவே, இது அவர்களுக்கு உபத்திரவமாயிருக்கும். ஆனால், இரண்டு கட்சியாருக்கும் இது பற்றிப் பிறகு ஏதோ சமரசப் பேச்சு நடந்ததாம். இத்தனைக்கும் மூலகாரணம் என்ன தெரியுமோ? இப்போது மந்திரிசபை கவிழ்ந்து தேர்தல் நடந்தால், தங்களுக்கே ஜயம் கிடைக்கும் என்பது கன்ஸர்வடிவ்களின் நினைப்பு. ஆகஸ்டு, செப்டம்பர் வரைக்கும் பொதுத் தேர்தல் தள்ளிப்போனால், தாங்களே மறுபடியும் ஜயம் பெறலாம் என்று தொழிற்கட்சியாருக்கு எண்ணம். ஏனென்றால், அதற்குள் புலால் விலை குறைந்துவிடும்; குளிர் காலம் போய் விடுமாதலால், நிலக்கரி இல்லாத கஷ்டத்தை மக்கள் மறந்துவிடுவார்கள். அது எப்படியானாலும், இந்தப் பூட்டுக்குத் தொழிற்கட்சி மந்திரிசபை பிழைத்தது. ஈஸ்டர் விடுமுறைதான் வந்துவிட்டதே!

தேனீ

நமது நாட்டில் போதிய தேனீக்கள் இல்லாமையால் 80 சதவிகிதம் தேன் பாழாகிறதென்று தெரிகிறது. புஷ்பங்களில் மகரந்தமும், மணமுள்ள பராகம் என்ற பொருளும் இருக்கின்றன. இவை இரண்டும் சேரும்போதுதான் விதை உண்டாகிறது. தேனீக்கள் மகரந்தத்தை உறிஞ்சுவதனால் விளைவு 5 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதம் வரையில் அதிகமாகலாம்.

மலர்களில் காய் தோன்றுவதற்கு முன் மகரந்தம் வழியும். இந்த மூலப்பொருளை மிகுந்த உழைப்பினால் தம் உடலிலுள்ள யந்திரத்தின் மூலமாகத் தேனீக்கள் தேனாக மாற்றுகின்றன. அவை ஒரு துளி தேனுக்காக 500, 600 மலர்களில் அலைகின்றன. மணிக்கு 20 மைல் வேகத்தில் பறக்கின்றன. அவற்றுக்குள்ள மோப்பச் சக்தி மிகவும் அதிகமாகையால் பர்லாங் தூரத்தில் மலர்ந்துள்ள மலரின் வாசனையைக்கூட அவை தெரிந்துகொள்கின்றன.

தேனீப் பெட்டிகள் வைத்து ஈக்களை வளர்க்க வேண்டும். தேனீக்களை வளர்ப்பதனால் அவற்றின் வம்சம் விருத்தியாகும். பழைய அநாகரிகமான முறையில் தேனை எடுப்பதைச் சமூகத் துரோகமென்று கருதி, அதை வாங்க மறுக்கவேண்டும்.

தேனீ வளர்ப்பதன் பெருமையை நாம் அறிந்து அதை வளர்த்தால், தேன் உற்பத்தி பெருகுவதோடு உணவுப் பண்டங்களின் விளைவும் அதிகமாகும்.

ஸ்ரீ அம்ருத ராவ் காட்கே, 'ஸர்வோதயம்'.

ருஷிய ஸினிமா

பார்த்தா

****

இன்று உலகத்து ஸினிமா டைரக்டர்களிலே தலைசிறந்த ஒருவர் ஸெவொலாடு புடோவ்கின். மாக்ஸிம் கார்க்கி என்பவரின் 'அன்னை' என்ற புரட்சிக் கதை, உடற்கூற்று நிபுணரான ஆண்டன் பாவ்லாவ் என்பவரின் நூல்கள், விமான சாஸ்திர (ஏரோ - டைனமிக்ஸ்) நிபுணரான ஜுகாவ்ஸ்கி என்பவரின் வாழ்க்கை வரலாறு இத்தகைய அபூர்வமான ஸினிமாக்களைப் பிடித்தவர் இவர். இவர் எழுதியுள்ள பல புத்தகங்கள் உலகெங்கும் ஸினிமாக் கலை சம்பந்தமான பாடப் புத்தகங்களாய் விளங்குகின்றன. இவருக்கு வயது 58. இவருக்குப் பத்து வயது சின்னவர் செர்கஸாவ் என்ற பிரபல நடிகர். இரண்டு பேரும் சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்த போது, இவர்களைக் கட்டுரையாளர் கண்டு பேசிய விவரம் இது.

****

ருஷியா தேசத்துப் பிரபல ஸினிமாப் பட டைரக்டர் புடோவ்கின் என்பவர் சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்தபோது, நான் அவரைச் சந்தித்துப் பேசினேன். "இந்தியா மிக அழகான தேசம். இதைப் படம் பிடித்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! ஆனால் மாஸ்கோவுக்குப் போய்ச் செய்ய வேண்டிய காரியம் எவ்வளவோ இருக்கிறது. அதையெல்லாம் விட்டு இந்தியாவைப் படம் பிடிப்பது என்றால் இப்போது சாத்தியமில்லை" என்று அவர் சொன்னார்.

புடோவ்கினுடன் ருஷியா தேசத்துப் பிரபல நடிகரான செர்கஸாவ் என்பவரும் இருந்தார். அவரும் எங்கள் சம்பாஷணையில் கலந்துகொண்டார். என்னுடைய கேள்விகளுக்கு ருஷிய பாஷையில் கைகளை ஆட்டி அபினயங்களுடன் பதில் சொன்னார். இந்தியாவில் காட்டும் ஸோவியத் படங்களுக்குப் பிரதிநிதியான எம். பெலாவ் என்பவர்தான் அவர் பதிலை எனக்கு மொழிபெயர்த்துச் சொன்னார்.

"படம் பிடிப்பதற்கு நீங்கள் எந்த மாதிரி விஷயங்களைப் பொறுக்குகிறீர்கள்?" என்று புடோவ்கினைக் கேட்டேன்.

"சாதாரணமாய்ச் சரித்திர சம்பந்தமான படங்கள்தான் எடுப்பது வழக்கம். ஆனால் நான் கடைசியாக எடுத்தது ஸயன்ஸ் சம்பந்தமான படம். அடுத்தபடி ஸோவியத் குடியானவன் ஒருவனுடைய வாழ்க்கையைப் படம் பிடிக்கலாம் என்று இருக்கிறேன். அதில் முக்கியப் பாத்திரமாகச் செர்கஸாவ் நடிப்பார். இது விஷயமாக முதலில் பிரபல ருஷிய எழுத்தாளர் ஸெமனுவ் என்பவரை இவர் கண்டு பேசுவார். பிறகு, பட்டணம், கிராமாந்தரம் ஆகிய இரண்டு இடங்களுக்கும் தாமே நேரில்

காப்பிரைட்: ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம் (ஆங்கிலம்: 3-2-'51), சென்னை.

சென்று விஷயங்களைச் சேகரிப்பார்" என்றார் புடோவ்கின்.

"அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா ஆகிய தேசங்களைப்போல் பாமர ஜனங்களுக்குப் பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நீங்கள் படம் தயாரிப்பதுண்டா?" என்று கேட்டேன்.

"இல்லவே இல்லை. ஸோவியத் ருஷியாவில் பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் படம் தயாரிப்பதே இல்லை. மக்களுக்கு நல்ல அறிவையும் கல்வியையும் புகட்டி அவர்கள் உயர்தர வாழ்க்கை நடத்துவதற்கு உதவும் படங்களைத்தான் அங்கே தயாரிப்போம்" என்று அவர் தயங்காமல் சொன்னார்.

சிறப்பு வாய்ந்த உயர்தரப் படமாக இருந்தால் நிச்சயம் மகாஜனங்களுக்குப் பிடிக்கும்" என்று செர்கஸாவ் குறுக்கிட்டுச் சொன்னார்.

"ஒரு நோக்கத்தோடுதான் நாங்கள் படம் தயாரிப்போம். ஆனால் அதில் கலைச் சிறப்பும் விசேஷமாக விளங்கும்" என்று புடோவ்கின் தொடர்ந்து சொன்னார்.

"நீங்கள் தயாரிப்பது எந்த மாதிரியான படம்? பாமர மக்களெல்லாம் ரசிக்கக்கூடிய கீழ்த்தரமான படமா? அல்லது அவர்களின் சுவையை உயர்த்தக் கூடிய உயர்தரமான படமா?" என்று கேட்டேன்.

"ஸோவியத் மக்கள் எல்லாருமே உயர்தரமான கலைச்சுவை பெற்றிருக்கிறார்கள். பலவேறு நிலையிலுள்ள ஜனங்களுக்கும் உகந்த படங்களையே நாங்கள் தயாரிக்கிறோம். சாதாரணக் குடியானவனுக்கும் தொழிலாளிக்கும் ஒரு வகைப் படம், படித்தவர்களுக்கு ஒரு வகைப் படம் என்றெல்லாம் நாங்கள் பிரித்துத் தயாரிப்பதில்லை. கலையைக் கீழ்த்தரத்துக்கு இழுப்பது என்பதை எங்களிடம் காண முடியாது. வாழ்க்கைக்குச் சம்பந்தமற்ற பொய்யான விஷயங்களைப் படத்தில் புகுத்துவது எங்கள் நாட்டு மக்களுக்குப் பிடிக்காது. தங்கள் அறிவு விருத்தியாகவேண்டும் என்ற ஆசை அளவில்லாமல் இருப்பதால், மிக உயர்தரமான படங்கள்தான் வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். வேலை செய்யும் எளிய ஜனங்களுக்கும் படித்தவர்களுக்கும் இடையே பண்பாடுகளில் உள்ள வேற்றுமை எங்கள் நாட்டில் வரவரக் குறைந்து வருகிறது. இப்போது அவர்களுக்குள் இந்த வித்தியாசமே சிறிதும் இல்லை என்றுகூடச் சொல்லலாம்" என்றார் புடோவ்கின்.

"உங்கள் நோக்கம் என்ன? ஜனங்களுக்கு அறிவு புகட்ட வேண்டும் என்பதா? அல்லது அவர்கள் உல்லாசமாகப் பொழுதுபோக்கினாலே போதும் என்பதா?" என்று கேட்டேன்.

"மக்களுக்கு அவரவருடைய வேலைக்கு வேண்டிய அறிவை அளிப்பதுதான் எங்கள் சினிமாப் படங்களின் முக்கிய நோக்கம். தினசரி வாழ்க்கையில் எங்கள் நாட்டு மக்களுக்கு எவ்வளவோ பிரச்னைகள் ஏற்படுகின்றன. அவைகளைத் தீர்ப்பதற்கு அந்தப் படங்கள் உதவுகின்றன. மக்களுடைய வாழ்க்கையை அப்படியே படத்தில் பிரதிபலித்துக் காட்டுகிறோம்" என்றார் புடோவ்கின்.

"ஹாலிவுட்டில் சிலர் மட்டும் மிகவும் பிரபலமான நட்சத்திரங்களாக இருக்கிறார்களே, அதுபோல் ஸோவியத் ருஷியாவிலும் உண்டா?" என்று கேட்டேன்.

அதற்குச் செர்கஸாவ், "'நட்சத்திரங்கள்' என்றே நாங்கள் யாரையும் எங்கள் நாட்டில் சொல்லுவதில்லை. அங்கே படம் தயாரிப்பவர்கள் அந்த அந்தப் பாத்திரத்துக்குப் பொருத்தமான நடிகர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். பிரதான நடிகர்கள் முக்கியமான பாத்திரங்களாக மட்டும் அல்ல, சில்லறைப் பாத்திரங்களாகவும் நடிப்பார்கள். எந்தப் பாத்திரமாக இருந்தாலும் வாழ்க்கையில் உள்ளபடி உண்மையாக நடக்க வேண்டும். அதுதான் எங்கள் முக்கிய நோக்கம்" என்று பதில் அளித்தார்.

"சினிமா நடிகர்களுக்குத் தனி அந்தஸ்து உண்டா? அல்லது அவர்கள் சகஜமாய் எல்லாருடனும் பழகுவார்களா?" என்று ஒரு கேள்வி கேட்டேன்.

இதற்குப் புடோவ்கின், செர்கஸாவ் இரண்டு பேரும் சொன்ன பதில் இது: "நடிகர்களுக்கு அந்த மாதிரி தனி அந்தஸ்து எதுவும் கிடையாது. அவர்கள் மற்ற எல்லாத் தொழிலாளிகளையும் போன்றவர்களே. எல்லாரும் சாதாரணப் பிரஜைகள் தான்; நாட்டு மக்களுக்குச் சொந்தமானவர்கள். அவர்களை ஜனங்கள் மரியாதையாய் நடத்துவார்கள். ஆனால் தங்கள் சொந்த வாழ்க்கையில் நடிகர்கள் எப்படி இருக்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்ற அநாவசியமான ஆவல் மக்களுக்குக் கிடையாது. நடிகர்களுக்கோ தாங்கள் நடிக்கும் படம் வெற்றிகரமாய் அமையவேண்டும் என்பதில் தான் கண்ணும் கருத்தும்."

மற்றொரு கேள்விக்குப் பதிலாக, "சினிமா நடிகர்களுக்கும் மற்றுமுள்ள சினிமாத் தொழிலாளிகளுக்கும் கொடுக்க வேண்டிய சம்பளத்தைச் சர்க்காரே திட்டமிட்டிருக்கிறார்கள். அப்படிக் கொடுக்கும் சம்பளத்திலும் அதிக வித்தியாசம் இராது. 'ஷூட்டிங்' நடக்கும் நாட்களைக் கணக்கிட்டுச் சம்பளம் கொடுப்பார்கள்" என்று அவர்கள் சொன்னார்கள்.

மேலும், "ஸோவியத் படம் ஒன்று சாதாரணமாய் 8,000 அடி நீளம் இருக்கும். ஆயினும் நீளத்தை நிர்ணயிக்கும் சட்டதிட்டம் ஒன்றும் இல்லை. படத்தின் தரத்துக்கு ஏற்றபடி படம் தயாரிக்கும் செலவும் வித்தியாசப்படும். என்றாலும் விசேஷமான சில படங்களுக்கு அதிகப் பணம் தேவையாயிருந்தால், அதற்கு வேண்டிய பணத்தை அளித்துச் சர்க்கார் உதவி செய்வார்கள்" என்று புடோவ்கின் தெரிவித்தார்.

"சாதாரணமாய் ஒரு ஸ்டுடியோவில் வருஷம் ஒன்றுக்கு எத்தனை படங்கள் தயாரிப்பீர்கள்?" என்று கடைசியாகக் கேட்டேன்.

"அவ்வளவு கணக்காய்ச் சொல்ல முடியாது. ஆனால் என் ஸ்டுடியோ சம்பந்தப்பட்ட வரையில் வருஷத்துக்கு 12 படங்கள் தயாராகின்றன" என்றார் புடோவ்கின்.

வியாபார முறை

"இதோ பாருங்கள்; இந்த ஜோடு எத்தனை வருஷமானாலும் தேயவே தேயாது."

"பேஷ்! அப்படியானால், இதில் ஒரு ஜோடி எனக்குத் தாருங்கள்."

"பூ! ஒரு ஜோடிதானா! அது போதுமா?"

'பாயிண்ட் டி வியூ,' பாரிஸ்.

கடற்கன்னி நாடு

ஹாரிங்டன் சித்திரித்தது

மக்களெல்லாம் இன்புற்று வாழ்வதற்கு வழி கோல ஆசை கொண்ட பல அறிஞர், இலக்கியத்தில் கற்பனை உலகங்களைப் படைத்திருக்கிறார்கள் அவைகளின் சாரத்தைத் தொடர்ச்சியாக இங்கே விளக்கிவருபவர் ஸ்ரீமான் ரா. ஸ்ரீ. தேசிகன்.

ஹாரிங்டன் உயர்ந்த குடும்பம் ஒன்றில் 1611-இல் பிறந்தார். அதில் பல அறிவாளிகள் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் பல மொழிகளைப் பயின்றவர்கள்; கல்வி கேள்வி நிரம்பியவர்கள்; பழுத்த படிப்பாளிகள். ஐரோப்பா முழுவதும் சுற்றித் திரிந்து பல அநுபவங்களைத் திரட்டிக்கொண்டவர்கள். இப்படிப்பட்ட உறவினர்களுக்கிடையே வளர்ந்தவர் ஹாரிங்டன். 1629 - இல் ஆக்ஸ்போர்டிலுள்ள டிரினிட்டி காலேஜில் இவர் சேர்ந்தார். அதை அலங்கரித்த சில்லிங்வொர்த் என்ற பாதிரியாரின் பழக்கம் ஹாரிங்டனுக்கு ஏற்பட்டது. மத விஷயத்தில் அவருக்கு ஒரு பொதுநோக்கு வந்தது. அதற்குக் காரணம் அந்தப் பாதிரியாரே என்று சொல்லலாம். ஆக்ஸ்போர்டில் அவர் படிப்பு முற்றுப் பெறவில்லை. ஹாலந்து, பிரான்ஸ், இதாலி இந்த நாடுகளிலெல்லாம் சுற்றித் திரிந்தார். வெனிஸ் நாட்டு அரசியல் அமைப்பில் ஈடுபட்டார். அதைத் துருவி ஆராய்ந்து அதன் நுட்பங்களை உணர்ந்து தம் 'ஓஷியானு' என்னும் நூலில் வைத்து இழைத்துக்கொண்டார். இரண்டாம் சார்லஸ் மன்னன் காலத்தில் அவனுக்கு விரோதமாய்ச் சதி செய்ததற்காக, ஹாரிங்டன் சிறைவாசம் செய்ய நேர்ந்தது. மறுமலர்ச்சிக் காலத் தொட்டிலில் இனிது வளர்ந்த ஒரு குழந்தை அவர். சிறையில் கண்ட அநுபவம், லத்தீன், கிரீக் மொழிகளில் அவருக்கு இருந்த ஆர்வம், ஐரோப்பாவில் அவர் செய்த விரிவான பிரயாணத்தால் கிடைத்த பரந்த அரசியல் அறிவு - இவை யாவும் அவருக்கு உதவியாக இருந்தன. ஸ்பார்ட்டா, ஆதென்ஸ், ரோமாபுரி இந்தப் பிரதேசங்களிலுள்ள அரசியல் அமைப்புக்களை நன்றாக உணர்ந்தவராதலால் அந்த அறிவும் ஓஷியானுவை வரைவதில் அவருக்குப் பயன்பட்டது.

இந்த நூலைக் கிராம்வெல் காலத்தில் அவர் எழுதினார். இதில் வரும் காட்சிகளெல்லாம் ஆங்கில நாட்டில் எழுந்த காட்சிகளே. ஆங்கில நாட்டுக்குத்தான் ஓஷியானு என்ற பெயரைச் சூட்டினார். கதாநாயகனாய் விளங்குகிற ஆல்பஸ் மெகலட்டர் என்பவன் கிராம்வெல்தான்.

நாட்டின் நிலைமையைப்பற்றிச் சிந்திக்கிறதுபோது மெகலட்டரின் மனம் சாம்பிற்று. ஸ்பார்ட்டா நாட்டுக்கு லைக்கர்கஸ் சட்டம் வகுத்துத் தந்தது போலவே, தம் நாட்டுக்கும் ஓர் அரசியல் திட்டம் ஏற்படுத்த வேண்டுமென்ற ஆர்வம் மெகலட்டரின் மனத்தில் அரும்பிற்று. அநேக அரசியல்வாதிகளைத் திரட்டி ஒரு சபை கூட்டினர். அரசியல் அமைப்பை நிர்மாணம் செய்தார். அந்த அமைப்பு ஒழுங்காய் ஓர் இயந்திரம் போலத் தன்னளவே சுழலக் கண்டவுடன் அரசியலிலிருந்து விலகிவிட்டார்.

இந்த நூலில் உள்ள உருவகக் கதையை அகற்றி நூலை மட்டும் நோக்கினல், 'ஹாரிங்டன் சித்திரித்தது தானே வளர்ந்த அரசியல் அல்ல; ஒருவர் வரைந்த திட்டமே (written constitution)' என்று நன்ருகப் புலனுகும்.

கிராம்வெல் காலத்தில் நிகழ்ந்த குழப்பத்தை நீக்க ஹாரிங்டன் வகுத்த அரசியல் அமைப்பு என்றே இதைச் சொல்ல வேண்டும். ஓஷியானு, உருவத்தில் ஒரு லட்சிய அரசியல் போலத் தோன்றினுலும் பிளேட்டோவின் ஜனநாயகத்தைப் போல ஒரு ஞானியின் கனவல்ல. மோரின் யுடோப்பியா ஒரு லட்சிய நாடு. பௌதிகப் பண்பு படைத்த பேக்கன், 'புதிய அட்லாண்டிஸ்' என்ற நூலில் தாம் கண்ட கனவை மலரச் செய்திருக்கிருர். 'பரிதி மாநக'ரில் காம்பனல்லாவின் விரிந்தநோக்கைக் காணலாம். ஓஷியானுவோ நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எழுந்த நூல். நேர்முகமாய் உபதேசம் செய்தால் ஓஷியானுவின் பிரசுரத்துக்கே தடை ஏற்படலாம் என்று கருதியே ஹாரிங்டன் ஒரு கதைப் போக்கில் அரசியலைச் சித்திரித்தார் என்று தோற்றுகிறது. இந்த நூல் சட்டென்று வெளி வந்துவிடவில்லை. இதற்கும் பல இடையூறுகள் ஏற்பட்டன. கிராம்வெல்லின் அருமைப் புதல்வி மூலம் இந்த நூல் உலகத்தில் தோன்றியது. இதில் காணும் கருத்துக்களை இனி ஆராய்வோம்.

சட்டங்கள்தான் அழியாமல் நிற்கும். மனிதனின் ஆதிக்கம் காற்றுப் போல் மாறக்கூடிய இயல்புடையது. சட்டதிட்டங்களை வகுத்துவிட்டால் அவை நிலைபெற்று நிற்கும். நிலத்தைப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். ஒருவன் கையில் அது இருக்குமானல், அது முடியாட்சி ஆகும். சிலபேர்களின் கையில் தங்குமானல், அது பிரபு ஆட்சியாகத் திகழும். ஜனங்களிடையே அது நிற்குமானல், ஜனநாயகத்துக்குக் குறைவில்லை. பொருளாதாரத்தின்மீதுதான் அரசியல் ஓங்கி வளரும். 2,000 பவுன் விலை மதிப்புள்ள நிலத்துக்கு மேல் ஒருவரும் வைத்துக்கொள்ளக் கூடாது. இப்படிப் பங்கிடுவதால் ஜனநாயகம் நிலைத்து நிற்கும். அதிகாரத்தைத் தக்கவர்களுக்கு அளித்தால், அது ஜனநாயகத்தில் ஏற்படும் புரட்சிக் கொள்கையைத் தடை செய்யும். ஒன்றுக்கு மேல் ஒன்று தடையாய் நின்ருல் ஊழலுக்கு இடம் ஏற்படாது. தமது அரசியல் முறைக்கு நான்கு உபாயங்களை அவர் நாடுகிருர்.

(1) பெட்டி முறைத் தேர்தல் (Ballot); (2) தேர்தலுக்குள் தேர்தல் (Indirect Election); (3) ஆண்டுதோறும் பதவி முறை மாற்றம் (Rotation of office); (4) இரு சட்டசபைத் திட்டம்

(a two chamber legislative system)-இவை யாவும் ஹாரிங்டன் வகுத்துத் தந்த உபாயங்களாகும்.

பெட்டி முறைத்தேர்தல், முக்கிய மான அம்சமாகும். வோட்டுரிமை உடையவர்கள் பகைவனுக்கு அஞ்சி ஓர் அலுவலைச் செய்யலாம்; அல்லது நண்பர்மேல் வைத்த அபிமானத் தால், தைரியமாய் மனத்தில் உள்ளதை விண்டுகாட்ட முடியாமல் போய்விடும். பகையோ அன்போ பெட்டி முறைத் தேர்தலில் குறுக்கே நிற்காது.

தேசத்தை ஐம்பது தொகுதி களாய் ஹாரிங்டன் பிரித்திருக் கிறார். ஒவ்வொரு தொகுதியிலும் இருபது நூறு (2,000) பேர் இருப் பார்கள். ஒவ்வொரு நூறிலும் பத்துக் குப்பம் (Parish) அடங்கி யிருக்கும். ஒவ்வொரு குப்பத்தி லிருந்தும் ஐந்தில் ஒரு பாகத்தின ரைத் தேர்ந்தெடுப்பார்கள். இவர் கள் அந்தத் தொகுதிக்கே தேர்தல் சபையோராக விளங்குவார்கள். ஒவ் வொரு தொகுதியின் தலைநகரிலும் இவர்கள் கூடித் தேசியச் சட்டசபை யோர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். அந்தத் தேர்தலிலிருந்து மற்றொரு தேர்தல் நிகழும். இப்படி வடிகட்டுவ தால் தகுந்த அறிவாளிகள் அரசி யல் அலுவல்களில் ஈடுபடுவார்கள்.

எவரும் ஒரே பதவியில் நீடித் திருக்க முடியாது. அப்படி இருந் தால் ஊழல் புகுந்து அவருக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டுவிடும். பதவி முறை மாற்றத்தை ஹாரிங் டன் வலியுறுத்துகிறார். அரசியலில் மூன்று எல்லைகள் உண்டு. ஆண்டு தோறும் தேர்தல் நிகழும். மூன்றில் ஒரு பாகம் பழைய அங்கத்தினர் விலகிவிடுவார்கள்; புதிய அங்கத் தினர் அந்த இடங்களை வகிக்க வருவார்கள். இந்த நிலையை மிக அழகாக ஹாரிங்டன் சித்திரித்திருக் கிறார். அரும்புகிற நிலை; அரும் பிப் பாதி பழுத்த நிலை; பழுத்து விழுகிற நிலை - இந்த மாதிரி நிலை யைச் சுட்டக் கூடிய பதவி மாற்ற முறை அங்கே சுழன்று வரும்.

இரு சபைத் திட்டத்தின் அவசி யத்தை ஹாரிங்டன் குறிப்பிடுகிறார். பிரபுக்கள் சபை இல்லாது போனால் பொது ஜன சபையில் அறிவொளி அவிந்து போய்விடும்; பொது ஜன சபை இல்லாது போனால், பிரபுக்கள் சபை ஒழுங்காக இராது. பிரபுச் சபையில் வாதப் போர்களும் சர்ச்சைகளும் நிகழும். தீர்மானம் பொதுஜன சபையில் தான் ஏற்படும். இப்போது பொது ஜன முடிவு (Referendum) என்று சொல்லுகிறோமே, அந்தக் கருத்து அப்போதே அவர் மனத்தில் தோன்றியிருக்க வேண்டும். சட்ட சபை (Legislature), நிர்வாக சபை (Executive), நியாய பரி பாலன சபை (Judiciary) இந்த மூன்றையும் அவர் பிரித்து வைத் திருக்கிறார். எல்லாத் துறைகளிலும் தேர்தல் முறையை அஸ்திவார மாகக் கொண்டிருக்கிறார். இந்த முறையில்தான் பாதிரிமார்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும். ராணுவ உத்தியோகஸ்தர்களும் இந்த முறை யில்தான் அரசியலில் புக முடியும்.

மத விஷயத்தில் ஹாரிங்டனுக் குள்ள பொறுப்புணர்ச்சியைக் கவனிக்கலாம். 'தேசீய மத ஆதீனம் (National Church) தேவையில்லை. மனம் போனபடி தம் கொள்கையைப் பின்பற்றலாம்' என்று சிலர் சொல்வார்கள். 'தேசீய மத ஆதீனம் இருந்தாலும், தடையற்ற பொறுப்புணர்ச்சி வேண்டும்' என்று வேறு சிலர் எண்ணுவார்கள். 'தேசீய மத

ஆதீனம் இருக்கவேண்டும்; தடையற்ற பொறுப்புணர்ச்சிக்கு இடமில்லை' என்பார்கள் சிலர். கடைசி இனத்தைச் சார்ந்தவர் ஹாரிங்டன். மத விஷயத்தில் மிதமான கொள்கையை உடையவர். கல்வியைப் பற்றி அவர் கொண்ட கொள்கை நோக்கத் தகுந்தது. கட்டாயப் படிப்பை அவர் வலியுறுத்துகிறார். சர்க்கார் பாடசாலைகளுக்கே மாணவர்கள் செல்லவேண்டும். ஒன்பது முதல் பதினைந்து பிராயம் வரையில் அங்கே அவர்கள் கல்வி பயில வேண்டும். பணம் கொடுக்க இயலாதவர்களுக்கு இலவசமாய்ப் பாடம் கற்பிக்கத் திட்டம் வகுத்திருக்கிறார். ஒரே மகன் உள்ளவன் தன் விருப்பத்தின்படி எந்தப் பாடசாலைக்கு வேண்டுமானாலும் அவனை அனுப்பலாம். பதினைந்தாம் பிராயத்தில் ஏதாவது ஒரு தொழிலில் அமர வேண்டும். அல்லது சட்டப் பள்ளிக்கோ, உயர்தரக் கலாசாலைக்கோ அவன் போகலாம். பதினெட்டுப் பிராயத்துக்கு மேல் அங்கே தங்கக் கூடாது. ஏதாவது ஒரு தொழிலைப் பின்பற்ற வேண்டும். பதினெட்டாம் பிராயத்திலிருந்து முப்பதாம் பிராயம் வரையில் எல்லாருக்கும் கட்டாய ராணுவப் பயிற்சி அளிப்பார்கள். ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் பொது ஜனங்களின் அறிவு வளர்ச்சிக்காகச் சர்ச்சைகள் நிகழும். மாதர் கல்வியைப்பற்றி ஹாரிங்டன் ஒன்றும் சொல்லவில்லை. இது நமக்கு வியப்பாக இருக்கிறது. அவர் கண்ட கனவுகளெல்லாம் அமெரிக்க நாட்டு அரசியலில் அப்படியே உருவாகிவிட்டன. பெட்டி முறைத் தேர்தல் ஜனநாயகத்தின் அஸ்திவாரக் கல்லாக விளங்குகிறது. பொதுஜன முடிவை இப்போதுதான் கையாளப் பார்க்கிறார்கள். 1912-ஆம் வருஷத்தில் தான் பதவி மாற்ற முறையைப் புகுத்த முயன்றார்கள். இவைகளை நோக்கினால் அவர் ஒரு தீர்க்கதரிசி என்று தெரியும். இதில் சில குறைகளும் உண்டு. அடிக்கடி தேர்தல் இருக்குமானால் அரசியல் அலுவல்களுக்குப் பாதகம் ஏற்படலாம்.

அரசியல் கட்டிடத்தை நில வருமானத்தின்மேல் ஹாரிங்டன் அமைத்திருக்கிறார். வருமானம் காலத்துக்கு ஏற்றபடி மாறலாம் அல்லவா? சர்க்கார் பள்ளிகளில் படித்தால் தனி மனிதனின் சுதந்தரம் போய்விடக் கூடும். தனி மனிதனுக்காகச் சர்க்காரா? சர்க்காருக்காகத் தனி மனிதனா? இந்தக் கேள்வி இன்னும் தீர்ந்தபாடில்லை. மனிதனுடைய முன்னேற்றத்தின் பொருட்டே அரசியல் அமையவேண்டும். ஹாரிங்டன் வகுத்த கல்வி முறைத் திட்டம் பாஸிஸ்ட் கொள்கையை வளர்க்கக்கூடிய கழனி யாகிவிடலாம். உதாரணமாக, ருஷிய நாட்டில் தனி மனிதனுக்குச் சுதந்தரம் இல்லாது போயிற்று.

ஹாரிங்டனின் மனக் கண் முன் மிதந்த லட்சியங்கள் புதிய லட்சியங்கள் அல்ல. சிறிய குடியரசில் அமைந்து கிடந்த தத்துவங்களைப் பெரிய தேசத்து அரசியலில் அவர் புகுத்தப் பார்த்தார். தேச நன்மை ஒன்றையே கண்ணும் கருத்துமாய்க் கொண்டார் - அதற்கு எல்லாச் சாதனங்களும் உதவி புரிய வேண்டும். அவர் பல நிபந்தனைகளை வைத்ததன் காரணமும் நமக்குப் புலனாகிறது. மாசற்ற நிலையிலே அரசியல் திகழ வேண்டுமென்பதே அவர் நோக்கம். மோர், பேக்கன், காம்பனல்லா - இந்த மூவரும், தனி மனிதனுக்கு இடம்

கொடுக்கவில்லை. 'பொது அரசியல் வாழ்வுக்காகவே தனி மனிதன் இருக்கிறான். அதில்தான் அவனுக்கும் இன்பம் உண்டு' என்று அவர்கள் கண்டார்கள். கல்வி முறையில் பாஸிஸ்ட் கொள்கையைப் பின்பற்றினாலும், வாழ்க்கையில் தனி மனிதனுடைய நன்மையையே ஹாரிங்டன் நாடினார்.

சுயநலம் மறைய வேண்டும்; மனிதனுக்கு இன்பம் பெருகவேண்டும்; அரசியல் நிலை பெற்று நிற்க வேண்டும் - இந்த மூன்றும் தனி மனிதனுக்குச் சொத்துரிமை இல்லாத நிலைமையில் தானாகவே கைகூடும் என்று மோர் முதலிய மற்றவர்களெல்லாரும் கனவு கண்டார்கள். மோரும் காம்பனல்லாவும் வர்க்க வேற்றுமையை ஒழிக்க முயன்றார்கள். ஆனால், வர்க்க உணர்ச்சி மனித இயல்பில் வேரூன்றி நிற்கிறது. அதை வைத்துக்கொண்டே சரி சமான நிலையை அதில் புகும்படி செய்தார் ஹாரிங்டன். மோர் முதலிய மற்றவர், ஹாரிங்டன், காம்பனல்லா இந்த எல்லாருமே ஒரு தலைவனிடத்தில் அரசாங்கம் தங்கவேண்டுமென்றார்கள். அந்தத் தலைவனைத் தக்க வழியில் செலுத்தச் சபைகளையும் வகுத்தார்கள். இது உண்மையே. ஆனால், ஹாரிங்டன் மட்டுமே அதற்கான பல உபாயங்களைச் சொன்னார். அவர் கண்ட கனவு இப்போது பல துறைகளில் உருவாவதைப் பார்க்கிறோம். இது அவர் பெருமைக்கு ஒரு சான்றாகும்.

நியாயம் வழங்கினால்—

குமாஸ்தா: (முதலாளியிடம்) எனக்கு நியாயமாக எவ்வளவு சம்பளம் கிடைக்கவேண்டுமோ அவ்வளவு கிடைக்கவில்லை, ஐயனே!

முதலாளி: அது எனக்குத் தெரியுமே. ஆனால், அது கிடைத்தால், அதை வைத்துக்கொண்டு நீ ஜீவிக்க முடியாதே என்றுதான் பார்க்கிறேன்.

—'போர்க்குவாய் பாஸ்,' பிரஸ்ஸல்ஸ்.

முன் அறிவிப்பு

ஒருவன்: நான் இன்று உங்கள் வீட்டுக்குச் சாப்பிட வருவேன் என்று உன் மனைவிக்குத் தெரியுமா?

நண்பன்: தெரியுமாவா? நன்றாய்த் தெரியும். இன்று காலையில் இதுபற்றி அவளுக்கும் எனக்கும் அரை மணி நேரம் அல்லவா உக்கிரமான வாதம் நடந்தது!

—'இல்லஸ்டிரேட்டட் வீக்லி'

பொன்னும் மரகதமும் போல

யார் என்ன சொன்னாலும் என்ன செய்தாலும் நீ மாறாதே. யார் என்ன சொன்னாலும் என்ன செய்தாலும் பொன்னும் மரகதமும் தம் நிறத்திலோ அழகிலோ மாறுவதுண்டா?

—மார்க்கஸ் ஒளரேலியஸ்

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

கேட்பவரின் கேள்விகளுக்கு, 'பிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். அவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும்.

கேள்வி: ட்ருமன் மீசை வைத்துக்கொள்ள வில்லையே; ஏன்?

பதில்: ஸ்டாலின் மீசை வைத்துக்கொண்டிருப்பதனால்தான். ட்ருமன் மீசை வைத்துக் கொண்டால் அவரை அமெரிக்காவை விட்டே துரத்திவிடுவார்கள்!

* * *

கே: ஏன் அமெரிக்கர்கள் தவறான வழியில் நடக்கிறார்கள்?

ப: அட்லாண்டிக் சமுத்திரத்தின் அக்கரையிலிருந்து பார்த்தால் அதுதான் நேரான வழியென்று தோன்றுகிறது.

* * *

கே: பெண் ஏன் அழுகிறாள்?

ப: பெண்களின் வயசுக்கு ஏற்றபடி கண்ணீருக்கு அர்த்தம் உண்டு; வயசைச் சொல்லுங்கள்; காரணத்தைச் சொல்கிறேன்.

* * *

கே: வன மகோத்ஸவம் கலையா, விஞ்ஞானமா?

ப: பட்டினிப் பட்டாளத்தைக் கொஞ்ச நேரம் பேசாமல் இருக்கச் செய்யும் ஜாலம் அது.

* * *

கே: சமாதிக்கு அருகில் மலரும் மலர்கள் எதைக் குறிக்கின்றன?

ப: மரணத்தின் மடியிலும் உயிர் வளர்கிறது என்பதை.

கே: பிரிட்டனில் ஆனந்தமான வீடென்றால் அங்கே ஒரு குழந்தையும் நாயும் இருக்கும். இந்தியாவில் எப்படி?

ப: தன் வீட்டில் அழுகிற ஆறு குழந்தைகள்; அடுத்த வீட்டில் குரைக்கிற நாய்.

* * *

கே: அமெரிக்க விதவைகள் எப்படி?

ப: எப்போதும் கல்யாணத்துக்குத் தயாராக இருக்கும் கன்னிகைகள்; வயசு எதுவாயிருந்தாலும் சரி.

* * *

கே: கலையென்பது ஒன்றைப் பார்த்துச் செய்வதுதானா?

ப: எல்லாக் கலைகளுமே நகல்கள்தான். ஏனென்றால், கடவுள் அசல் சரக்கு எதையும் மனிதன் சிருஷ்டிக்கும்படி வைக்கவில்லை.

* * *

கே: 'அதிகமாகப் பயிர் செய்யுங்கள்' என்ற பிரசாரம் என்ன ஆயிற்று?

ப: சீனு, ஆஸ்திரேலியா, பர்மா, அமெரிக்கா ஆகிய இடங்களில் அந்தப் பிரசாரம் நல்ல பலனைத் தந்தது. நம்முடைய பிரசாரத்தின் விளைவாக இத்தனை நாடுகளும் தாம் அதிகமாக விளைத்த உணவுப் பொருளை நமக்கு விற்க ஒப்புக்கொண்டிருக்கின்றன.

* * *

கே: "புகை குடிப்பதை விட்டு விடுங்கள்" என்று டண்டன் சொல்கிறாரே; நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: எனக்குத் தாடியில்லை; அது பற்றிக்கொள்ளுமே என்ற பயமும் இல்லை.

* * *

கே: சிலைகள் எப்போதாவது பேசுவதுண்டா?

ப: சாதாரணமாகப் பெரிய பேச்சாளர்கள் சிறிய சிலைகளாக நிற்கிறார்கள். அவர்கள் நித்திய மௌனம் அடைந்ததையும் விடுதலையடைந்ததையும் பாராட்ட அவர்களுக்கு நாம் சிலை வைக்கிறோம்.

கே: இலையில்லாத மரம் எது?

ப: முன்ஷி மகோத்ஸவஸ்தம்பம்.

* * *

கே: அமெரிக்காவில் பொய்யர் சங்கங்கள் இருப்பதாகச் சொல்கிறார்களே; இந்தியாவிலும் அப்படி ஏதாவது இருக்கிறதா?

ப: நம் ராஜ்யங்களில் மந்திரி சபைகள் இருக்கின்றனவே!

* * *

கே: இந்திய யூனியனின் முதல் ஜனாதிபதியாக வருவதற்கு ராஜேந்திர பிரஸாதிடம் உள்ள தகுதி என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

ப: அவருக்குப் பகைவரே இல்லை; அவரால் யாருக்கும் தீங்கு நேராது.

* * *

கே: சில பேர் ஏன் ஆபாசமான பேச்சை விரும்புகிறார்கள்?

ப: எல்லாருமே ஆபாசப் பேச்சை விரும்புகிறார்கள்; சிலர் அதிகமாக விரும்புகிறார்கள்.

* * *

கே: ஒரு மந்திரிக்கு எப்போது நம் பேச்சுச் சகிக்காமல் போகிறது?

ப: மற்றொரு மந்திரியைப் புகழ்ந்து பேசும்போது.

க்விஸ்

[இதோ சில கேள்விகள்: எங்கே உங்களுக்கு விடை தெரிகிறதா பாருங்கள். பிறகு 80-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்.]

(1) வால் நட்சத்திரத்தின் வால் நமது பூமியைத் தொட்டால் அப்போது என்ன நடக்கும்?

(2) உயரமான மலைமீது இருக்கும் ஒருவர் நேர்த்தியான தேநீர்ப் பானம் தயாரிக்க விரும்புகிறார். அவரால் முடியுமா? முடியாதா?

(3) யானைக்குப் பின்னங்காலில் எத்தனை நகங்கள் உண்டு?

(4) மஹிஷ மண்டலம் (எருமை நாடு) என்று நம் நாட்டில் ஒரு பிரதேசத்துக்குப் பெயர் உண்டு. அது எது?

(5) 'பனையின் நிழலும் நிழலோ........' இது ஒரு தமிழ்ப் பழமொழியின் பாதி. மறு பாதியைப் பூர்த்தி செய்யுங்கள் பார்க்கலாம்.

(6) பிரான்ஸில் ஒரு மன்னனுக்குக் கன்ன மீசை இருந்தது. அவன் ஒரு சண்டைக்குப் போய் விட்டுத் திரும்பினான். என்ன தோன்றிற்றோ; தன் கன்ன மீசையைச் சிரைத்துவிட்டான். ராணிக்குப் பெரிய கோபம் வந்தது. மன்னனிடம் அவளுக்கு இருந்த ஆசை அந்த மீசையோடு போய் விட்டது. அவள் விவாக ரத்துச் செய்துகொண்டாள். தன் சீதனப் பிரதேசங்களைத் திரும்பப் பெற்று, பிரிட்டிஷ் மன்னனுக்குப் பரிசளித்தாள்; அவனையே கல்யாணமும் செய்துகொண்டாள். உடனே பிரிட்டன்மீது பிரெஞ்சு மன்னன் போர் தொடுத்துவிட்டான். இப்படி ஆரம்பித்த யுத்தம் 301 வருஷம் வரைக்கும் ஓயவில்லை. இந்தப் பிரெஞ்சு மன்னன், பிரிட்டிஷ் மன்னன், ராணி மூன்று பேர்களும் யார் என்று சொல்ல முடியுமா?

(7) க, ப, ம என்ற மூன்று பேருடைய சிந்தனை வேகத்தை ஆராய்வதற்காக மனத்தத்துவ சாஸ்திரி ஒருவர் ஒரு பரீட்சை வைத்தார். அந்த மூன்று பேர் நெற்றியிலும் அவர்களுக்குக் காட்டாமல் ஒவ்வொரு பொட்டு வைத்தார். அவர்கள் மூன்று பேரையும் ஒரே காலி அறைக்குள் போகச் சொன்னார். அங்கே ஒன்றும் நிலைக் கண்ணாடி இல்லை. "நீங்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளக் கூடாது. நான் உங்கள் நெற்றியில் வைத்தது சாந்துப் பொட்டாகவும் இருக்கலாம்; சந்தனப் பொட்டாகவும் இருக்கலாம். இரண்டு சாந்துப் பொட்டைக் கண்டவர் அல்லது தம் நெற்றிப் பொட்டு இன்னதென்று நிச்சயமாக ஊகித்தவர் மட்டும் உடனே வெளியே வரலாம்" என்று அவர்களுக்குத் தெரிவித்தார். மூன்று பேரும் கெட்டிக்காரர்கள் தான். ஆயினும், க என்பவர் சற்றுத் தீவிர சிந்தனையாளர். மற்ற இரண்டுபேர் நெற்றியிலும் சந்தனப் பொட்டு இருப்பதை அவர் கண்டார். இரண்டொரு விநாடி யோசித்துவிட்டுச் சட்டென்று வெளியே வந்தார். தம் நெற்றிப் பொட்டு இன்னது என்று சரியாகச் சொல்லிவிட்டார். எப்படி? அது என்ன பொட்டு?

ஆண்டாள் பெருமை

★

மணிப்பிரவாள நடை என்பது தமிழ் வாக்கியங்களிடையே வட சொற்றொடர்களைக் கலந்து எழுதும் பாணி. ஜைனர்கள் முதலில் அந்த நடையில் எழுதினார்கள். பிறகு வைஷ்ணவ நூல்களுக்கு வியாக்கியானம் செய்தவர்கள் மணிப்பிரவாள நடையில் எழுதினர். திவ்யப் பிரபந்தத்தின் பகுதிகளுக்கு வெவ்வேறு உரை உண்டு. திவ்யப் பிரபந்தம் முழுவதுக்கும் உரை எழுதினவர் பெரியவாச்சான் பிள்ளை. அவர் 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பர். பின் வருவது திருப்பாவை வியாக்கியானத்தின் தொடக்கம்.

பெரியவாச்சான் பிள்ளை (திருப்பாவை உரை): தேஹாத்மாபிமானிகளுக்கும் ஆத்மஸ்வரூபம் கைவந்திருக்கும் ரிஷிகளுக்கும் பர்வத பரமாணுவோட்டை வாசி போரும்; ரிஷிகளுக்கும் ஆழ்வார்களுக்கும் அத்தனை வாசி போரும்; ஆழ்வார்களுக்கும் பெரியாழ்வாருக்கும் அத்தனை வாசி போரும்; பெரியாழ்வாருக்கும் ஆண்டாளுக்கும் அத்தனை வாசி போரும். அவர்களில் இவளுக்கு வாசி என்? என்னில், 'அநாதிமாயயா ஸுப்த:' என்கிறபடியே ஸம்ஸாரத்திலே உறங்குகிறவர்களை எழுப்பி, எம்பெருமான் தானே தன்னைக் காட்டக் கண்டார்கள் ஆழ்வார்கள். இவள், தானே சென்று எம்பெருமானை எழுப்பித் தன் குறையை அறிவித்தாளாகையாலே அவர்களிலும் இவள் விலக்ஷணை. 'பால்யாத்ப்ரப்ருதி ஸுஸ்நிக்த:' என்கிறபோலே தொடக்கமே பிடித்து பகவத் குணங்களிலே அவகாஹித்துப் போரும்; புருஷன் புருஷனைக் கண்டு ஸ்நேஹிப்பதிலும் காட்டில் ஸ்திரீ புருஷனைக் கண்டு ஸ்நேஹிக்கை பள்ளமடையாகையாலே. ஆழ்வார்களிற் காட்டிலும் எம்பெருமான் பக்கல் பரமபக்தியுடையளான ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவைக்குக் கருத்து „மார்கழி நீராட என்று ஒரு வியாஜத்தைக் கொண்டு, நோன்பு என்று ஒரு வியாஜத்தாலே எம்பெருமான் பக்கலிலே சென்று, "உனக்கு சேஷமாயிருக்கிற இந்த

ஆத்மா அநர்த்தப்படாதபடி பண்ணி, இதுக்கு ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்தையுங் கொடுத்து, அதுதானும் யாவதாத்மபாவியாம் படி பண்ணியருள வேணும்” என்று அபேக்ஷிக்கிறது.

குறிப்பு: ஆண்டாளுக்கு ஏனைய ஆழ்வார்களுக்கு இல்லாத சிறப்பு உண்டு என்று சொல்ல வருகிறார், வியாக்கியானக்காரர்.

தேகத்தை ஆத்மாவாக எண்ணுபவர்களுக்கும் ஆன்மார்த்தப் பயன் பெற்றவர்களாகிய முனிவர்களுக்கும் உள்ள வேற்றுமை மலைக்கும் பரமாணுவுக்கும் உள்ள வேற்றுமைக்குச் சமானம். முனிவர்களுக்கும் ஆழ்வார்களுக்கும் உள்ள வேற்றுமையும் அத்தகையதே. மற்ற ஆழ்வார்களுக்கும் பெரியாழ்வாருக்கும் உள்ள வேற்றுமையும் அப்படியே. பெரியாழ்வாருக்கும் ஆண்டாளுக்கும் உள்ள வேற்றுமை அதே தன்மையானது. அநாதிகாலமாகப் பந்தத்தில் கிடக்கும் உயிர்களை எழுப்பி நல்லறிவூட்டினதோடு, கடவுள் தானே தன் தரிசனத்தைக் காட்டக் கண்டவர்கள் ஆழ்வார்கள். ஆண்டாளோ தானே சென்று கடவுளை எழுப்பித் தன் குறையை அறிவித்தாள். அதனால் அவள் சிறந்தவள். இளமை தொடங்கியே இறைவனுடைய பண்புகளில் ஈடுபட்டவள். ஆழ்வார்கள் பெருமாளைக் காதலித்தலைக் காட்டிலும் ஆண்டாளாகிய பெண் திருமாலாகிய புருஷனைக் காதலித்தல் இயற்கையும் சிறப்பும் ஆகும். ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவையின் கருத்து வருமாறு: மார்கழி மாதத்தில் நீராடுதல் என்ற சாக்கை வைத்துக்கொண்டு, விரதம் இருப்பதையும் வியாஜமாகக் கொண்டு, ‘உன்னுடைய அடிமையாகிய இந்த ஆத்மா வீணாகாதபடி செய்து இதன் இயற்கைக்கு ஏற்ற தொண்டுகளை அளித்து, அவை எந்நாளும் நிலவும்படி செய்ய வேண்டும்’ என்று வேண்டுதல்.

தீமையை விலக்கு

குற்றங்களைச் சுட்டிக்காட்டிக் கண்டிக்கிற ஒருவரைக் கண்டால், அவரைப் புதையல் இருக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டுகிறவர் என்று கருதி, அவரோடு நட்புக் கொண்டு பழக வேண்டும். அப்படிப்பட்டவரை நண்பராகக் கொண்டு அவருடன் நெருங்கிப் பழகுவது நன்மையே பயக்கும்.

பிறர் தீமை செய்வதைக் கண்டித்துத் தடுத்து அறிவு புகட்டுகிறவர்கள், நல்லவர்களுக்கு அருமையானவர்கள்.

தீய செயல்களை நல்ல செயல்களினாலே மறைத்துவிட்ட ஒருவர், மேகத்திலிருந்து வெளிப்பட்ட வெண்ணிலாவைப் போல விளங்குகிறார்.

தர்மத்தை நல்வழியில் செலுத்தி நடத்தவேண்டும். தர்ம வழியில் ஒழுகுபவர், இந்த உலகத்திலும் மறு உலகத்திலும் சுகம் அடைகிறார்கள். ஆக்கந் தராது தீமை பயக்கும் செயல்களைச் செய்வது எளிது; நன்மையைத் தருகிற நல்ல காரியங்களைச் செய்வது மிகவும் அரிது.

—தம்மபதம்.



[வனசங்கரியின் கோயில்]

கன்னட அம்மன்கள்

எம். பி. ஸரோஜினி

ஊரைக் காக்கும் தேவதைகளாகப் பல வித அம்மன்களை வழிபடுவது தமிழ் நாட்டில் மட்டும் அல்ல; வேறிடங்களிலுங்கூட வழக்கம். கன்னடத்தில் உள்ள சில அம்மன்களையே இங்கேயும் பாருங்களேன்!

கிராம தேவதைகளைப்பற்றிக் கேட்கும்போது நாகரிக மக்களென்று சொல்லிக்கொள்ளும் நமக்கு மிக ஆச்சரியம் உண்டாகிறது; சில சந்தர்ப்பங்களில், "இதென்ன பிரமாதம்!" என்று அலட்சியமாகவும் இருந்து விடுகிறோம். ஆனால் இந்தக் கிராம தேவதை வழிபாடுதான் நம் பழைய வழக்க ஒழுக்கங்களுக்கு அடிப்படை. நாமும் இந்தத் தேவதைகளைப் பூஜிப்பவர்களின் வம்சத்தைச் சேர்ந்தவர்களே என்று தெரிந்தால் இந்த அசிரத்தை ஏற்படாது. தெய்வ பூஜை, வீர பூஜை, பிதிரு பூஜை இவைகளெல்லாம் மனித இயல்புக்கு ஒத்த சடங்குகளே. பூஜைக்குரிய பொருள்களும் பூஜை முறையும் சூழ்நிலைக்கு ஏற்றபடி மாறுபடும். அடர்ந்த காடுகளின் இடையே வசித்த பழங்குடிகள், முதலில் மரம் செடி கொடிகளையே வழிபடமுற்பட்டார்கள். அவைகளிலிருந்து தானே வாழ்க்கைக்கு வேண்டிய பழம், காய், பூ முதலிய பொருள்

காப்பிரைட்: கர்மவீர் (கன்னடம்), ஹுப்ளி.

கள் கிடைக்கின்றன? அவை கோபித்துக்கொண்டு அந்தப் பொருள்களைக் கொடுக்காவிட்டால் என்ன செய்வது என்று பயந்து தான் இப்படி வழிபடத் தொடங்கியிருக்கவேண்டும். பசு, பாம்பு முதலிய பிராணிகளின் வழிபாடும் இப்படித்தான் ஏற்பட்டிருக்கும்.

கன்னட நாட்டின் சில பகுதிகளில் இன்றும் கல்லுக்கு - கல் விக்கிரகங்களுக்கு அல்ல; அசல் கல்லுக்கே-பூஜை நடந்து வருகிறது! முதலில் பயத்தால் ஆரம்பித்த பூஜையில் பின்னால் பக்தியும் புகுந்துகொண்டது.

மும்மூர்த்தி போன்ற வைதிகத் தெய்வங்களைக் கன்னடத்துக் கிராம மக்களுக்குத் தெரிந்திருந்தாலும் அவை வேதாந்திகளின் தெய்வம் என்பது அவர்கள் அபிப்பிராயம். கிராம மக்களுக்குத் தங்கள் கிராம நலமே முக்கியம். வெளிப்பார்வைக்குத் தெரியாத போதிலும் கிராமத்தான் ஒவ்வொருவனும் தன் கிராமத்தைத் தன் குடும்பமாகவேதான் எண்ணுகிறான். கிராமத்துக்கு ஏதாவது ஆபத்து வரும்போது மும்மூர்த்திகளின் உதவி கிடைக்காது என்பதே கிராமத்தார்களின் அபிப்பிராயம். ஆகவே, தம் தம் கிராமங்களை க்ஷேமமாக வைத்துக்கொள்ள இவர்கள் வணங்கும் தெய்வங்களே வேறு. இவையெல்லாம் பெண் தெய்வங்களே. கன்னட நாட்டுக் கிராம தேவதைகளில் முக்கியமானவை இவை: (1) எல்லம்மா; (2) கிடதவ்வா; (3) துரகவ்வா; (4) தியாமவ்வா; (5) மாரியம்மா; (6) கரியவ்வா; (7) ஹூலிகம்மா; (8) ஜீவிதி; (9) ஸெடிகவ்வா.

இவைகளிடம் கிராம மக்களுக்கு விசேஷ பக்தி உண்டு. இந்தத் தேவதைகளைத் திருப்தி செய்வதற்காக அவர்கள் வருஷத்தில் 365 நாளும் எச்சரிக்கையாகவே இருக்கிறார்கள்.

இந்தத் தேவதைகளில் எல்லம்மா எல்லாருக்கும் தாய். இந்தத் தெய்வத்துக்குத்தான் முதல் தாம்பூலம். எல்லம்மாவின் பூஜை, கிரீஸ் தேச எல்லையையும் எட்டியிருந்ததாம். கன்னட நாட்டுக்கும் கிரீஸ் தேசத்துக்கும் இருந்த தொடர்பே இதற்குக் காரணம்.

கிடதவ்வா என்ற தேவதைக்கு வனசங்கரி (வனத்துக்கு க்ஷேமம் தருபவள்) என்ற மற்றொரு பெயரும் உண்டு. மரம், செடி, கொடிகள் தளிர்த்துப் பூத்துக் குலுங்குவது இவள் அருளால் தான். இவள் கோபித்துக்கொண்டு விட்டால் மழை பெய்யாது; பயிர் விளையாது; மனிதர்களுக்கு ஆகாரமே கிடைக்காமல் போய்விடும். இவளைத் திருப்திப்படுத்துவதற்காகப் பசேலென்ற இளந் தளிர்களால் தோரணம் கட்டிக் காணிக்கைகள் செலுத்தி வருஷந் தவறாமல் பக்தியோடு இவளைப் பூஜிப்பார்கள்.

ஜீவிதி என்பவள் சிருஷ்டித் தொழிலை ஏற்று நடத்துபவள். குழந்தைகளின் உயிர் இவள் கையில் இருக்கிறது. பிரசவமான ஒவ்வொரு வீட்டிலும் ஐந்தாம் நாள் இவள் நுழைந்து மேற்பார்வை செய்வாளாம். பிரசவ வீட்டில் ஐந்தாம் நாள் இவளுக்குப் பூஜை நடக்கும். அன்று இவள் வரும் சமயத்தில் வழியில் யாரும் படுத்துக்கொண்டோ நின்றுகொண்டோ இருக்கக் கூடாது. அப்படிச் செய்வது இவளை அவ

மானப்படுத்துவது போல. இவள் வரும் சமயத்தில், பிறந்த குழந்தையைத் தவிர வேறு பெரிய குழந்தைகள் பக்கத்தில் இல்லாதபடி பார்த்துக்கொள்வார்கள்.

துரகவ்வா (துர்க்கை), தியாமவ்வா, மாரியம்மா இவை கன்னட நாட்டின் வெவ்வேறு கிராமங்களில் இருக்கும் ஒரே தேவதையின் பல பெயர்கள் தான். இந்தத் தேவதை அதிருப்தி அடைந்து கோபித்துக்கொண்டால் வாந்தி பேதி, அம்மை, இடி வீழ்ச்சி முதலிய கேடுகள் நேருமாம். ஒவ்வொரு வருஷமும் இவள் உற்சவத்தைப் பலி முதலியவைகளோடு சிறப்பாக நடத்தி இவளைத் திருப்திப்படுத்துவார்கள்; இடிப் பயத்திலிருந்து தப்ப மாரியம்மனைச் சிரத்தையாகப் பூஜிப்பார்கள்.

இந்தத் தேவதைகளுக்குள் கரியவ்வா (கறுப்பாயி) சற்று உக்கிரம் குறைந்தவள். இவளும் ஹுலிகம்மா (புலியம்மா)வும் சிறு குழந்தை சம்பந்தப்பட்ட தெய்வங்கள். கரியவ்வா சிறு குழந்தைகளை வெருட்டுவாளாம். பழங்களையும் காய்களையும் கொண்டுவந்து, குழந்தைகளைச் சுற்றி அந்தப் பழம் காய் முதலியவற்றை இவளுக்கு அர்ப்பணமாக்கிவிடவேண்டும். உடனே, இவள் கோபம் நீங்கிவிடும். குழந்தையும் பயந்து அழுவதை நிறுத்திச் சிரிக்கத் தொடங்கிவிடும். கரியவ்வா குழந்தைகளை இந்தபட்டில் விட்டுவிட்டாலும் ஹுலிகம்மாவுக்குப் பூசை போடாவிட்டால் அவள் குழந்தைகளை விழுங்கியே விடுவாள். அவள் சில சமயம் கிராமத்தார் கனவில் வந்து, "நீங்கள் எனக்குச் சரியாகப் பூஜை போடவில்லை. எனக்குக் கோபம் வந்திருக்கிறது. உங்கள் குழந்தைகள் ஜாக்கிரதை!" என்று பயமுறுத்துவாளாம். உடனே அவர்கள் பேணி முதலிய தின்பண்டங்களைச் செய்து குழந்தை எடைக்கு அவைகளை நிறுத்து எடுத்துச் சென்று குளக்கரையில் வைத்து இந்தத் தேவதையைத் தொழுது வருவார்கள். அவள் கோபம் தணிந்துவிடும்.

ஸெடிகவ்வா (கோபக்காரி), ருத்திரனின் தொழிலாகிய அழித்தலை மேற்கொண்டவள். இவள் திருப்தியாக இருக்கும்வரையில் நோய் நொடி, அகால மரணம் ஒன்றும் வராது; ஆடு மாடுகள் விருத்தி அடையும் என்பார்கள். இவளுக்குக் கோபம் வந்தாலோ ஆபத்துத்தான்! எங்கும் நோயும் சாவும் தாண்டவம் ஆடும். ஆடுமாடுகள் நிறையச் சாகும். ஆகவே, அடிக்கடி இவளுக்கு உற்சவமும் பூஜையும் நடந்துகொண்டே இருக்கும்.

இவர்கள் எல்லாரையும்விடப் பார்வதியே கிராமமக்கள் அதிகமாக விரும்பும் தெய்வம். பாரத நாடு முழுவதும் ஏதோ ஒரு பெயரிலும் உருவத்திலும் இவளுக்குப் பூஜை நடந்துகொண்டுதான் இருக்கிறது. கன்னட நாட்டுக் குடியானவர்கள் இவளைக் கௌரி என்று அழைக்கிறார்கள்.

சரத் பௌர்ணமியில் இவளுக்கு விசேஷமான உற்சவம் நடக்கும். வயல்களில் தினை அறுத்துக் குவித்தவுடன் இவள் வருவாள். இவள், செல்வத்தை நிறையக் கொடுக்கும் தெய்வம். யாரையும் பயமுறுத்தமாட்டாள். இன்றும் கன்னடக் குடியானவர்கள் விதம் விதமான தின்பண்டம் செய்து இவளுக்கு நிவேதனம் செய்கிறார்கள்.

கார்ட்டூன் கதம்பம்



கொரியா முனையில்.

—'ஓரியெண்ட்'

ஒருவர் ஒருவராக—

—'நேஷனல் ஹெரால்டு'



மகாத்மாவுக்குச் சிலை.

—'சங்கர்ஸ் வீக்லி'



இந்திய பட்ஜெட் உருளை.

—'ப்ளிட்ஸ்'

குட்டிச்சாத்தான் வேலே!

★

"தேவை: பிசாசின் வேலே என்று தோன்றும் ஏதாவது தொல்லே உங்களுக்கு நேரிடுகிறதா? உங்கள் அண்டை அயலில் இப்படி அதிசய நிகழ்ச்சி ஏதாவது உண்டா? விஞ்ஞான ரீதியாகக் காரணம் சொல்லி விளக்க முடியாத இந்த மாதிரி மாய ஸம்பவம் ஏதாவது உங்களுக்கு நேரிலே தெரியுமானல் அது பற்றிய விவரங்களே எங்களுக்கு எழுதுங்கள்."

இப்படி ஒரு வேண்டுகோளேக் கொஞ்ச காலத்துக்கு முன் அமெரிக்கா எங்கும் 'அமெரிக்க அஸோஷியேட்டெட் பிரஸ்' என்ற செய்தி ஸ்தாபனம் வெளியிட்டது. புலனுணர்வு இல்லாமலே பொருள்களே அறியக்கூடிய ஞானதிருஷ்டி (எக்ஸ்ட்ரா-ஸென்ஸரி பெர்ஸெப்ஷன்) மனித மனத்துக்கு உண்டு என்று சொல்லும் புதிய விஞ்ஞானிகள் கோஷ்டி ஒன்று அமெரிக்காவில் இருக்கிறது. 'அசாதாரண மனத் தத்துவச் சங்கம்' (ஸொஸைட்டி ஃபார் பாரா-ஸைக்காலஜி) என்று அதற்குப் பெயர். அந்தக் கோஷ்டியினர்தான் மேலே சொன்ன வேண்டுகோளே வெளியிட்டார்கள். இந்த வேண்டுகோளேப் பல அமெரிக்கப் பத்திரிகைகள் வெளியிட்டன. இது வெளியானதுதான் தாமதம்; அசாதாரண மனத் தத்துவச் சங்கத்தின் தலேவருக்குக் கட்டுக் கட்டாய்க் கடிதங்கள் வரத்

வெறும் புரளி அல்ல; உண்மைச் சம்பவம். பிரபலவிஞ்ஞானிகள் நேரிலே ஆராய்ந்தது, இந்தக் 'குட்டிச்சாத்தான்' விஷயம். எந்த விஞ்ஞான விதிகளாலும் விளக்கமுடியாத இதன் ரகசியம் என்ன என்று அவர்களுக்கே முற்றும் புரியவில்லே. 'மகஸீன் டைஜெஸ்ட்' என்பதில் பிராக் என்பவர் எழுதியுள்ள விஷயங்களே ஆதாரமாகக் கொண்டது இது.

தொடங்கின. அமெரிக்காவிலே பிசாசு இல்லாத வீடு ஒன்றே ஒன்றுகூட இல்லேயோ என்று பிரமிக்கும்படி இருந்தது வந்த கடிதங்களின் எண்ணிக்கை!

சாதாரண விஞ்ஞான விதிகளால் விளக்க முடியாத அபூர்வ சக்தி ஒன்று மனத்துக்கு இருக்கிறது என்று மேற்கண்ட சங்கத்தினர் சொல்லுகிருர்கள். இந்தச் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்திருப்போர் சாமானியமானவர்கள் இல்லே. அவர்களில் பலர் சிறந்த கல்விமான்கள்; நூற்றுக்கு இருபத்தொன்பது பேர் 'பி. எச். டி.' பட்டம் பெற்ற நிபுணர்கள். மனத்தின் அசாதாரண சக்தியைப் பற்றிப் பல வருஷங்களாகவே சில நிபுணர்கள் ஆராய்ந்து வருகிருர்கள். இவர்களுடைய ஆராய்ச்சியைப்பற்றி இதுவரைக்கும் கேலி செய்து வந்த மற்ற விஞ்ஞானிகளெல்லாம் இப்போது மெல்ல மெல்ல அதை அங்கீகரித்து வருகிருர்கள். அதன் பலனுக இரண்டு வருஷத்

துக்கு முன் மேலே கண்ட சங்கம் அமைந்தது.

இந்தச் சங்கத்தின் நிபுணர்கள் எந்த விஷயத்தையும் முழு எச்சரிக்கையுடன் ஆராயாமல் ஒப்புக்கொள்வதில்லை. கண்மூடித்தனமாக எதையும் நம்புவதில்லை. மனத்துக்கு ஒருவித ஞான திருஷ்டி (எக்ஸ்ட்ரா ஸென்ஸரி பெர்ஸெப்ஷன்), எந்தக் கருவியின் உதவியும் இல்லாமல் ஜடப்பொருள்களை இயக்கக்கூடிய ஒரு வித அபூர்வ சக்தி (ஸைக்கோ கினெடிக் எனர்ஜி) இந்த இரண்டும் இருப்பதாக இவர்களுடைய ஆராய்ச்சியிலிருந்து புலனாகிறது.

பேயின் செயல் என்று பல பேர் தெரிவித்த விவரங்களை இந்தச் சங்கத்தினர் ஆராய்ந்திருக்கிறார்கள். 'போல்டெர்ஜைஸ்ட்' என்ற 'குட்டிச்சாத்தான்' வேலைபற்றி இவர்கள் ஆராய்ந்திருக்கும் விஷயங்கள்தான் மிகவும் ரசமானவை. எத்தனையோ பேர் வீட்டில் 'குட்டிச் சாத்தான்' குறும்புகள் நடந்திருப்பது உண்மையே என்று இவர்கள் கண்டிருக்கிறார்கள். அவைகளுக்குள்ளே ஒரு சிறுவனைப் பீடித்த 'குட்டிச் சாத்தான்' விஷயம் மிகவும் ஆச்சரியமாய் இருக்கிறது.

அமெரிக்காவில் கொலம்பியா ஜில்லாவின் தலைநகரான வாஷிங்டன் என்னும் இடத்தில் ஒரு சிறுவன் இருக்கிறான். சிரித்த முகம். அழகாய் இருப்பான். அவனுடைய படுக்கையறைப் பரண், சுவர் போன்ற அடைப்புப் பலகை இரண்டையும் யாரோ பிறாண்டுவது போல் ஏதோ சத்தம் ஒரு வருஷத்துக்கு முன்பு ஒரு நாள் அவனுக்குக் கேட்டது. அணிலோ எலியோ என்று நினைத்து, அதை அவன் முதலில் சட்டை செய்யவில்லை. ஆனால், பிறகு அவன் போகுமிடமெல்லாம் அந்தச் சத்தம் அவன் காலடியைத் தொடர்ந்தது. ஓர் உறவினரின் வீட்டுக்குப் போனான். அங்கேயும் அந்தச் சத்தம் அவனுக்குக் கேட்டது. பையனுக்குப் பயம் பிடித்துவிட்டது.

பையனின் தாயும் தந்தையும் தெய்வபக்தி மிகுந்த கிறிஸ்தவர்கள். அவர்களுக்கும் இந்தப் பிறாண்டல் சத்தம் கேட்டது. சர்க்காரின் விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடம் ஒன்றில் யந்திரவேலை செய்பவர் தந்தை. அவருக்கு இதில் சிறிது அவநம்பிக்கை ஏற்பட்டது. ஏதாவது சூது இருக்குமோ என்று எண்ணினார். பரணையே பெயர்த்தெறிந்தார். அதன் பிறகு சத்தம் மேலும் பலமாய்ப் போய்விட்டது. தச்சனை அழைத்தார். பையனுக்கு அறையாகத் தடுத்திருந்த பலகைகளையெல்லாம் பிளந்தெறிந்தார். பின்னும் மோசமாகக் கிளம்பியது சத்தம். தச்சனின் சம்மட்டி அடிச் சத்தத்தை அமுக்கி விட்டது, அந்தக் 'குட்டிச் சாத்தா'னின் பெரிய சத்தம்!

இதுதான் ஆரம்பம். இதற்குப் பிறகு தட்டுமுட்டுச் சாமான்கள் ஆச்சரியமாய் நகர ஆரம்பித்தன. யாரும் தொடாமல் இருக்கும்போதே, பீங்கான் தட்டுக்கள் தாமாகக் கிளம்பி ஜமுக்காளத்தில் விழுந்து நொறுங்கின. இரண்டு நாற்காலிகள் மளமளவென்று நகர்ந்தோடிச் சமையலறைக்குள் புகுந்து சிறுவன் ஜானுக்கு இரண்டு பக்கத்திலும் போய் நின்று அவனை நசுக்க ஆரம்பித்தன. அவன் 'வீச்' என்று அலறினான். சிறுவன் படுத்த கட்டில், இரவிலே ஆடத்தொடங்கியது. சில சமயம் விடிகாலை நாலு மணிவரைக்கும் இப்படி ஆடும்.

தாலாட்டுப் பாடுகிறவர் ஆட்டுகிற மாதிரி அல்ல; பூகம்பம் வந்த மாதிரி தான் ஆடும். கட்டிலை ஆடாமல் பிடித்துக்கொள்ளத் தாயும் தந்தையும் முயன்றார்கள்; பக்கத்து வீட்டாரெல்லாம் வந்து முயன்றார்கள். ஒன்றும் பலிக்கவில்லை.

பெற்றோர் திகிலடைந்தார்கள். பையனுக்கோ தூக்கம் கெட்டு அலமந்து போனான். அண்டை வீட்டாரெல்லாம் பையனை எவனோ தீண்டத்தகாதவனைப் போல் அருவருத்தார்கள். "கடவுளே, என் மகனை ஏன் இப்படி வதைக்கிறீர்?" என்று தாய் புலம்பினாள்.

கடைசியில் சிறுவனை மனநோய் வைத்தியர் ஒருவரிடம் பெற்றோர் அழைத்துச் சென்றார்கள். "பையன் சாதாரணமாய்த் தான் இருக்கிறான். அவனுக்கு எவ்வித மனோவியாதியும் இல்லை" என்று அவர் சொல்லிவிட்டார். அதன்மேல் பையனை லூதர்ன் பாதிரி ஒருவரிடம் கொண்டு சென்றார்கள். அவருக்கு இதில் துளி கூட நம்பிக்கை இல்லை. "பையன் இன்று ராத்திரி என் வீட்டில் இருக்கட்டும். இந்த மூடத்தனத்தை நானே பரீட்சித்துப் பார்க்கிறேன்" என்றார் பாதிரி.

இரவிலே பாதிரி தம் மனைவியை வேறு அறையில் படுக்கச் சொல்லி அனுப்பிவிட்டார். பாதிரி தம்பதியின் இரட்டைப் படுக்கைகளுள் ஒன்றில் சிறுவனும் மற்றதில் பாதிரியும் படுத்தார்கள். விளக்கை அணைக்காமல் பாதி மூடிய கண்ணுடன் சந்தேகத்தோடு சிறுவனையே பார்த்துக்கொண்டிருந்தார் பாதிரி.

பையன் வெகு அமைதியாகப் பிரார்த்தனை செய்தான். பிறகு படுத்தான். மெல்லிய போர்வையை இழுத்துப் போர்த்துக் கொண்டான். சற்று நேரத்தில் ஆழ்ந்து தூங்கிவிட்டான். சில நிமிஷம் கழித்து, கடகடவென்று மகா வேகமாய் ஆடத்தொடங்கியது சிறுவனின் கட்டில்.

பாதிரி துள்ளிக் குதித்தார். சிறுவனை இறுகப் பிடித்துக்கொண்டார். "ஜான், நிறுத்து! இந்த விளையாட்டெல்லாம் இங்கே வேண்டாம்" என்று கர்ஜித்தார்.

என்றாலும் ஆட்டம் நிற்கவில்லை. எவனோ ஒரு ராட்சசன் பிடித்து ஆட்டுவதுபோல முன்னும் பின்னும் ஆடிக்கொண்டேயிருந்தது கட்டில். பாதிரிக்கு ஒன்றும் புரியவில்லை. மிகவும் கனமான சாய்மான நாற்காலி ஒன்றைச் சுட்டிக் காட்டி, "ஜான், இந்தச் சூழ்ச்சியை நான் கண்டுபிடிக்கிற வரைக்கும் இதோ இந்த நாற்காலியில் படுத்திரு" என்றார்.

அதில் பையன் உட்கார்ந்தானோ இல்லையோ, உடனே நாற்காலி அதிவேகமாய் நகர்ந்தோடி, ஒரு பக்கத்துச் சுவர்மீது படார் என்று மோதியது. பாதிரிக்கோ ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. "ஜான், தூக்கு உன் காலை. மோவாயில் முழங்காலை முட்டுக்கொடுத்துக் கொண்டு உட்கார். உன் கைகளை என் கண் பார்க்க உன் கால்களுக்கு மேல் வைத்துக்கொள். உன் தந்திரமெல்லாம் என்னிடம் பலிக்காது" என்றார்.

பாதிரி சொன்னபடியெல்லாம் செய்தான் பையன். ஆனால், நாற்காலி இதையெல்லாம் லட்சியம் செய்யவில்லை. அது மெள்ள அந்தரத்தில் கிளம்பியது. தலைகுப்புறத் தரையிலே விழுந்தது. கீழே உருண்டான் பையன். அவன் முதுகிலே பலத்த அடி.

பையனின் முதுகில் 'ஆல் கொஹால்' என்ற மதுவைத் தேய்த்துவிட்டு, பாதிரி அந்த நாற்காலியில் தாமே உட்கார்ந்தார். உட்கார்ந்தபடி காலைக் கட்டிக் கொண்டு, ஆடி ஆடி அதைச் சாய்க்க முயன்றார். முக்கி முக்கிப் பார்த்தும் அது சிறிதும் அசையவில்லை.

பாதிரி சோர்ந்து போனார். ஒரு குவளை பாலைக் குடித்துச் சிரம பரிகாரம் செய்துகொண்டார். "படுக்கைக்கே போய்ப் படு" என்று பையனுக்குக் கட்டளை போட்டார். பையன் படுத்த ஒவ்வொரு தடவையும் படுக்கை மிக வேகமாய் ஆடியது. பாதிரிக்கே சலித்து விட்டது. படுக்கை விரிப்பையும் ஒரு தலையணையையும் கீழே போட்டார். "இதிலே படு" என்று பையனுக்குச் சொன்னார். பையன் அப்படியே படுத்தான். அவன் மேல் பாதிரி ஒரு போர்வையைப் போர்த்தார்.

பையன் கண்ணை மூடினானோ இல்லையோ, அவனோடு படுக்கை தரதர என்று நகர்ந்து, கட்டிலுக்குக் கீழே நுழைந்துகொண்டது. பையன் திடுக்கிட்டுக் கண் விழித்து, கட்டில் சட்டத்தில் 'டப்' என்று மோதிக்கொண்டான்.

பாதிரிக்குத் தாங்காத ஆத்திரம் வந்தது. பையனின் துணிமணிகளைக் களைந்து, அவனைச் சோதனை போட்டார். வைக்கோல் அடைத்த மெத்தையைக் கதவருகே கொண்டு போய்ப் போட்டார். கம்பிகள் எவையும் பையன் வசம் இல்லையா என்று சோதித்துப் பார்த்துக் கொண்டார். மிக்க வெறுப்புடன், "இனித் தூங்கு!" என்று பையனைப் பார்த்து உறுமினார்.

இந்தத் தடவை படுக்கை பையனோடு கிளம்பி, அறையைச் சுற்றி ஒரு வட்டமிட்டு, பழையபடி கட்டிலுக்குக் கீழே புகுந்துவிட்டது.

பாதிரிக்குச் சகிக்கவில்லை. "போதும், போதும் நான் பட்ட பாடு. வந்து உங்கள் பையனை அழைத்துக்கொண்டு போங்கள்" என்று பாதி ராத்திரியில் பையனின் தகப்பனுக்கு டெலிபோன் செய்தார்.

தகப்பனார் வந்தபோது இரவு மணி நான்கு. பிறகு எல்லாரும் சற்றுத் தூங்கினார்கள்.

இந்த நிலையில் டாக்டர் ரைன், மிஸ்டர் டார்னெல் என்ற இரண்டு விஞ்ஞானிகளுக்கும் பாதிரி சொல்லியனுப்பினார். 'அசாதாரண மனச் சக்தி ஆராய்ச்சிச் சங்க'த்தைச் சேர்ந்த நிபுணர்கள் அந்த இரண்டு பேரும்.

சங்கத்தாருக்கு இந்தப் பையனின் விஷயம் ஒன்றுமே புரியவில்லை. பத்திரிகையில் இதை அவர்கள் விளம்பரம் செய்தார்கள். பையனைக் குட்டிச் சாத்தான் பிடித்திருக்கிறது என்றும் அதை மந்திர தந்திரங்களால் விரட்ட வேண்டும் என்றும் விசித்திரமான பல யோசனைகளை ஜனங்கள் எழுதியனுப்பினார்கள்.

இந்த யோசனை எதுவும் நிபுணர்களுக்குப் பிடிக்கவில்லை. கொஞ்ச காலம் எந்தப் பரிகாரமும் இல்லாமலே சென்றது. பிறகு, பையனின் உடம்பெல்லாம் ஏதோ நிறம் படரத் தொடங்கியது. அதிலே மங்கலாகச் சில எழுத்துக்கள் புலப்பட்டன. அவைகளைக் கூட்டிய போது, 'பையனை செயிண்ட் லூயி என்ற இடத்துக்கு அழைத்துச் செல்' என்ற வாசகம் தென்பட்டது. பையனின் பெற்றோர் அப்படியே அவனை அங்கே கொண்டு போனார்கள்; ஒரு மடத்தில் எழு கிறிஸ்தவப்

பாதிரிகளிடம் அவனை ஒப்படைத்தார்கள். அப்புறமும் கொஞ்ச காலம் இந்த உபத்திரவம் இருந்து கொண்டே யிருந்தது. ஒரு நாள் ஆவேசம் வந்தவன்போல் பையன் குதித்துக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தான். இதற்குப் பிறகு மூன்று வாரம் கழிந்தது. பையனைப் பீடித்த தொல்லை தானாகவே விலகியது. பெற்றோரும் அவனும், 'அப்பாடா!' என்று நிம்மதியடைந்தார்கள். இனி அந்தக் 'குட்டிச் சாத்தான்' வரவே வராதிருக்க வேண்டும் என்று கடவுளை வேண்டிக்கொண் டிருக்கிறார்கள்.

இந்தப் பையனின் ரகசியம் என்ன? அதைப்பற்றித் திருப்திகரமான காரணம் எதுவும் டார்னெல் என்ற நிபுணருக்குப் புரியவில்லை. "ஒன்றுதான் எங்களுக்குத் தோன்றுகிறது. தூரத்திலே உள்ள ஜடப் பொருள்களை (மெட்டீரியல் பாடீஸ்) இயக்கக்கூடிய ஒரு சக்தி, பையனின் உப பிரக்ஞை (ஸப் கான்ஷஸ்) மண்டலத்துக்கு இருக்க வேண்டும். அதனால்தான் இதெல்லாம் நடந்திருக்கிறது" என்றுமட்டும் அவர் சொல்லுகிறார்.

இந்தப் பையனின் வரலாற்றையும் தோற்கடிக்கக்கூடிய எத்தனையோ சம்பவங்களை இந்த நிபுணர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். பலவற்றில் பொய் கலந்திருந்தாலும் சில சம்பவங்கள் உண்மையாக இருக்கின்றன.

இதன் ரகசியம் என்னவாயிருந்தாலும், குட்டிச் சாத்தானை இந்த நிபுணர்கள் வேட்டையாடும் வேலை மிகவும் தமாஷாயிருக்கிறது. இவர்கள் இந்த வேலைக்குச் செல்லும்போது பின்வரும் சாமான்களை எடுத்துச் செல்கிறார்கள்: (1) ஒரு சாக்குக்கட்டி; அதைத் தூள் செய்து தரை எங்கும் தெளித்து வைப்பார்கள்; மனிதரின் சூதாயிருந்தால் அதில் காலடி ஏதேனும் தெரியுமே. அதற்கு இடம் இல்லாமல் செய்வதற்காகத்தான் இந்த யுக்தி. (2) ஒரு கோப்பையில் பாதரசம். அறைக்குள் ஏதாவது அதிர்ச்சி உண்டாகுமானால், அதை இதனால் கண்டு பிடிக்கலாம். (3) சுவர்களில் அசைவு இருக்குமானால் அதைக் கேட்க ஒரு ஸ்டெதாஸ்கோப். (4) ஆவி ரூபங்களாக இருளில் மனிதர் வந்து ஏமாற்றினால், அதைத் திடீரென்று படம் பிடிக்க ஒரு 'காமிரா'வும் 'ப்ளாஷ் லைட்' என்ற விளக்கும். (5) பிசாசின் மேல் விட்டெறிய மெதுவான பாதரட்சை ஒரு ஜோடி. (6) கதவின் சாவித் துவாரம் அல்லது சுவர்களின் விரிசல் மூலமாக யாராவது மின்சாரக்கம்பி முதலியவற்றைச் செலுத்தி ஏமாற்றக் கூடுமே; அதற்கு இடம் இல்லாதபடி அந்த ஓட்டைகளை அடைக்க முத்திரை அரக்கு - இந்தத் தளவாடங்கள் சகிதம் இன்னமும் 'பேய்'களைத் தேடி வருகிறார்கள். 'பேய்' என்றால், மற்றவர் நினைப்பது போன்ற பேயை அல்ல; மனப் பேயை. மனித மனத்துக்கு ஏதோ அபூர்வ சக்தி இருக்கிறது என்று மதித்து, அதன் தத்துவங்களை அறியவே பாடு படுகிறார்கள்.

துன்பப் பறவைகள் உங்கள் தலைமேல் வட்டமிடுவதைத் தவிர்க்கமுடியாது; ஆனால் அவை உங்கள் தலையிலே கூடு கட்டாதபடி தடுத்துக்கொள்ள முடியும். —சீனப் பழமொழி.

நாட்டுத் தொழில்கள் க்ஷீணமடைந்து வர விடுகிறோமே, இது நல்லதா?

அருகி வரும் பட்டு நெசவு

டாக்டர் எச். பரமேசுவரன்

மனிதன் முதல் முதல் காற்று மழையிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள விரும்பினான்; விரைவில் உதிர்ந்து போகும் உலர்ந்த தழை ஆடைகளை உடுக்கத் தொடங்கினான். பிறகு மரவுரி போன்ற இயற்கை ஆடைகளை உடுத்துக்கொண்டான். அப்புறந்தான் மானத்தை மறைப்பதற்கென்றே ஆடை உடுத்தும் வழக்கம் ஏற்பட்டது. இப்போதுகூடச் சில மரங்களிலிருந்து மெத்தென்று மரவுரி ஆடை தயாரிக்கிறார்கள். இதை முதலில் தண்ணீரில் ஊறப்போட்டு, இறுகின இழைகளின் நடுவே அடைத்துக்கொண்டிருக்கும் பொருளை நீக்கிவிட்டு உலர்த்துகிறார்கள். ஆதிகாலத்தில் ரிஷிகள் இதைத்தான் உபயோகித்து வந்தார்கள். இப்போதும் மரவுரி என்றால் ஆசாரமாக இருப்பவர்களுக்கு விசேஷந்தான். மரவுரியில் இயற்கையிலேயே இழைகள் அமைந்திருக்கும் விதத்தைப் பார்த்துத்தான், மனிதனுக்கு ஆடைகளை செய்யவேண்டும் என்று தோன்றியிருக்கும்.

நாகரிகம் முதிர முதிர, பின்னும் மெல்லிதாகவும் மெத்தென்றும் உடுத்த வேண்டுமென்று மனிதனுக்குத் தோன்றிற்று. மெல்லிய இயற்கைப் பொருள்களான பருத்தி, பட்டு இவைகளைக் கொண்டு சற்று உறுதியாகவும் மெத்தென்றும் ஆடை நெய்து உடுத்தான். மனிதன் சிலந்திக் கூட்டைக்கூட ஆடையாக உபயோகிக்க எண்ணியிருக்கலாம். ஆனால் இந்தப் பூச்சிக்கு இரை தேடிப் போடவேண்டியிருக்குமே; என்ன செய்வான்? அதோடு அவ்வளவு நுண்மையான பொருளை நெய்வதும் சிரமமாயிற்றே; இதனால் அதை உபயோகிக்காமல் அப்படியே விட்டுவிட்டான். ஆனால் இப்போது விஞ்ஞானிகள் இதை டெலஸ்கோப் கண்ணாடியில் வரி வகுக்கும் கம்பி (க்ராஸ்-வயர்) ஆகப் போடப் பயன்படுத்துகிறார்கள்.

பட்டுப் புழுவை வீட்டிலேயே ஏராளமாக வளர்க்கலாம். முசுக்கட்டை இலையை விடாமல் 30 நாள் தீனியாகப் போட்டு வந்தால் இந்தப் புழு நன்றாக வளர்ந்துவிடும். பிறகு தானே பட்டு நூல் உற்பத்தி செய்யும். அதைக் கொஞ்சநாள் வரையில் தன்மேல் அப்படியே போர்த்திருக்கும். அப்போதுதான் அது இறக்கை முளைத்துப் பூச்சியாக மாறுகிறது. அதை அப்படியே விட்டால் அந்தக் கூட்டின் ஒரு புறத்தைத் துளைத்துக்கொண்டு அது வெளியே வந்துவிடும்; ஆனால் பட்டுநூல் நீளமாக இல்லாமல் கத்தரித்தது போல் வெட்டுண்டு போய்விடும். இத்தனை நாளில் புழு

மூலம்: திருவாங்கூர் கொச்சின் நியூஸ் (ஆங்கிலம்; 15-1-'51), திருவனந்தபுரம்.

இப்படி வெளிவரும் என்பதை அநுபவத்தினால் மனிதன் தெரிந்து கொண்டிருக்கிறான். இதனால், அது கூட்டிலிருந்து வெளிவருவதற்குள் அதைக் கொன்றுவிடுகிறான். "இது மகாபாவம்" என்று இளகின மனசு உள்ளவர்கள் ஆட்சேபிப்பார்கள்.

இந்தப் புழு ஜதை ஜதையாகச் செய்து வைத்திருக்கும் நுண்ணிய நூலிலிருந்து சில இழைகளை எடுத்துப் பலரகமாக நெய்வதற்கு ஏற்றபடி உறுதியாகத் திரித்து வைக்கவேண்டும். அப்புறம் சிரமமில்லை; சாதாரணப் பருத்தி நூலில் துணி நெய்வது போல் நெய்ய வேண்டியதுதான்.

இதையே வியாபாரமாக நடத்துவதென்றால் இந்த மாதிரி புழுக்களை ஏராளமாக வளர்க்க வேண்டும். ஒவ்வொரு புழுவையும் அக்கறையோடு கவனித்து வர வேண்டும். இதன் முட்டை சின்னதாக இருக்கும். இதற்கு ஏற்ற சீதோஷ்ண அமைப்பில் இதை வைத்தால் இதிலிருந்து கறுப்புப் புழு வெளிவரும். இதற்கு முசுக்கட்டை இலை போட்டு வந்தால் அதைத் தின்று பருத்து விரைவில் வளர்ந்துவிடும். இதற்காக முன்னாலேயே முசுக்கட்டை மரம் ஏராளமாக வளர்த்து வைத்திருப்பது அவசியம். இந்தப் புழு எப்போதும் தின்றுகொண்டே இருக்கும்; அதற்கு அவ்வளவு பசி, பாவம்! தின்னும்போது ஓசை நன்றாகக் கேட்கும். நேரில் பார்த்தால் தான் இதை நம்பத் தோன்றும். இந்தப் புழுவை நன்றாகப் போஷித்தால் 30 நாளில் மடமட வென்று வளர்ந்து மூன்று அங்குல நீளத்துக்கு ஆகிவிடும். ஒவ்வொரு நாளும் இதைச் சுத்தமான தட்டுக்கு மாற்றிக்கொண்டேயிருப்பது அவசியம். கூடவே பச்சுப் பச்சென்று இருக்கும் முசுக்கட்டை இலைகளை அவ்வப்போது அதற்கு உணவாகப் போட்டுக் கொண்டிருக்க வேண்டும். புழுக்கமோ வறட்சியோ இராமல் பல்லி, எறும்புகளுக்கு எட்டாதபடி நிழலில் காற்று வரும் இடமாகப் பார்த்து வைக்கவேண்டும்.

இந்தியாவின் சீதோஷ்ண நிலை பட்டுப் புழு வளர்ப்புக்கு ஒத்து இருக்கிறது. இதனால் வெகு காலமாகவே இந்தியா பட்டுத் துணி நெசவில் சிறந்து விளங்கியது; உள்நாட்டில் பட்டாடை செலவாகி வந்ததோடு வெளிநாட்டுக்கும் ஏற்றுமதியாகி வந்தது. இந்தியாவிலும் சரி, சீனாவிலும் சரி, முசுக்கட்டை பயிரிடுவதற்கு ஏற்ற புன்செய்தான் அதிகம்; தினந்தோறும் முசுக்கட்டை இலையைப் பறிக்கவும் லட்சக்கணக்கான பட்டுப் புழுக்களைக் கவனித்துக்கொள்ளவும், சுமார் ஆயிரம் பூச்சிகளின் கூட்டைப் பிரித்து ஒரு ராத்தல் பட்டுச் சேர்க்கவும் ஏராளமாகத் தொழிலாளிகள் இருக்கிறார்கள். இவ்வளவு வசதி இருந்தும் மற்ற நாடுகளைப்போல் ஏன் இந்தியாவில் இந்தத் தொழில் அவ்வளவாக வளர்ச்சி அடையவில்லை? நமக்குப் பின்னால் தான் ஐரோப்பாவிலும் ஜப்பானிலும் இந்தத் தொழிலை ஆரம்பித்தார்கள். அப்படியிருந்தும் அங்கே வெகுதூரம் இதிலும் இன்னும் பல துறைகளிலும் அவர்கள் முன்னேறி விட்டார்கள். இதற்கெல்லாம் காரணம் இல்லாமல் போகவில்லை.

இந்த மாதிரி தொழில்களில் சிரமப்பட்டு உழைக்க வேண்டியது அவசியம்; சும்மா யந்திர ரீதியில் இதைச் சுலபமாக நடத்திவிடலாம் என்றால் முடியாது. ஒவ்வொரு

விஷயத்தையும் நுணுக்கமாகக் கவனித்துச் செய்ய வேண்டியிருக்கும். நடுவே சில சந்தர்ப்பங்களில் மட்டும் யந்திரங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்; இதனுல் துணியின் தரம் உயர்வதோடு உற்பத்தியும் பெருகும். ஆனல் முழுக்க முழுக்க மனிதனுக்குப் பதிலாக யந்திரத்தையே பயன்படுத்திக்கொள்வதென்பது அவ்வளவு சாத்தியமில்லை. 'இந்தியாவில் சில வருஷ காலமாகப் பட்டுத் தொழில் க்ஷீணித்து வருவதற்குக் காரணம் ஜனங்களுக்குச் சிரமப்பட்டு உழைக்கவோ, சிக்கனமாக வாழவோ விருப்பம் இராததுதான்' என்று தெரிகிறது. ஜப்பானிலும் சீனுவிலும் பிரான்ஸிலும் பட்டுத் தொழில் வளர்ச்சி அடைந்திருப்பதற்குக் காரணம் அங்கே ஜனங்கள் ஒவ்வொரு சிறு விஷயத்தையும் நுணுக்கமாகக் கவனித்துச் சிரமப்பட்டு உழைப்பதுதான். கல்வி கற்று உத்தியோகத்துக்குப் போனுல் சுலபமாகப் பணம் சம்பாதிக்கலாமே என்று நம் நாட்டிலுள்ள விவசாயிகள் வரவர இந்தமாதிரி கஷ்டமான தொழில்களில் ஈடுபடுவதில்லை. இப்படி இருந்தால் அழிவு நிச்சயம்.

வெளி நாட்டிலிருந்து குறைந்த விலைக்குச் சிறந்த சரக்குக் கிடைத்தாலும், ஒவ்வொரு நாட்டிலும் தீவிர தேசாபிமானம் காரணமாக ஜனங்கள் தங்கள் நாட்டுத் தொழிலை ஆதரித்து வருவது சகஜம். உற்பத்தியாகும் பொருள் உள்நாட்டிலேயே விலை போகிறதென்றல் எந்த முயற்சியிலும் நிச்சயமாக வெற்றி கிடைக்கும். நம் நாட்டில் சாதாரணக் கைத்தறியில் பட்டு நூல் நெசவு இன்னும் நடந்துதான் வருகிறது; வைதிகச் சடங்குகளுக்கும் விசேஷங்களின்போதும் நார்மடி போன்ற ஆடை தேவையாக இருப்பதால் அநேகம் பேர் இந்தத் தொழிலில் இன்னும் ஈடுபட்டுத்தான் வருகிருர்கள். பழைய ரீதியானவர்கள் இருக்கிறவரைக்கும் இதற்கு மவுசு இருக்கும். ஆனல் இந்த நாளைய வாலிபர்களுக்கும் பெண்களுக்கும் வெளிநாட்டிலிருந்து வரும் மெல்லிய ஆடைகளின் மேல்தான் ஆசை. அதோடு அவைகளின் விலையும் மலிவு. இதனுல் பின்னுல் என்ன நேரும் தெரியுமா? நம் ஊர் நெசவாளி தன் தொழிலை அடியோடு விட்டுவிடுவான்; தன் மகனையும் பள்ளிக்கூடத்துக்கும் காலேஜுக்கும் அனுப்பிப் படிக்க வைத்து, ஆடம்பர ஜீவனம் நடத்தலாமே என்று சும்மா இருந்துவிடுவான்.

வெளிநாட்டிலிருந்து வரும் நல்ல துணிமணிகள் இன்று நமக்குக் குறைந்த விலைக்குக் கிடைக்கின்றன; இந்தப் போட்டியைச் சமாளிக்க உள்நாட்டிலேயே நம் பட்டாடைகளுக்குக் கிராக்கி ஏற்படும்படி பாடுபடவேண்டும். இதைத் தவிர, பரம்பரைப் பட்டுத் தொழிலுக்குப் பேராபத்தாய்ச் செயற்கைப் பட்டு வேறு வந்துவிட்டது. ரசாயன முறையில் யந்திரத்தின் மூலம் பட்டுப் பூச்சி நூற்பது போலவே இந்தச் செயற்கைப் பட்டு நூல் தயாரிக்கிருர்கள். முதலில் மரப்பட்டை, பருத்தி இவைகளிலிருந்து எடுத்த நாரைச் சில ரசாயனப் பொருள்களைக் கொண்டு திரவமாக்கி நுண்ணிய துவாரங்களின் மேல் தெளிக்கிருர்கள். அப்போது அவைகளின் வழியாகப் பட்டுப் புழு தயாரிப்பதுபோல் மெல்லிய இழைகள் உண்டாகின்றன. இந்த நூல் இழை இயற்கைப் பட்டு நூல் போல்

அவ்வளவு சிறந்தது என்று சொல்ல முடியாவிட்டாலும் தொடர்ந்து வெகு நீளமாக இதை நூற்கலாம்; இழுத்தால் இது சற்று இழுபடக் கூடியதாகவும் மெல்லியதாகவும் இருக்கிறது. நீடித்தும் உழைக்கிறது. அதோடு ரசாயன முறையில் யந்திர மூலம் தயாரிப்பதால் மலிவான விலைக்குத் தர முடிகிறது. இயற்கைப்பட்டின் விலையோ அதிகம்; பணக்காரர்தான் இதை வாங்கி உடுத்த முடியும். கதரும் கை நெசவுத் துணியும் விலை மலிவான மெல்லிய மில் துணியோடு போட்டி போடுகிற மாதிரிதான் இருக்கிறது இந்த விஷயமும்!

இதையெல்லாம் கவனித்தால், "விவசாயிகள் ஓய்வு நேரத்தில் சும்மா இராமல் பட்டுப் புழு வளர்த்து வரலாம்" என்று அளப்பதில் பயனில்லை. கிராமவாசி அப்படிக் கஷ்டப்பட்டு நூல் சேர்த்துக் கைத்தறியில் நெய்து விற்க வந்தாலும் அந்தச் சரக்கு உடனே விலை போய் லாபம் தரும் என்று சொல்வதற்கில்லை. ஆகவே, 'இதைவிடச் சினிமாவுக்குப் போய்ச் சிகரெட்டாவது குடிக்கலாம்' என்று அவனுக்குத் தோன்றிவிடுகிறது.

"வெளிநாட்டிலிருந்து குறைந்த விலைக்குப் பட்டுத் துணி வரவழைப்பதால்தான் நம் நாட்டில் இந்தத் தொழில் க்ஷீணித்து வருகிறது" என்று சொன்னால் அது ஓரளவுக்கு உண்மைதான். ஆனாலும், 'இந்த உஷ்ணப் பிரதேசத்தில் பல இயற்கை வசதிகள் இருந்துங்கூட இந்தமாதிரி பொருள்களை மக்கள் மலிவாக ஏன் உற்பத்தி செய்ய முடியவில்லை?' என்பதுதான் புரியவில்லை. உணவுப் பிரச்னையைப் போல இந்த விஷயத்திலும் பதில் சொல்வது கடினந்தான்.

இந்தியாவில் நாளுக்கு நாள் செயற்கைப் பட்டு ஆலைகள் பெருகி வருகின்றன; இந்தமாதிரி பட்டின் தரமும் இயற்கைப் பட்டுக்குச் சமமாகவே இருக்கிறது; நம் நாட்டு ஏழை விவசாயிகளோ உழைப்பில் கவனம் செலுத்தாமல் எப்போதும் விலை மலிவாகவும் நேர்த்தியாகவும் இருக்கும் பொருள்களையே விரும்புகிறார்கள். இந்த நிலையில் இயற்கைப் பட்டு நெசவுத் தொழில் நீடிக்குமா என்பது சந்தேகந்தான்.

கலையிலே கற்பனை

சில்லறைச் சித்திரகாரன் ஒருவன் ஒரு வீட்டுச் சுவரில் ஏதோ கூலிக்குப் படம் எழுதிக்கொண்டிருந்தான். பிரபல ஓவியர் ஒருவர் இதைக் கண்டார்.

"என்ன, தம்பி, இது என்ன?" என்று கேட்டார்.

"மீன்" என்றான் சித்திரகாரன்.

"என்ன மீன்?"

"சுறா மீன்."

"நீ எப்போதாவது சுறா மீன் பார்த்திருக்கிறாயா?"

"இல்லை, ஸார். ஆனால், அதோ அந்த ஓவியக் கல்லூரியில் பயிலும் பசங்கள் என்ன என்னவோ கந்தர்வர், அப்ஸரஸ் படமெல்லாம் வரைகிறாங்களே; அந்தத் தேவதேவதைகளை அவங்க மட்டும் பார்த்திருக்கிறாங்களோ?"

—'ஆடம்,' ஸ்டாக்ஹோம்.

சங்கங்களைத் தொலைக்க வழி

★

1. கூட்டங்களுக்குப் போகாதே.

2. போனாலும், நேரங் கழித்துப் போ.

3. மழை பெய்தாலும் சரி, வெயில் காய்ந்தாலும் சரி; கூட்டத்துக்குப் போவதைப்பற்றி நினைக்கவே நினைக்காதே.

4. ஒரு கூட்டத்துக்கு நீ போகாததற்குக் காரியதரிசி, தலைவர், மற்ற அங்கத்தினர் இவர்கள்மேல் பழியைப் போடு.

5. ஒரு பொறுப்பையும் ஏற்காதே. நிர்வாகம் புரிவதைவிடக் குறை கூறுவதுதான் சுலபம்.

6. இருந்தாலும் ஒரு பொறுப்புமே தரவில்லை என்று கோபித்துக்கொள். அப்படித் தந்துவிட்டார்களானால் அதை ஒழுங்காக நிறைவேற்றாதே.

7. தலைவர் முக்கியமான ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றி அபிப்பிராயம் கேட்டால், 'சொல்வதற்கு ஒன்றுமில்லை' என்று கையை விரித்துவிடு. ஆனாலும், வெளியில் வந்த பிறகு, அது அது எப்படி எப்படி நடந்திருக்கவேண்டும் என்று எல்லாரிடமும் விமரிசையாகச் சொல்லு.

8. அநாவசியமாக ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போடாதே. மற்றவர்கள் சுயநலமில்லாமல் முழு முயற்சியோடு உழைத்துக் காரியங்களைச் சாதித்தால், 'கோஷ்டி'கள் சேர்ந்து யதேச்சாதிகாரம் புரிவதாகக் கூச்சல் போடு.

9. சந்தாப் பாக்கியைத் தராமல் எத்தனை நாள் முடியுமோ அத்தனை நாள் தள்ளிக்கொண்டு போ. கூடுமானால் தரவே தராதே.

10. புது அங்கத்தினர்களைச் சேர்க்கவேண்டும் என்று கவலைப் படாதே. ஒருவேளை சேர்த்தாலும் உன்னைப்போன்ற ஆளாகவே பார்த்துச் சேர்.

—'தி லாண்டர்ன்', டாரண்டோ.

எவ்வளவு அற்புதமான முறையில் நடக்கின்றன இந்தச் செய்திப் பத்திரிகைகள்!

பிரிட்டிஷ் பத்திரிகைகள்

ஜி. பி. கிளேர்

"இந்த உலகத்துக்குள்ளேயே பெரிய பெரிய தினசரிகள் எங்கள் நாட்டில்தான் உண்டு" என்று ஆங்கிலேயன் எவனாவது சொன்னால், அது வீண் ஜம்பமில்லை. அமெரிக்கத் தினசரிகள் 60 பக்கத்துக்குக் குறையாமல் வெளியாகலாம்; பிரிட்டிஷ் தினசரிகள் 8 பக்கத்துக்கு மேல் போகாமல் இருக்கலாம். அப்படி இருந்தும் பிரிட்டனில் வெளியாகும் 'டெய்லி மிர்ரர்', 'டெய்லி எக்ஸ்பிரஸ்' இந்த இரண்டும் விற்பனையாகிறமாதிரி உலகத்தில் எங்கேயுமே தினசரிகள் அப்படி விலை போவதில்லை. சுமார் 50 லட்சம் ஆங்கிலேயர்கள் பிரதிதினமும் காலையில் 'டெய்லி மிர்ரர்' வாங்கிப் படிக்கிறார்கள். 'டெய்லி எக்ஸ்பிரஸ்' ஏஜெண்டுகளின் கைக்கோ அன்றாடம் 42,50,000 பென்னி வந்து சேர்ந்துவிடுகிறது.

காலையில் வெளியாகும் தினசரிகள் பிரிட்டிஷ் தீவுகளிலுள்ள எல்லா இடங்களிலும் ஒரே சமயத்தில் கிடைக்கும்; நாம் வட ஸ்காட்லந்தில் இருந்தாலும் சரி, இங்கிலாந்தின் தெற்கு மூலையிலுள்ள கார்ன்வாலில் இருந்தாலும் சரி, 'டெய்லி எக்ஸ்பிரஸ்', 'நியூஸ் கிரானிக்கிள்', 'டைம்ஸ்' எதை வேண்டுமானாலும் காலை 8 மணிக்கு வாங்கிப் படிக்கலாம்.

இது எப்படிச் சாத்தியமாயிற்று, தெரியுமா? இதற்கென்று ஏராளமாகப் பணம் செலவிட்டார்கள்; இதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் முன்னதாகவே செய்துகொண்டார்கள். 'நியூஸ் கிரானிக்கிள்', 'டெய்லி கிராபிக்' இவைகளை ஒரே சமயத்தில் இரண்டு இடங்களிலும், 'டெய்லி எக்ஸ்பிரஸ்'ஸை மூன்று இடங்களிலும் அச்சிடுகிறார்கள். லண்டனில் அச்சாகும் பிரதிகள் லண்டன் உள்பட இங்கிலாந்தின் தென்பகுதிக்கும், வடக்கே மான்செஸ்டரில் வெளியாகும் பிரதிகள் இங்கிலாந்தின் வடபகுதிக்கும் ஸ்காட்லந்துக்கும் போகின்றன. 'டெய்லி எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்கோ எடின்பரோவில் தனி அச்சுக்கூடம் ஒன்று இருக்கிறது.

உள்ளூர்பற்றிய செய்திகளைத் தவிர மற்றவையெல்லாம் பெரும்பாலும் லண்டனில் பிளீட் தெருவில் தயாராகின்றன. இந்த இடம் பத்திரிகைகளுக்குப் பெயர் போனது. இங்கிருந்து தனி டெலிபிரிண்டர் மூலம் மான்செஸ்டருக்குச் செய்திகளை அனுப்புகிறார்கள்; கூடவே டெலிபோன் மூலம், "ஜோ! அந்தக் கொலையைப்பற்றிய செய்தியை முதல்பக்கம் வலதுகை மேல்பாகத்தில் மூன்று பத்திகளுக்குப் போடு. இடதுகைப்

காப்பிரைட்: ஸ்வதந்த்ரா (ஆங்கிலம்: 10-2-'51), சென்னை.

பாதியைத் தலைப்புப் போடாமல் காலியாக விட்டுவை. சர்ச்சில் பிரசங்கம் செய்துகொண் டிருக்கிறார். அந்தக் கிழம் பேசி முடித்ததும் அதை அனுப்பி விடுகிறோம்'' என்றெல்லாம் 'லே - அவுட்' (பக்க அமைப்பு) பற்றித் தொடர்ந்து தகவல் அனுப்பிக்கொண்டே யிருப்பார்கள்.

இருந்தாலும் பத்திரிகை லட்சக் கணக்கில் விற்பனையாவதற்கு இந்தமாதிரி தொழில் நுணுக்கங்களைக் கவனித்தால் மட்டும் போதாது. வாசகர்களுக்குப் பிடித்தமான முறையில் அந்த அந்த விஷயத்தை வெளியிட வேண்டும்.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் பிளீட் தெருவில் ஆல்ப்ரெட் ஹார்ம்ஸ்வர்த் என்று ஒரு வாலிபர் பத்திரிகைத் தொழில் நடத்தி வந்தார். இவர்தான் பின்னால் நார்த்க்ளிப் பிரபு என்று பெயர் பெற்று, பிரபல பத்திரிகை முதலாளியானார். இவர் இந்தத் துறையில் முன்னுக்கு வந்ததற்குப் பல காரணம் உண்டு; மனுஷர் கெட்டிக்காரர்; நல்ல உழைப்பாளி. முக்கியமாக ஜனங்களுக்கு எது ரசிக்கும் என்ற விஷயத்தை ஆராய்ந்து அறிந்தவர். 'நூற்றுக்குத் தொண்ணூறு பேர் உலக அரசியலைப்பற்றியோ பெரிய சரித்திர நிகழ்ச்சிகளைப்பற்றியோ அக்கறைப் படுவதில்லை என்ற உண்மையை இவர் தெரிந்துகொண்டார். 'வாழைப்பழத் தோல் சறுக்கிக் கால் உடைந்த பிறகு மிஸ்டர் ஸ்மித் என்ன ஆனார்?' என்று அறியத் தான் பெரும்பாலான ஜனங்கள் ஆவல்படுவார்கள். 'மிஸ்டர் பெவினைப் பார்த்து மிஸ்டர் விஷின்ஸ்கி என்ன சொன்னார்?' என்பதைவிட, 'கோடீசுவரரான இன்ன பிரபுவை மிஸ் ஜோன்ஸ் எவ்விதம் வளையக் கட்டித் தன்னை மணக்கும்படி செய்தாள்?' என்ற விஷயத்தைத் தெரிந்துகொள்வதில்தான் பொது ஜனங்களுக்கு அதிக ஆவல் இருக்கும். தங்களையும் அண்டை அயலில் இருப்பவர்களையும்பற்றிய விஷயங்களைத் தான் அவர்கள் படிக்க விரும்புவார்கள். இந்த மாதிரி விஷயங்களையெல்லாம் ஹார்ம்ஸ்வார்த் தம் தினசரியில் வெளியிட்டு வந்தார். இதனால் அது மற்றப் பத்திரிகைகளை விட ஏராளமாக விலை போயிற்று.

இப்போதும் நிலைமை அதே மாதிரிதான் இருக்கிறது. 'டெய்லி மிர்ரர்' என்ற பத்திரிகையில் பொது ஜனங்களுக்குப் பிடிக்கும் இந்த மாதிரி உள்ளூர் விஷயங்களையே பெரும்பாலும் வெளியிடுகிறார்கள்.

மகாயுத்தத்தின்போதும் அதற்குப் பிறகும் பிரிட்டனில் தினசரிகளுக்கு உபயோகிக்கும் 'நியூஸ் பிரிண்ட்' காகிதம் கிடைப்பதே அருமையாகிவிட்டது. ஆகவே, யுத்தத்துக்கு முன் ஒவ்வொரு தினசரியும் எவ்வளவு விற்றது என்பதைக் கொண்டு, பிரதிகளின் எண்ணிக்கையை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த வேண்டியதாயிற்று. சமீபத்தில்தான் இந்தத் தடையெல்லாம் நீங்கியது; இதனால் மறுபடியும் பத்திரிகைகளுக்குள் போட்டி பலமாக இருக்கிறது. ஒவ்வொன்றும் ஏராளமான பிரதிகள் வெளியிட்டு விற்கும்படி ஏற்பாடு செய்துவருகிறார்கள். பொது ஜனங்களுக்கு விருப்பமான விஷயங்களை முன்னைவிட அதிகமாக வெளியிடுகிறார்கள். அவர்களுக்குப் பிடித்த துணுக்குக் கார்ட்டூன்களும் போட்டோப் படங்களும்

ஏராளமாகப் போட்டுப் பக்கம் பக்க மாக நிரப்புகிறார்கள். ஜனங்களுக் குப் பரபரப்பு ஊட்டும்படி கதைக ளும் செய்திகளும் வெளியிடுகிறார் கள். யுத்தத்துக்கு முன் இதற்காகப் போட்டிப் பரிசுகளெல்லாம் கொடுத்து வந்தார்கள். ஆனால் இப்போதோ, "இதெல்லாம் வாச கர்களுக்கு லஞ்சம் கொடுக்கிற மாதிரியே தவிர இதற்கும் எழுத் துத் திறமைக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. இனிமேல் தினசரிகளில் பரிசுப் போட்டிகளே போடுவ தில்லை" என்று அவைகளின் சொந்தக்காரரெல்லாம் சேர்ந்து தீர்மானித்துவிட்டார்கள். இத னால் எவ்வளவுதான் பணம் படைத்த தினசரியாக இருந்தா லும் பிரயோஜனமில்லை; எதில் நல்ல விஷயம் வெளியாகிறதோ அதுதான் நன்றாக விற்பனை ஆகிறது. இதில் 'நல்ல விஷயம்' எது என்பதில் ஜனங்களுக்குள்ளே அபிப்பிராய பேதம் இருக்கலாம். ஒரு விதத்தில் இப்போது அந்த மாதிரி 'நல்ல விஷயம்' வெளியிடு கிற தினசரி 'டெய்லி மிர்ரர்' தான். இதை ஏராளமான பேர் வாங்கிப் படிக்கிறார்கள் என்றால் அதற்கு மேல் கேட்பானேன்? - இருந் தாலும் அன்றாட உலக நிகழ்ச்சி களைப்பற்றி அக்கறை உள்ளவர்கள் 'டைம்ஸ்' போன்ற உயர்ந்த ரகத் தினசரிகளைத்தான் வாங்கிப் படிப் பார்களே யொழிய 'டெய்லி மிர்ர'ரை வாங்க மாட்டார்கள்.

உலகத்தில் எல்லாரையுமே திருப்திப்படுத்துவது என்பது மிகவும் சிரமமான காரியம். பிரிட்டிஷ் தினசரிக்காரர்களெல் லாரும் சேர்ந்து கூடிய வரைக்கும் பொருத்தம் என்று சொல்லும்படி யான ஒரு வழி வகுத்திருக்கிறார் கள். ஒவ்வொரு தினசரியும் குறிப் பிட்ட ஒரு சாரார் ரசிக்கும்படி விஷயங்களை வெளியிட்டு வரு கிறது. இதனால் பிரிட்டிஷ் தின சரிகளை 'உயர்ந்த ரகம்' (டைம்ஸ், மான்செஸ்டர் கார்டியன்); 'ஆழ்ந்த கருத்துள்ள விஷயங்களை வெளியிடுபவை' (டெய்லி டெலி கிராப், நியூஸ் கிரானிக்கிள்); 'பொது ஜனங்கள் ரசிப்பவை' (டெய்லி எக்ஸ்பிரஸ், டெய்லி மிர்ரர், டெய்லி ஹெரால்டு, டெய்லி மெயில், டெய்லி கிராபிக்) - இப்படி மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

மூன்றும் வகையைச் சேர்ந்த வாசகர்களுக்கு, எடுத்ததும் பொழுது போவதற்கு ஏற்றபடி விஷயம் தமாஷாக இருக்க வேண்டும். தலைப்புகளை மட்டும் ஒரு தரம் பார்த்துவிட்டு 'விளையாட்டுப் பகுதி'யைப் படிக்க ஆரம்பிப்பார்கள். அடுத்த குதிரைப் பந்தயமோ, கால் பந்து மாட்சோ எப்போது நடக்கும் என்று தெரிந்து கொண்டதும் விசேஷப் பகுதியைக் கவனிப்பார்கள். வெளிநாட்டு மக்களின் நகர வாழ்க்கை சம்பந்த மான விவரங்கள், விஞ்ஞானக் கட்டுரைகள், சினிமா விமரிசனம், பிரபலஸ்தர்களைப்பற்றிய ரசமான துணுக்குகள் இவைகளைப் படிப்பார் கள். பிறகு சிலர் குறுக்கெழுத்துப் புதிரை விடுப்பதில் கவனம் செலுத்துவார்கள். இன்னும் சிலர் அன்றாட நிகழ்ச்சிகளைப்பற்றி ஆசிரியரின் கருத்து என்ன என்று தலையங்கத்தைக் கவனிப்பார்கள். 'ஏதோ சில பேர்தான் ஆசிரியர் பத்தியைப் பார்க்கிறார்கள்' என்று அநேகம் பேர் சொல்லுவது வழக் கம். அது ஒரு விஷயத்தில் உண்மையாக இருக்கலாம். "செய்தியைப் பொறுத்த வரை

யில் எந்த விதமான பாதகமும் நேராதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்; ஆனால் அபிப்பிராயத்தைத் தாராளமாக வெளியிடலாம்" என்பதுதான் பத்திரிகைத் தர்மம். ஆனால் நடைமுறையில் அப்படித் தலையங்கத்தோடு ஆசிரியர் அபிப்பிராயம் தெரிவிப்பது நின்று விடுவதில்லை. தினசரிகளில் செய்திகளைக் கூட்டியோ குறைத்தோ இரண்டு விதமாக வெளியிட முடியும். டெலிபிரிண்டர் மூலம் ஒரு நாளைக்கு லட்சக்கணக்கில் சொற்கள் வந்து குவிகின்றன. அவைகளில் தமக்கு வேண்டியதை மட்டும் ஆசிரியர்கள் எடுத்துக் கொள்வார்கள். அப்படியென்றால் தமக்குப் பிடிக்காத விஷயத்தை மறைத்து விடலாம் என்று இதற்கு அர்த்தமில்லை. சில செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து மேலே போட்டுச் சிலவற்றைக் கீழே தள்ளி விடலாம். இந்த விதமாக வாசகர்களின் மனத்தை மாற்றிவிட முடியும். பிரிட்டனில் பொது ஜனங்கள் ரசிக்கும் வகையைச் சேர்ந்த தினசரிகள் மேலே சொன்ன முறையில்தான் நடந்து வருகின்றன; பெரிய பெரிய தலைப்புக்களைப் போட்டு வாசகர்களின் அபிப்பிராயத்தைத் தாம் விரும்பும் விதத்தில் மாற்றி விடுகின்றன. தலையங்கத்தைச் சிந்தாதவர்கள்கூட இதனால் மாறிவிடுவார்கள்.

அன்றாடம் பல கவலைகளுக்கிடையே சற்று ஓய்வு வேண்டும் என்றுதான் பெரும்பாலோர் விரும்புவார்கள். காலையில் எழுந்ததும் எழுந்திராததுமாக உலகத் தொல்லைகளைப்பற்றிய சர்ச்சையெல்லாம் அவர்களுக்கு எதற்கு?

'டைம்ஸ்', 'மான்செஸ்டர் கார்டியன்' இவைகளைப் படித்துப் பழகினவர்கள் ஒரு ரகம். 'டைம்ஸ்' வாசகர்கள் மேல்வாரியாக இராமல் மிகுந்த அக்கறையோடு செய்திகளைக் கவனிப்பார்கள்; பிறகு தலையங்கத்தை நின்று நிதானமாகப் படிப்பார்கள். "பிரிட்டிஷ் சர்க்காரின் கொள்கையையே 'டைம்ஸ்' தலையங்கம் பிரதிபலிக்கிறது" என்று வெளிநாடுகளில் எல்லாம் ஓர் அபிப்பிராயம் உண்டு. பல சந்தர்ப்பங்களில் 'டைம்ஸ்' தலையங்கமும் பின்னால் பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிடும் கொள்கையும் ஒத்துப் போயிருப்பது உண்மைதான். இதனால் அது சர்க்காரின் அபிப்பிராயத்தையே எழுதுகிறது என்று சொல்லிவிட முடியாது.

'டைம்ஸ்' தலையங்கத்துக்குப் பெருஞ் செல்வாக்கு இருக்கிறது. படித்த பிறகு பல பிரமுகர்கள் அதையே தங்கள் அபிப்பிராயமாகக் கொண்டு விடுவார்கள். 'டைம்ஸ்', 'மான்செஸ்டர் கார்டியன்' இந்த இரண்டையும் பிரிட்டனில் மட்டுமன்றி உலகம் முழுதும் அநேகம் பேர் படிக்கிறார்கள்; அவைகளில் வரும் தலையங்கத்தின் சாராம்சத்தை அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், இதாலி முதலிய நாடுகளிலுள்ள தினசரிகளில் வெளியிடுகிறார்கள். பத்திரிகைத் தொழிலிலேயே ஊறியவர்கள் 'டைம்ஸ்', 'மான்செஸ்டர் கார்டியன்' இந்த இரண்டையும் நிச்சயமாகப் படித்தே தீருவார்கள். இந்த இரண்டிலும் வெளியாகும் அபிப்பிராயத்தை நாம் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், உலக நிகழ்ச்சிகளைப் பற்றித் தெரியவேண்டுமானால் இவைகளைப் படிப்பது அவசியம். அவ்வப்போது நேரும் மாறுதல்களைக் கூர்ந்து கவனித்து ஆற அமர யோசித்தே இவை அதைப்

பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கும்; இதுதான் காரணம்.

தினசரிப் பத்திரிகையில் வேலை செய்தாலும் ஓய்வு வேண்டியிருக்குமோ இல்லையோ? அதனால் வாரத்தில் ஒரு நாள் அவை வெளியாவதில்லை. சில நாட்டுத் தினசரிகளில் இதற்கு ஈடு செய்வதற்காக வாரத்துக்குக் காணும்படியான விஷயங்களை விசேஷ அநுபந்தமாக வெளியிடுவார்கள். அதில் ஒரு குறை என்னவென்றால், ஞாயிறன்று ரேடியோ ஒன்றினால் தான் அன்றைச் செய்திச் சுருக்கம் தெரியும்; மற்ற எதுவும் விவரமாகத் தெரியாது. பிரிட்டிஷ் மக்கள் எப்போதுமே செய்திகள் என்றால் ஆவலோடு படிப்பார்கள். அதனால் ஞாயிற்றுக்கிழமை மட்டும் இந்த மாதிரிச் செய்திகளை வெளியிடும் சில பத்திரிகைகள் அங்கே உண்டு. அவைகளில் நிறையப் போட்டோப் படங்களும் ஏராளமான பக்கம் கொண்ட விசேஷப் பகுதிகளும் இருக்கும்.

ஞாயிற்றுக்கிழமை வெளிவரும் செய்தித் தாள்களிலும் முன் சொன்னதுபோல் 'உயர்ந்த ரகம்', 'பொது ஜனங்கள் ரசிப்பவை' என்று இரண்டு வகை உண்டு. 'அப்ஸர்வர்' முதல் வகையையும், 'ஸண்டே டைம்ஸ்' இரண்டாம் வகையையும் சேர்ந்தவை. 'அப்ஸர்வர்' மிகவும் பழைய பத்திரிகை. 1791-இலிருந்து இது வெளியாகிறது. 'டைம்ஸ்' பத்திரிகை மாதிரியே இதுவும் எந்தக் கட்சியிலும் சேராமல் சுதந்தரமாக அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறது. 'டைம்ஸைப்' போலவே எங்கும் இதை வாங்கிப் படிக்கிறார்கள்; பெர்லின், ரியோ டி ஜனீரோ போன்ற வெளியூர்களில் உள்ள பத்திரிகைகளில் இதன் தலையங்கத்தின் சாராம்சத்தை வெளியிடுகிறார்கள். பிரபல பிரிட்டிஷ் பத்திரிகாசிரியர்கள் வேறு இதில் எழுதி வருகிறார்கள்.

'ஸண்டே டைம்ஸ்' கன்ஸர்வெடிவ் கட்சியைச் சேர்ந்த பத்திரிகை; இது கெம்ஸ்லி பிரபு என்ற பெரிய பத்திரிகை முதலாளிக்குச் சொந்தமானது. இவர் மொத்தம் 35 பத்திரிகைகளை நடத்தி வருகிறார். 'ஸண்டே டைம்ஸ்' ஆழ்ந்த விஷயங்களைத் திறம்பட வெளியிடும் பத்திரிகைதான்; இருந்தாலும் ஒரு கட்சியின் சார்பாக அதை நடத்துவதால் 'அப்ஸர்வர்' மாதிரி அதை அப்படிப் பிரபலம் என்று சொல்வதற்கில்லை.

பழமையை ஆதரிக்கும் ரீதியில் இருந்தாலும் சுதந்தரமாக அபிப்பிராயத்தை வெளியிடுவது 'நியூஸ் அவ் தி வொர்ல்டு' என்ற இன்னொரு பத்திரிகை. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இது வெளியாகிறது; 70, 80 லட்சம் பிரதிகளுக்குமேல் விற்பனையாகிறது. ஆனால் இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், யாரைக் கேட்டாலும், 'இதை வாங்கிப் படிக்கிறோம்' என்று ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். அப்படியிருந்தும் 70 லட்சம் பேர் நிச்சயமாக இதில் வெளியாகும் விவாகரத்து, வம்பளப்பு, வழக்கு இவைகளைப்பற்றிய 'ரச'மான தகவல்களைப் படித்து அநுபவிக்கிறார்கள் என்றால் பாருங்கள்!

'ஸண்டே எக்ஸ்பிரஸ்' என்ற பத்திரிகை பீவர்புருக் பிரபுவுக்குச் சொந்தமானது. 'டெய்லி எக்ஸ்பிரஸ்' என்ற பிரபல தினசரிக்கும் இவர்தான் முதலாளி. இது கன்ஸர்வெடிவ்களை ஆதரிக்கிறது. நத்தானியல் குப்பின்ஸ் என்பவர் எழுதும்

பகுதியும் கைல்ஸ் என்பவர் எழுதும் கார்ட்டூன் படங்களும் 'ஸண்டே எக்ஸ்பிரஸ்'ஸிலுள்ள இரண்டு விசேஷ அம்சங்கள். கைல்ஸின் கேலிச் சித்திரத்தில் வரும் ஆண், பெண், குழந்தைகளைப் பார்த்து, பிரிட்டனில் எல்லாருமே வயிறு வெடிக்கச் சிரிப்பார்கள். ஆங்கில மக்களுக்கு முக்கியமாக வேண்டியது தமாஷ்தான்; நத்தானியல் குப்பின்ஸ் இப்படி எழுதுவதில் நிபுணர். இவருக்குச் சம்மானமும் ஏராளமாக வழங்குகிறார்கள். 'ஸண்டே கிராணிக்கிள்' என்பதும் கெம்ஸ்லி பிரபுவைச் சேர்ந்தது தான். 'ஸண்டே டைம்ஸு'க்கும் 'டைம்ஸ்' பத்திரிகைக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை; அதே மாதிரிதான் 'ஸண்டே கிராணிக்கி'ளும் 'நியூஸ் கிராணிக்கி'ளும். முன்னது கன்ஸர்வெடிவ் கட்சிப் பத்திரிகை; பின்னது 'லிபரல்' கட்சிப் பத்திரிகை. ஆனால் கெம்ஸ்லி பிரபு நடத்தும் 'ஸண்டே கிராபிக்'கும் 'டெய்லி கிராபிக்' என்ற தினசரியும் ஒன்றுக்கொன்று சம்பந்தமுள்ளவைதான். மற்றப் பத்திரிகைகளைவிட 'ஸண்டே கிராபிக்'கில் படம் ஏராளமாக இருக்கும். 'டெய்லி மிர்ரர்' இடதுசாரிக் கட்சித் தினசரி. இதன் ஞாயிறு மலராக வெளிவரும் 'ஸண்டே பிக்டோரியல்' என்ற பத்திரிகையிலும் இப்படி ஏராளமாகப் படம் போடுவார்கள்.

'டெய்லி மெயில்' கன்ஸர்வெடிவ் கட்சிச் சார்புள்ள தினசரி. இதையும் 'ஸண்டே டிஸ்பாச்' என்ற பத்திரிகையையும் ராதர்மீர் பிரபு நடத்தி வருகிறார். 'தி பீபிள்' என்ற தொழிற் கட்சிச் சார்புள்ள பத்திரிகையை 'ஓடாம்ஸ்' பதிப்பகத்தார் நடத்தி வருகிறார்கள். 'டெய்லி ஹெரால்டு' தொழிற் கட்சியைச் சேர்ந்த தினசரி. ஞாயிறுதோறும் வெளியாகும் 'ரேனல்ட்ஸ் நியூஸ்' என்ற இடதுசாரிப் பத்திரிகையை ஒரு பிரபல கூட்டுறவுச் சங்கத்தார் நடத்துகிறார்கள். பிரிட்டனில் கைத்தொழில் வளம் மிகுந்த வட பகுதியில் இதற்கு விசேஷ மதிப்பு உண்டு.

அசோக மரம்

அசோக மரம், இந்தியாவில் மேற்கு மலைத்தொடரிலும், கஞ்சம், விசாகபட்டணம் முதலிய இடங்களிலும் பயிராகிறது. மற்ற இடங்களில் தோட்டங்களில் வைத்துப் பயிரிடப்படுகிறது. இதன் பூ ஒரு பூங்கொத்துப்போல் இருப்பதுடன் மனத்தைக் கவரும்படியான பட்டுப்பூச்சி நிறம் போன்ற செம்மை நிறமுள்ளதாய் இருக்கும். இது மாசி, பங்குனி மாதங்களில் புஷ்பிக்கும்.

புஷ்பத்தை நுண்ணிய பொடி செய்து, கால் பலம் எடுத்து ஆழாக்கு நீருடன் கலந்து கொடுக்க, ரத்தபேதி, ரத்தமும் சீதமும் கலந்த பேதி இவை நிற்கும்.

—குணபாடம்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஞானச்சுடரை உலகெலாம் ஒளி வீசச் செய்த இந்த மகா புருஷ ரின் வாழ்வு தூய்மை மிக்கது; வாக்கு வன்மை பொதிந்தது.

விவேகானந்தர்

கண்டெடுத்த மாணிக்கம்: பிருந்தாவனத்திலிருந்து திரும்பி வரும் வழியிலே ரெயில்வே ஜங் ஷன் ஒன்றில் விவேகானந்தர் தங்கினார். களைப்புத் தாங்காமல் அவர் ஒரு மரத்தடியில் சாய்ந்து கொண்டிருந்தார். அப்போது சரத் பாபு என்ற ஸ்டேஷன் மாஸ்டர் அந்தப் பக்கமாக வந்தார். ஸ்வாமி களின் முகத்தில் இருந்த தேஜ ஸைக் கண்டு சரத்பாபு பக்தி பர வசரானார்; பிறகு அவரை வணங் கித் தம் வீடுதிக்கு அழைத்துப் போய்ப் பிட்சை செய்து வைத்தார். அங்கே ஸ்வாமிகள் இரண்டு நாள் தங்கியிருந்தார். மூன்றாம் நாள் அவர் புறப்பட்டுப் போக விடை

பெற்றுக்கொள்ளும்போது சரத் பாபு, "ஸ்வாமி, நானும் சந்நியாசி யாகி உங்களோடு கூடவே வந்து விடுகிறேன். எனக்குத் தீட்சை செய்து வையுங்கள்" என்று கேட் டுக்கொண்டார். ஸ்வாமிகள், "அப்பா, துறவறத்தை அநுஷ்டிப் பது மிகவும் சிரமம். அவசரப் பட்டு இப்படியெல்லாம் செய்து விடாதே" என்று சொல்லிப் பார்த் தார். அப்படியும் சரத் பாபு மன் றாடி வற்புறுத்தவே, ஸ்வாமிகள் அவரைப் பரீட்சிக்க எண்ணினார். "சரி. அப்படியானால் இதை எடுத்துக்கொண்டு போய் ஸ்டே ஷன் கூலிகளிடம் பிட்சை அரிசி வாங்கி வா" என்று தம் கப் பறையைச் சரத் பாபுவிடம் கொடுத்தார். பரமஹம்ஸரும் இப்படித்தான் விவேகானந்தரை முதலில் பரீட்சித்தார். சரத் பாபு வும் கூச்சப்படாமல் ஸ்வாமிகளின் சொற்படியே கூலிகளிடம் போய்ப் பிச்சை எடுத்து வந்து அவரிடம் கொடுத்தார். ஸ்வாமிகள் மகிழ்ச்சி அடைந்து அவரை அன்போடு அணைத்துக்கொண்டார்; அவரைத் தம் முதல் சிஷ்யராக ஏற்றுக் கொண்டு 'ஸதானந்தன்' என்ற

வாழ்வும் வாக்கும்

தீட்சா நாமம் சூட்டினார். அது முதல் சரத் பாபு தம்மை ஸ்வாமிகளின் தொண்டுக்கே அர்ப்பணம் செய்துவிட்டார். பிற்காலத்தில் ஸ்வாமிகள், 'நான் கண்டெடுத்த அரிய மாணிக்கம்' என்று அவரைப்பற்றி எல்லாரிடமும் பெருமையாகச் சொல்லிக்கொள்வது வழக்கம். —(வாழ்வு)

துறவியும் வேந்தனும்: ஒரு சமயம் விவேகானந்தர் ராஜபுதனத்திலுள்ள ஆள்வார் ஸம்ஸ்தானத்துக்குப் போயிருந்தார். அவரை அங்கே ஏழை, பணக்காரர் எல்லாருமே வரவேற்று உபசரித்தார்கள். ஸ்வாமிகள் ஆங்கிலத்திலும் சரி, வடமொழியிலும் சரி, சிறந்த மேதை. அதோடு அவருடைய கம்பீரமான தோற்றமும் வாக்கு வன்மையும் எல்லார் உள்ளத்தையும் கவர்ந்தன. ஆள்வார் திவான் அவருடைய சிஷ்யரானார். அப்போது ஆள்வார் மன்னர் எங்கோ வெளியூருக்குச் சென்றிருந்தார். ஸ்வாமிகளைப்பற்றித் திவான் கடிதம் எழுதி அனுப்பவே மன்னர் அவரைக் காண வந்தார். ஸ்வாமிகளை வணங்கி அவரோடு வெகுநேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்தார். பேச்சுக்கிடையில், "அது சரி, ஸ்வாமிஜீ. நீங்கள் இவ்வளவு படித்துவிட்டு ஏன் இப்படி ஒரு வேலையும் இல்லாமல் வீணாக ஊர் ஊராய் அலைந்துகொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

ஆள்வார் மன்னருக்கு விலங்கு வேட்டை என்றால் மிகவும் பிரியம்; வெள்ளைக்காரர்களோடு சேர்ந்துகொண்டு அடிக்கடி காட்டுப்பக்கம் கிளம்பி விடுவார். இது ஸ்வாமிகளுக்குத் தெரியும்; அதனால் அவர், "மகாராஜா, நான் ஒன்று கேட்கிறேன். அதற்கு முதலில் பதில் சொல்லுங்கள். தாங்களோ ஒரு நாட்டுக்கு மன்னர். எப்போதும் குடிகளுடைய நலத்தைக்

கவனிப்பதே தங்கள் முக்கியக் கடமை. அதை விட்டு வெள்ளைக் காரத் துரைமார்களோடு சேர்ந்து கொண்டு பட்சிகளையும் மிருகங்களையும் ஏன் வேட்டையாடிக் கொண்டு திரிகிறீர்கள்?'' என்று கேட்டு விட்டார்.

அவருடைய துணிச்சலைக் கண்டு சுற்றியிருந்த எல்லாரும், "ஐயோ! இப்படிச் சொல்லிவிட்டாரே இந்த இளஞ் சந்நியாசி! இவருக்கு ஏதாவது தீங்கு நேரப் போகிறதே!" என்று அஞ்சினார்கள். ஆனால் மன்னர் கோபித்துக்கொள்ளவில்லை: சற்று நேரம் வரை யோசனையில் ஆழ்ந்திருந்தார். பிறகு நிதானமாக, "அது எனக்குப் பிடித்திருக்கிறது" என்றார். ஸ்வாமிகளும், "அதே மாதிரி எனக்கும் ஊர் சுற்றுவதென்றால் பிடித்திருக்கிறது" என்று பதில் அளித்தார்.

முதலிலேயே ஸ்வாமிகளின் மேதையைக் கண்டு ஆள்வார் மன்னர் அதிசயித்திருந்தார்; இப்போது அவர் எதற்கும் அஞ்சாத தீரர் என்று அறிந்துகொண்டார். "நான் உங்களை அப்படிக் கேட்டது தவறுதான்" என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். இதனால் சுற்றி இருந்தவர்களுக்கு ஸ்வாமிகளிடத்தில் பின்னும் பக்தியும் மதிப்பும் ஏற்பட்டன; விரைவில் அவருடைய புகழ் நாடெங்கும் பரவியது. —(வாழ்வு)

அருள் வாக்கு: "சிகாகோ முதலிய நகரங்களில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது நான் சில சமயம் ஒரு வாரத்துக்குப் பத்து, பன்னிரண்டு பிரசங்கங்களுக்கு மேல் செய்யவேண்டி யிருக்கும். ஒவ்வொரு தரம் பேசியானதும், 'எல்லாம் சொல்லி முடித்துவிட்டோமே! அடுத்த முறை என்ன பேசுவது?' என்ற கவலை வந்துவிடும்; மண்டையை உடைத்துக் கொண்டு யோசித்துப் பார்ப்பேன். ஆனால் இரவு கண் அயர்ந்ததும் என் பக்கத்தில் யாரோ ஒரு மகாபுருஷர் நின்றுகொண்டு அருமையான பல புதிய விஷயங்களை எடுத்துக் காட்டிப் பிரசங்கம் செய்வது போல் தெளிவாகக் கேட்கும். விழித்துக்கொண்டதும் அதை



யெல்லாம் ஞாபகப்படுத்திக்கொள்வேன்; அடுத்த பிரசங்கத்துக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். எனக்குப் பக்கத்து அறையில் இருப்பவர்கள் மறுநாள் காலை என்னிடம் வருவார்கள்; 'நேற்று இரா முழுதும் யாரோடு பேசிக்கொண்டிருந்தீர்கள்?' என்று விசாரிப்பார்கள். அவர்களுக்கு ஏதோ ஒரு விதமாகப் பதில் சொல்லி அனுப்பிவிடுவேன். இருந்தாலும் இப்போது நினைத்தால்கூட எனக்கு இந்த விஷயம ஆச்சரியமாகத்தான் இருக்கிறது." —(வாக்கு)

ராமாயணம் வெறும் கட்டுக்கதை அல்ல என்பதற்கு இதுவும் ஓர் அத்தாட்சியோ?

ராவணன் தேர்ப்பாதை

★

கிழக்கு இலங்கையின் தலைநகரமான மட்டக்களப்பிலிருந்து சுமார் 67 மைல் தொலைவில் பொத்துவில் என்று ஓர் இடம் இருக்கிறது. இங்கே புராதனச் சின்னங்கள் எத்தனையோ உண்டு. இங்கிருந்து ஒரு மைலில் அறுகாமத்துக் கடலோரம், பழங்காலத்தில் தேர் ஓடிய கல்பாதையின் ஒரு பாகம், அரை மைல் நீளத்துக்குத் தெரிகிறது. இதன் அகலம் சுமார் 20 அடி இருக்கும். அலை மோதும் இடத்திலிருந்து கடலில் 10 அடிக்கு அப்பால் இது ஆரம்பமாகிறது. சற்றுத் தூரம் நீரில் நீந்தினால் போதும்; இந்தப் பாதையில் ஏறி நடக்கலாம். இதை, 'ராவணன் தேர் ஓட்டிய பாதை' என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். இதைச் சுற்றி வெகு தூரத்துக்குக் கல்லே இராதிருக்க இங்கே மட்டும் கல்மேடு இருப்பதால் இது இயற்கையாக அமைந்ததல்ல; கட்டிடமே என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

இலங்கையின் பழைய வரலாற்றைக் கவனித்தால் இதைப்பற்றிய சில உண்மைகள் தெரியும். கி. மு. 400-ஆம் நூற்றாண்டில் ராவணன் என்று ஒரு மன்னன் இலங்காபுரியை ஆண்டு வந்தான். இந்த ஊரைக் கடல் கொண்டு விட்டதாகத் தெரிகிறது. இது திருக்கோயில் என்னும் இடத்துக்குத் தெற்கே இருந்ததாம். திருக்கோயிலுக்கும் பொத்துவிலுக்கும் இடையில்தான் இது இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அந்த ராவண மன்னனின் தேர்ப் பாதையைப் பார்த்துவிட்டு இன்னும் மேலே சென்றால், கடற்கரையோரம் இடிந்துபோன ஒரு கட்டிடம் இருக்கிறது. இதிலுள்ள தூண்களைக் கவனித்தால் ஒரு காலத்தில் இங்கே ஒரு சிறு அரண்மனை இருந்திருக்க வேண்டுமென்று தெரியும். சற்றுத் தொலைவில் பளபளவென்று மின்னும் சலவைக்கல் சிலை ஒன்று தலை போய் விழுந்து கிடக்கிறது. தொட்டால் இது மழுமழு வென்று இருக்கிறது. சில பேர் இதைப் புத்தர் சிலை என்கிறார்கள். சிலர் இதைத் 'துட்ட' கைமுனு என்ற மன்னனுடையது என்கிறார்கள். கி. பி. 161-இல் வாழ்ந்த 'துட்ட' கைமுனு தகப்பனுக்குப் பயந்து இங்கே ஒளிந்திருந்தானும்.

கைமுனு ஒரு சமயம் தகப்பனை கவத்தீசனிடம் போய் எல்லாளன் என்ற தன் பகைவனோடு போர் புரிய அநுமதி கேட்டான். கவத்தீசன் அதற்கு இணங்கவில்லை. மூன்று முறை இப்படிக் கேட்டும் தகப்பன் மறுக்கவே கைமுனுவுக்குக் கோபம் வந்து விட்டது. பெண்கள் அணியும் சில ஆபரணங்களை அவன் தன் தகப்ப

மூலம்: ஸ்ரீ லங்கா (இலங்கைச் சர்க்காரின தமிழ்ப் பத்திரிகை; பிப்ரவரி '51), கொழும்பு.

னுக்கு அனுப்பி வைத்தான். இப்படித் தன்னைத் தன் மகன் அவமரியாதை செய்யவே, கவத்தீசன் கைமுனுவைத் 'துஷ்டன்' என்று திட்டித் தண்டிக்கப் போனான். உடனே 'துட்ட' கைமுனு இங்கே தப்பி ஓடி வந்துவிட்டான். இங்கே அவன் புத்தர் கோயில் ஒன்று கட்டினதாக ஒரு சாரார் சொல்கிறார்கள். இன்னொரு சாரார் தகப்பன் இறந்த பின் 'துட்ட' கைமுனு அநுராதபுரத்துக்குப் போனதாகவும், பிறகு தான் ஒளிந்திருந்ததை நினைவூட்ட இங்கே தன் உருவச் சிலையைச் செய்து வைத்ததாகவும் சொல்கிறார்கள். பலபேர் போரில் மடிந்து போனதற்குத் தானே காரணமாக இருந்ததால் அந்தப் பாவத்தைப் போக்க இங்கே அவன் கோயில் கட்டி வைத்ததாகத் தெரிகிறது. அந்தக் காலத்தில் கூலி கொடுக்காமலே இந்த மாதிரிப் பணிகளை நடத்தி வைப்பது வழக்கம். ஆனால் 'துட்ட' கைமுனு இது பாவம் என்று எண்ணிக் கூலி கொடுத்தே இந்தக் கோயில்களை எழுப்பினானும். கடைசியில் அவன் தன் சமாதியைக் கட்டச் சொல்லி இங்கேயே உயிர் விட்டதாகச் சொல்கிறார்கள். அவன் காலத்தில்தான் சிங்கள அரசியல் நிலைமை சீர்திருந்தியது. அவன் ஒளிந்திருந்த இடத்துக்குப் பழைய வரலாறுகளில் 'கொத்மலை' என்று பெயர். இதுதான் 'பொத்துவில்' என்று திரிந்திருக்க வேண்டும் என்று சிலர் சொல்கிறார்கள்.

தலையில்லாத அந்தச் சிலையைத் தரிசிக்கப் பல இடங்களிலிருந்து யாத்திரிகர்கள் வருகிறார்கள். இந்த மாதிரி பழைய சரித்திரச் சின்னங்களைப் பாதுகாக்காமல் அசட்டை செய்கிறார்களே என்று வருந்த வேண்டியிருக்கிறது.

அவள் நடத்தை

பிரபல முதலாளி ஒருவர் ஒரு நடிகைமீது மோகம் கொண்டார். அவளைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்பினார். அவளும் சம்மதித்தாள். எதற்கும் முன் ஜாக்கிரதையாகத் துப்பறியும் நிபுணர் ஒருவரை அழைத்தார் முதலாளி. நடிகையின் நடத்தை எப்படி என்று ரகசியமாய் விசாரித்து விவரமாய் எழுதிக் கொடுக்கும்படி அவரைக் கேட்டுக்கொண்டார். துப்பறியும் நிபுணரும் அப்படியே விசாரித்து ஓர் அறிக்கை எழுதிக் கொடுத்தார். அதில் கண்டிருந்தது இது தான்:

"இந்த நடிகைக்கு நல்ல கீர்த்தி இருக்கிறது. இவளுடைய சென்ற கால நடத்தையில் ஒரு குற்றமுமில்லை. உத்தமமான பல சிநேகிதர்கள் இவளுக்கு இருக்கிறார்கள். ஆனால் சமீபத்தில் சில நாட்களாக மட்டும் இவள்மீது ஓர் அபவாதம் ஏற்பட்டிருக்கிறது. சந்தேகத்துக்கிடமான ஒரு முதலாளியோடு இவள் இப்போதெல்லாம் அடிக்கடி திரிகிறாளாம். இதைத் தவிர வேறு எந்தக் குற்றமும் இவள்மேல் சொல்வதற்கில்லை."

—'வொர்ல்டு டைஜெஸ்ட்'

டீயின் கதை

முகுல் குப்த

தென்னிந்தியருக்குத்தான் காபியில் பெரிய மோகம். உலகத்தில் பல இடங்களில் பிரபலமாக இருப்பது டீ. அது மட்டும் இல்லை; அது எத்தனை நூற்றாண்டுகளாக எத்தனை நாடுகளிலெல்லாம் புழங்கி வருகிறது தெரியுமா? அந்த வரலாறு மிக ஆச்சரியமானது.

நம்பினால் நம்புங்கள்; நம்பா விட்டால் போங்கள்: இந்த உலகத்தில் பிரதி வருஷமும் 300,000,000,000 கோப்பை டீ சாப்பிடுகிறார்களாம்! விஷயம் அறிந்தவர்கள், "இன்னும் கேட்கப் போனால் இது அவ்வளவு சரியான புள்ளி விவரம் இல்லை. குறைவாகவே மதிப்பிட்டிருக்கிறார்கள்" என்றுகூடச் சொல்லுவார்கள். அதனால் டீ குடிப்பவர்களின் தொகை இன்னுங்கூட அதிகமாகவே இருக்கலாம்.

டீயைப்பற்றிய வரலாறு வெகு ரசமானது. எத்தனை தரம் சொல்லிக் கேட்டிருந்தாலும் அலுப்போ சலிப்போ தட்டாது.

டீயைப்பற்றிய தெளிவான விவரம் முதல்முதல் கி.பி. 350-இல் வெளியாயிற்று. இதை எழுதியவர் லூ யூ என்ற சீனர். டீ எப்படித் தயாரிப்பது என்றும் அதைக் குடிப்பதால் என்ன என்ன நன்மை உண்டென்றும் அவர் எழுதியிருக்கிறார். "டீ உணர்ச்சியைத் தட்டி எழுப்பும். அதனால் அமைதி ஏற்பட்டு மனம் ஒரே விஷயத்தில் லயித்து நிற்கும். அது சிந்தனா சக்தியைத் தூண்டிச் சோம்பலைப் போக்கும். உடலுக்குத் தெம்பு ஊட்டிப் புலனறிவைத் தெளிவுபடுத்தும்" என்கிறார்.

அவருக்குப் பின்னாலும் இப்படி எத்தனையோ அறிஞர்களும் அரசியல் நிபுணர்களும் டீயை ஸ்தோத்திரம் பண்ணியிருக்கிறார்கள். 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த பிரபல ஆங்கில அறிஞர் டாக்டர் ஜான்ஸன். அவர் ஒரு நாள் ஒரே வேளையில், இருபது கோப்பை டீ குடித்துவிட்டு, "சாயங்காலம் டீ குடித்தால் தமாஷாகப் பொழுது போகிறது. இரவில் அதைச் சாப்பிட்டால் ஆறுதல் தருகிறது. காலையில் சாப்பிடும்போது உதயவேளையை வரவேற்க ஆர்வம் ஊட்டுகிறது" என்றார். "டீ குடித்தால் மனச்சாந்தி ஏற்படுகிறது" என்கிறார் லாங்பெல்லோ என்ற பிரபல அமெரிக்கக் கவி. வாட்டர்லூச் சண்டையில் நெப்போலியனை வென்ற பிரிட்டிஷ் வீரர்

காப்பிரைட்; அமிர்தபஜார் பத்திரிகை (ஆங்கிலம்; 11-2-'51), கல்கத்தா.

வெல்லிங்டன் கோமகன். அவர், "டீ சாப்பிட்டால் புத்தி தெளிவடைகிறது. அப்புறம் எந்தவிதமான கவலையும் ஏற்படுவதில்லை" என்று சொல்லியிருக்கிறார்.

ஸிட்னி ஸ்மித் என்ற ஆங்கில அறிஞர், "ஆண்டவன் கொடுத்த வரப்பிரசாதம் டீ. ஆதிகாலத்தில் டீ இல்லாமல் எப்படித்தான் உலகத்தில் வாழ்ந்தார்களோ என்று எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது! நல்ல வேளை, நான் அப்போதே பிறக்காமல் தப்பினேனே!" என்று சந்தோஷப்படுகிறார்.

கிளாட்ஸ்டன் சென்ற நூற்றாண்டில் விக்டோரியா ராணி ஆண்ட போது வாழ்ந்த அரசியல் மேதை. உடம்புக்குப் பெனிஸிலின் மாதிரி மனசுக்கு அமைதி தரும் அருமருந்து டீதான் என்பதை அவர் உணர்ந்தார். "குளிர் நடுக்கினால் டீ சாப்பிடுங்கள்; உடம்பில் உஷ்ணம் ஏறும். உடம்பு வெப்பமாக இருந்தால் டீ குடித்ததும் அது தணியும். சோர்வுற்றிருந்தால் உற்சாகம் ஊட்டும். மனத்தில் பரபரப்பு இருந்தால் அமைதி தரும்" என்று அவர் சொல்லியிருக்கிறார்.

அதே சமயத்தில் டிஸ்ரேலி என்று மற்றோர் அரசியல் நிபுணர் இங்கிலாந்தில் வாழ்ந்து வந்தார். இந்த இருவரும் பரம வைரிகள். கிளாட்ஸ்டன் எதைச் சொன்னாலும் அதை எதிர்ப்பவர் டிஸ்ரேலி; ஆனால் டீயைப்பற்றிக் கிளாட்ஸ்டன் சொன்னதை மட்டும் அவர் அப்படி எதிர்த்ததாகத் தெரியவில்லை!

இரண்டாம் சார்லஸ் மன்னனின் ராணி காதரின். சார்லஸை நாடு கடத்தியிருந்த போது காதரின் அவனை மணப்பது என்று ஏற்பாடாயிற்று. காதரின் தன்னந்தனியே வெளிநாட்டில் கணவனுடன் காலந் தள்ளவேண்டியிருந்தது. அதற்காக நிறைய டீயும் கூடவே எடுத்துக்கொண்டு இங்கிலாந்திலிருந்து புறப்பட்டாளாம்.

காந்திஜீகூட ஏராளமாக டீ சாப்பிடுவாராம். அவரோடு ஒரு நாள் ஹென்ரி போலக் என்ற நண்பர் பேசிக்கொண்டிருந்தார். "என், இந்தப் பழக்கத்தை விட முடியாதா?" என்று சற்றுத் தமாஷாகக் கேட்டார் போலக். காந்திஜீ, "எதைச் சொல்கிறீர்கள் என்று புரியவில்லையே?" என்றார். "டீ சாப்பிட்டால் உங்களுக்கு ஒரு மாதிரி போதையும் விறுவிறுப்பும் ஏற்படவில்லையா?" என்றார் போலக். காந்திஜீ சற்று யோசித்துவிட்டு, "ஆமாம். அது வாஸ்தவந்தான்" என்றார். அன்று முதல் காந்திஜீ டீ குடிக்கும் பழக்கத்தையே அடியோடு விட்டுவிட்டார். ஆனால் மற்றவர்கள் டீ குடிப்பதை அவர் கண்டித்ததில்லை.

மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் ஜப்பானில் 'டீ பிரயாணம்' என்று ஒரு சடங்கு நடத்துவது வழக்கம். உஜி என்ற இடத்திலிருந்து டோக்கியோவுக்கு விலையுயர்ந்த மூன்று பெரிய ஜாடிகளில் டீயை எடுத்துக்கொண்டு ஜனங்கள் கூட்டமாகப் புறப்படுவார்கள். எவ்வளவு பெரிய மனுஷராக இருந்தாலும் சரி, அந்த 'ஒ சா' வுக்கு - கனம் பொருந்திய டீக்கு - வணங்கி மரியாதை செலுத்தியாக வேண்டும்.

பர்மாவில் புதிதாக மணந்த தம்பதிகள் எண்ணெயில் கலந்த டீயை ஒரே கோப்பையிலிருந்து குடிப்பார்கள். இதனால் இருவரும் அந்நி

யோன்னியமாய் வாழ்வார்கள் என்று அங்கே ஒரு நம்பிக்கை.

கி. பி. 10-ஆம் நூற்றுண்டில் ஆண்டு வந்த சீனச் சக்கரவர்த்திக்கு ஜப்பானிலிருந்து காணிக்கையாகத் தங்கப் பேழைகளில் டீ போகுமாம்.

கி. பி. 12 - ஆம் நூற்றுண்டில் ருஷிய மன்னனுக்கு முதல் முதலாகச் சீனுவிலிருந்து டீ கொண்டு வந்து வழங்கினுர்களாம்.

ஐரோப்பாவில் கி. பி. 1610-இல் டச்சுக்காரர்தான் இந்தப் பழக்கத்தைப் புகுத்தினுர்கள். 1650 - இல் அமெரிக்காவிலும் 1657 - இல் இங்கிலாந்திலும் 1675 - இல் கானடாவிலும் 1770-இல் காப்டன் குக் கால் எடுத்து வைத்தபோது ஆஸ்திரேலியாவிலும் டீ குடிக்கும் பழக்கம் ஏற்பட்டது.

மேஜர் புரூஸ் என்பவர் அஸ்ஸாமிலுள்ள சிவசாகர் என்ற இடத்தில் டீ விளைச்சல் உண்டு என்று கண்டார். 1838-இல் கல்கத்தாவிலிருந்து அஸ்ஸாம் டீ இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாயிற்று. பின்னுல் 1873 முதல் இலங்கையிலிருந்தும் போக ஆரம்பித்தது.

இந்தியாவில் டார்ஜீலிங்கில்தான் இப்போது டீ விசேஷமாகப் பயிராகிறது. அங்கே சுமார் 5 லட்சம் ஏக்கர் பரப்புள்ள 1,000 டீத் தோட்டங்கள் உண்டு. தென்னிந்தியாவில் நீலகிரிப் பிரதேசத்தில் 7,000 அடி உயரத்தில் சில டீத் தோட்டங்கள் இருக்கின்றன. உலகம் முழுதும் சேர்ந்து சுமார் 10,000,000,000 ராத்தல் டீ பயிராகிறது. அதில் 4,800,000,000 ராத்தல் டீ இந்தியாவிலிருந்து போகிறது! இதற்கு அடுத்தபடியாக இலங்கையைச் சொல்ல வேண்டும்; அங்கே 3,150,000,000 ராத்தல் டீ பயிராகிறது.

உலகத்துக்குள்ளேயே பிரிட்டனில்தான் டீ குடிப்பவர் ஏராளம். டீ ரேஷன் வருவதற்கு முன் வருஷம் ஒன்றுக்குத் தலைக்குச் சராசரி 9 ராத்தல் டீ செலவாயிற்று; நடுவில் ரேஷன் சமயத்தில் 7.8 ராத்தல் தான் கிடைத்து வந்தது. ஆனுல் மறுபடியும் வாரம் ஒன்றுக்கு 2முதல் 2·5 அவுன்ஸ் அதிகமாகக் கொடுத்து வருகிறுர்கள். அதனுல் இனிமேல் அங்கே பழைய அளவுக்கு டீ சாப்பிட ஆரம்பித்து விடுவார்கள். பிரிட்டனைப் போலவே நியூஜீலந்திலும் ஏராளமான பேர் டீ சாப்பிடுகிறுர்கள். அடுத்தபடியாக ஆஸ்திரேலியாவில் தலைக்கு வருஷம் ஒன்றுக்கு 6·5 ராத்தலும் கானடாவில் 2·8 ராத்தலும் எகிப்திலும் இராக்கிலும் முறையே 2·2 ராத்தலும், ஆப்பிரிகாவில் 3·5 ராத்தலும் செலவாகிறது. ஆனுல் ஐக்கிய அமெரிக்காவில் தலைக்கு ·57 ராத்தல்தான் செலவாகிறது; ஸ்விட்ஜர்லாந்தில் ·39 ராத்தலும் டென்மார்க்கில் ·19 ராத்தலும் பெல்ஜியத்தில் ·14 ராத்தலுந்தான் செலவாகின்றன. இந்தியாவில் தலைக்கு ·27 ராத்தல் செலவாகிறது; இருந்தாலும் 4,300,000,000 ராத்தல் டீ வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாமல் இருந்தால் இன்னும் அநேகர் இங்கு டீ குடிக்கப் பழகியிருப்பார்கள்.

டீ இப்படித்தான் தயாரிக்க வேண்டுமென்று விதி எதுவும் இல்லை. ஒவ்வொரு நாட்டிலும் அவர்களுக்கு மட்டும் தெரிந்த ஒவ்வொரு முறை உண்டு. திபேத்தில் டீயை வெண்ணெயோடு சேர்த்துக் கடைந்து ஒரு நாளுக்குச் சகஜமாக 80 கோப்பைக்குக் குறை

யாமல் சாப்பிடுவார்கள். காஷ்மீர் எல்லையைத் தாண்டினதும் சிவப்புப் பொட்டாஷ், அனிஸீடு என்ற ஒரு வகை வாசனை விதை இவைகளைச் சேர்த்து டீயில் போட்டுக் கொதிக்க வைத்துக் கொஞ்சம் உப்புப் போட்டுச் சாப்பிடுவார்கள். ஷான் ஜாதியார் டீ இலையை வேக வைத்தோ கொதிக்கவைத்தோ உருண்டையாக்குவார்கள். உப்பும் எண்ணெயும் பூண்டும் கருவாடும் தொட்டுக்கொண்டு இவர்கள் டீயை ருசியோடு சாப்பிடுவது வழக்கம். சியாமில் உப்பும் வாசனைப் பொருள்களும் சேர்த்து டீ இலையைத் தின்பது வழக்கம். ஐஸ்லாந்தில் இயற்கை வெந்நீர் ஊற்றுக்களிலிருந்து எடுத்த ஜலத்தில் டீயைக் கரைத்துக் குடிப்பார்கள். தென் அமெரிக்கர் ஐஸில் போட்ட டீயும் வெந்நீரில் வாசனைப் பொருளோடு கொதிக்க வைத்த டீயும் சாப்பிடுவார்கள்.

டாஸ்மேனியாவிலுள்ள ஆப்பிள் தோட்டங்களில் வசிப்போர் ஆறின டீதான் விசேஷம் என்பார்கள். ருஷியர் புது முறையில் டீ தயாரிக்கிறார்கள். அவ்வப்போது சுடச்சுட டீ நிரப்பி வைத்துக்கொண்டேயிருப்பார்கள். பாலோ பாலேடோ சேர்க்காமல் எலுமிச்சந்துண்டமோ ஒரு கரண்டி தித்திப்பு ஜாமோ கலந்து சாப்பிடுவார்கள்; சில பேர் ஒவ்வொரு விழுங்குக்கும் ஒரு சிட்டிக்கை சர்க்கரை வாயில் போட்டுக் கொள்வார்கள். 17-ஆம் நூற்றாண்டுக்கு முன் பிரான்ஸில் டீயில் பால் சேர்த்துச் சாப்பிட யாருக்கும் தெரியாது. இந்தியாவில்கூட இடத்துக்கு இடம் இந்த முறை மாறுபடுகிறது. நம் நாட்டில் பல இடங்களில் வெந்நீரில் பாலும் சர்க்கரையும் சேர்த்து டீ சாப்பிடுவது வழக்கம். இன்னும் சில இடங்களில் வெந்நீரில் வாசனைப் பொருள் சேர்த்துக் காலையிலும் பிற்பகலிலும் சாப்பிடுவார்கள். டீயை எந்த எந்த விதத்தில் தயாரித்தால் பின்னும் ருசிக்கும் என்றுதான் எல்லாரும் பல முறைகளைக் கையாண்டு பார்க்கிறார்கள்.

முன்னெல்லாம் நியூ யார்க்கில் டீ தயாரிப்பதற்கு ஏற்ற நீர் கிடைக்காதாம். "டீத் தண்ணீர்! டீத் தண்ணீர்!" என்று ஓர் ஆள் தெருவில் விற்றுக்கொண்டே வருவானாம். அவன் எப்போது வருவான் என்று ஜனங்கள் காத்துக்கொண்டிருப்பார்களாம். பசிபிக் சமுத்திரத்தின் தெற்குப் பகுதியில் உள்ள டிரிஸ்டான் ட குன்ஹா என்ற தன்னந்தனியான தீவில் வருஷத்துக்கு ஒரு முறைதான் டீ இறக்குமதியாகும். அங்கே மாஜிஸ்திரேட்டுகளோ சிறைக்கூடமோ இல்லை. அங்கே வசிப்பவர்கள் துஷ்டர்களுக்கு விதிக்கும் தண்டனை என்ன தெரியுமா? சுடச்சுட டீ அவர்களுக்குக் கிடைக்காதபடி! செய்வதே! டீ என்றாலே அங்கே எல்லாருக்கும் உயிர் மாதிரி; இதனால் அங்கே யாருமே எந்தவிதமான குற்றமும் செய்வதில்லையாம்.

இந்த உலகத்தில் தண்ணீருக்கு அடுத்தபடியாக மலிவான பானம் டீ ஒன்றுதான். ஒரு ராத்தல் டீ இருந்தால் போதும்; 150 முதல் 200 கோப்பை அளவுக்கு டீ தயார் செய்துவிடலாம். பிரிட்டிஷ் கப்பற்படையைச் சேர்ந்தவர்கள் நாள் ஒன்றுக்கு 2 டன் டீ சாப்பிடுகிறார்கள். நியூஜீலந்துவாசிகளுக்குக் குறைந்தது ஏழு தரமாவது டீ சாப்பிட்டால்தான் திருப்தியாக இருக்கும். ஆனால் ஸஹாராவில் டீயே சாப்பிடுவதில்லை. ஏன் தெரியுமோ? அங்கே தண்ணீர் கிடைத்தால்தானே!

அமெரிக்காவில்கூடப் புராதன
இந்திய நாகரிகம் பரவியிருக்கிறது!

அமெரிக்காவில் இந்தியத் தெய்வங்கள்

எஸ். பி. ஷோம்

அமெரிக்காவைக் கொலம்பஸ் கண்டு பிடித்தபோது, நாகரிகத்தில் சிறந்த பழங்குடிகள் அங்கே வாழ்ந்து வந்தார்கள். மெக்ஸிகோவில் டபாஸ்கோ, சியாபாஸ் இந்தப் பிரதேசங்களிலும் ஹோண்டுராஸின் மேற்குப் பாகத்திலும் குவாடமாலாவிலும் காடு மூடிக் கிடந்தது. சமீபத்தில் இவைகளையெல்லாம் பழங்குடிகள் வெட்டிச் சீர்திருத்திப் பயிரிட்டு வருகிறார்கள். வானளாவிய கோபுரமுள்ள கோயில்கள், அற்புதமான அரண்மனைகள், விசித்திரமான சிற்ப வேலைப்பாடுள்ள பிராகாரம் நிறைந்த மாடமாளிகைகள், வீதிகள் இவையெல்லாம் இங்கே ஆயிரக்கணக்கில் இருந்தன. வெள்ளையர் கால் எடுத்து வைத்தபோது, இங்கே பல கலைகளும் சாஸ்திரங்களும் பயின்ற மக்கள் ஏராளமாக இருந்தார்கள். கெட்டி உலோகம் எதுவும் இங்கே கிடைக்காவிட்டாலும் ஜேட் என்ற ஒருவகை உறுதியான கல்லில் அட்டிகை, வங்கி, காப்பு, காதணி, திருகாணி இப்படிப் பல ஆபரணங்கள் செய்து வந்தார்கள். அதே கல்லை அழகிய பலகையாக்கித் தங்கள் தெய்வம், அரசர் இவர்களின் உருவங்களை அருமையாகச் செதுக்கி வைத்தார்கள்.

மத்திய அமெரிக்காவில் கணேசர்

அற்புதமான மரவேலையும் சன்னகாரை வேலையும் செய்வது, சித்திரம் வரைவது; பல வர்ண இறகுகளைக் கொண்டு இழைப்பு வேலை செய்வது இப்படிப் பல தொழில்களிலும் கணிதம், வான சாஸ்திரம் முதலிய துறைகளிலும் அவர்கள் சிறந்து விளங்கினார்கள். காலக் கணக்கு ஸம்பந்தமாக அவர்கள் கையாண்ட முறை இப்போது உலகில் வழங்கி வரும் கிரிகோரியன் காலண்டரை விடச் சரியானது என்றுகூடச் சொல்லலாம்.

ஆனால் கி. பி. 18 - ஆம் நூற்றாண்டில் வெள்ளையர் அங்கே குடியேற ஆரம்பித்ததும் சுதேசி மக்களான சிவப்பிந்தியரின் கலை,

காப்பிரைட்: மாடர்ன் ரெவ்யூ (ஆங்கிலம்: பிப்ரவரி '51), கல்கத்தா.



மத்திய அமெரிக்காவில் விஷ்ணு

நாகரிகம் எல்லாம் சீரழிந்துவிட்டன. வெள்ளையரின் தொந்தரவு தாங்காமல் சுதேசிகள் எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டுக் கிராமங்களுக்கு ஓடிவிட்டார்கள். நாளடைவில் கானடாவிலிருந்து மெக்ஸிகோ வரையில் வெள்ளையர் ஆதிக்கம் வலுத்தது. அவர்கள் சிவப்பிந்தியரை இழிவாக நடத்த ஆரம்பித்தார்கள். சிவப்பிந்தியர் நின்று நிதானமாகப் பயிரிட்டு நிலத்தைப் பண்படுத்துவதற்குள் வெள்ளையர் வந்து அந்தக் கிராமங்களைக் கொளுத்தி அவர்களை விரட்டி யடித்துக்கொண்டே வந்தார்கள்.

கி. பி. சுமார் 471 முதல் 1530-வரையில் சிவப்பிந்தியரின் நாகரிகம் சிறந்தோங்கி யிருந்தது. சிலான் பாலம் என்ற அவர்களுடைய பழைய நூலில் 'மாயன் ஜாதி மகான்கள்' என்ற பெயர் அடிக்கடி வருகிறது. இவர்கள் அங்கே தெய்வப் பிரதிஷ்டை செய்தார்கள். இந்தக் கோயில்களைச் சுற்றி மக்கள் வாழ்ந்து வந்தார்கள். கி. பி. 1004-இல் சிச்சன் இட்ஸா, உக்ஸ்மல், மாயாபன் என்ற மூன்று சிவப்பிந்திய ராஜ்யங்களும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டன. அதன்படி நாட்டு நிர்வாகத்தை மூன்றும் சரிசமமாகப் பகிர்ந்துகொண்டன. அது முதல் அங்கே அமைதி ஏற்பட்டது; கலைகள் செழித்தோங்கின. கல்லை வெட்டி எடுத்துப் பிரம்மாண்டமான கட்டிடங்கள் எழுப்பினார்கள்; அருமையான கற்சிலைகள் அமைத்து எங்கும் நாட்டினார்கள். ஒவ்வொரு நகரிலும் கிராமத்திலும் கற்கோயில்கள் இருந்தன. ஊர்த் தலைவனின் வீடும் கல்லால் அமைந்ததே. 1201 - இல் இந்த மூன்று ராஜ்யங்களுக்குள்ளும் ஒற்றுமை குலைந்து சச்சரவு மூண்டது. மாயாபன் மன்னனை ஹுன்னக் சீல் என்பவன் இட்ஸான் மன்னனின் மேல் போர் தொடுத்தான். மெக்ஸிகோவில் வாழ்ந்து வந்த டால்டெக் - அஸ்டெக் ஜாதியார் அவனுக்கு உதவினார்கள். இட்ஸான் நாட்டு 'மகான்கள்' தோற்றார்கள். இட்ஸான் மன்னனை சக்க்ஸிப் சக் (செக்கச் சிவந்தோன்) கதி என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. வீரமரணம் எய்தியிருப்பான் என்று தான் எண்ண வேண்டி யிருக்கிறது. அதுமுதல் கி. பி. 1448 வரையில் டால்டெக் - அஸ்டெக் ஜாதியாரே அதை ஆண்டு வந்தார்கள். பிறகு வெள்ளையர் வரவே அவர்கள் அந்தப் பிரதேசத்தை விட்டு ஓட வேண்டியதாயிற்று.

ஆதியில் சிவப்பிந்தியர் குவெட்ஸில்கோட்டில் (இறகு முளைத்த சர்ப்பம்) என்ற தெய்வத்தை வழிபட்டு வந்தார்கள். ஸ்தம்பங்களி

லும் சுவர்களிலும் (நம் நாட்டு நாகராஜனான வாசுகியைப் போன்ற) இந்தத் தெய்வத்தின் உருவத்தைச் செதுக்கி வைத்தார்கள். சிச்சன் இட்ஸாவில் 'காஸ்டில்லோ' (கோட்டை) என்று வழங்கும் கட்டிடம் உண்மையில் கோட்டையேயல்ல; ஒரு கோயில் தான். சுமார் ஓர் ஏக்கர் பரப்புள்ள இடத்தில் இதன் கோபுரங்கள் அஸ்திவார மேடைக்குமேல் 100 அடி உயரத்துக்கு ஓங்கியிருக்கின்றன. மேல் மாடத்துக்குப் போக நான்கு பக்கமும் கைப்பிடியோடு மாடிப்படிகள் அமைந்திருக்கின்றன. மேலே போய்ச் சேரும் வாசலில் நாக வடிவங்கள் செதுக்கியிருப்பதைக் காணலாம்.



குவாடமாலாவில் சிவன்

சிச்சன் இட்ஸாவில் உள்ள மற்றொரு பெரிய கட்டிடம் ஆயிரக்கால் மண்டபத்தோடு கூடிய ஒரு பெரிய கோயில். ஐந்து ஏக்கர் பரப்புள்ள இடத்தில் பல கோபுரங்களும் கூடங்களும் மாடமும் அமைந்தது இந்தக் கோயில். இங்கேயும் நாகராஜனின் உருவம் செதுக்கியிருப்பதைக் காணலாம். மற்றக் கட்டிடங்களில் ஹநுமான் கோயில், வான ஆராய்ச்சிக் கூடம், வீரர் திருக்கோயில், புரோகிதர் சமாதி இவைகளை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும்.

அங்கே ஆழமான குளம் ஒன்று இருக்கிறது. இதற்குப் பலிக்குளம் என்று இப்போதும் பெயர் வழங்குகிறது. தெய்வங்களைத் திருப்தி செய்வதற்காகப் பூஜாரிகள் இளம் பெண்களை உற்சவ முடிவில் அந்தக் குளத்தில் தள்ளிப் பலி கொடுப்பது வழக்கம். இதைக் காணப் பல இடங்களிலிருந்து ஏராளமான மக்கள் வந்து கூடுவார்களாம். அவர்கள் தங்கள் தங்களுக்கு மிகவும் பிரியமான உயர்ந்த பொருள்களை இந்தக் குளத்தில் எறிவார்களாம்.

குவாடமாலாவில் ஹநுமான்

ஜேட் கல்லாலும் பொன்னாலும் செய்த எத்தனையோ மணிகளும் நகை நட்டுக்களும் மரச் சாமான்

களும் இப்படி ஐந்நூறு வருஷ காலம் குளத்தடியில் கிடந்தன. சமீபத்தில்தான் பழம் பொருள் ஆராய்ச்சியாளர் வந்து இவைகளை யெல்லாம் கண்டுபிடித்து வெளியில் எடுத்தார்கள்.

குகல்கன் என்ற நாகராஜன் கோயில் இந்தக் குளத்துக்கு எதிரே தான் இருக்கிறது. அதோடு சேர்ந்தாற்போல் 30 அடி அகலம் 25 அடி உயரம் கால் மைல் நீளத்தில் படிகள் அமைந்த வழி ஒன்று இருக்கிறது. அருகிலேயே விசித்திரமான வேலைப்பாடுள்ள இரண்டு நாட்டிய மேடைகளும் குளத்தங் கரையிலேயே ஒரு சிறு கோயிலும் இருக்கின்றன. இங்கேதான் நரபலிக்குரிய கடைசிச் சடங்குகளைச் செய்து முடிப்பது வழக்கம். அந்தக் குளம் இயற்கையாகவே அமைந்த ஆழமான பொய்கை. சுண்ணும்புக் கல் பூமியானதால் அதன் சுற்றுப்புறம் வெள்ளை வெளேர் என்று இருக்கிறது. இடை இடையே பச்சென்று கொடிகள் படர்ந்திருக்கும். அருகிலுள்ள பிரம் மாண்டமான கட்டிடங்களும், பலியாகப் போகும் இளம் பெண்ணை அழைத்துக்கொண்டு ஆடம்பரமான உடை உடுத்துப் பூஜாரிகள் அங்கே வருவதும், மேலிருந்த படி அவர்கள் ஆழமான அந்தக் குளத்தில் அவளைப் பிடித்துத் தள்ளுவதும் அந்தக் காலத்து மக்களின் மனத்தில் நிச்சயமாகவே உணர்ச்சியை எழுப்பும் காட்சியாகத் தான் இருந்திருக்கும்!

வாஷிங்டனிலுள்ள கார்னெகி ஆராய்ச்சிக் கழகத்தார் சிவப்பிந்தியரின் பழைய நாகரிகச் சின்னங் களைப்பற்றி ஆராய்ந்து பல அரிய விஷயங்களை வெளியிட்டிருக்கிறுர்கள். 1924 - இல் இவர்கள் தான் ஆயிரக்கால் மண்டபத்தைக் கண்டு பிடித்தார்கள். 20 ஏக்கர் பரப்புள் ளது இந்த இடம். இங்கே உள்ள தூண்களில் சில சதுரமாகவும் சில வட்டமாகவும் இருக்கும். சில தூண்களில் சிற்ப வேலை செய்திருப் பதைக் காணலாம். சுற்றிலும் பல சின்னஞ் சிறு கோயில்களும் கூடங்களும் இருக்கின்றன. தூண் களை மொத்தமாகச் சேர்த்து எண்ணினுல் ஆயிரத்துக்கும் மேலேகூடப் போகும். ஆயிரக் கால் மண்டபத்தைமட்டும் எடுத்துக் கொண்டால் அது 5 ஏக்கர் பரப்புக்கு இருக்கும். தரையில் காரை பூசியிருந்த அடையாளத்தை ஓரங் களில் இன்னும் காணலாம். இதன் நடுப் பாகம் காடு மூடிக் கிடந்த தால் சிதைந்து போயிற்று. வடக்குப் பகுதியிலும் மேற்குப் பகுதியிலும் வரிசையாக வட்டத் தூண்களோடு தாழ்வாரம்போல் அமைந்த நீண்ட பிராகாரங்கள் இருக்கின்றன. மற்ற இரண்டு பக்கங்களிலும் கம்பீர மான கட்டிடங்கள் காட்சியளிக் கின்றன. மேற்குப் பக்கப் பிராகாரத் தில் விசேஷமாகக் குறிப்பிட எது வும் இல்லை. பிராகாரம் கோயிலை விட ஏழு அடி உயரமான இடத்தில் அமைந்திருக்கிறது. இதற்குக் கீழே தான் வடபுற வாசல் இருக்கிறது. அதன் இரண்டு கோடியிலும் சிற்ப வேலையைக் காணலாம். கிழக்குப் பக்கத்தின் இரண்டு கோடியிலும் ஹநுமானின் உருவமும் மேற்குப் பக்க வாசற்காலில் பல வகைக் கிளி களின் உருவமும் செதுக்கியிருக் கிறுர்கள். வட்ட வடிவுள்ள கேட யம், இன்னும் பல வகை மிருகங் கள், பட்சிகள் இந்த மாதிரி உரு வங்களையும் அங்கே காணலாம். முன் பக்கம் எட்டுத் தூண்கள் அமைந்திருப்பதால் ஒன்பது வாசல்

இருப்பதுபோல் தோன்றுகிறது. மொத்தத்தில் எல்லாத் தூண்களும் சுண்ணும்புக் கல்லால் பெரிய அளவில் ஒரே மாதிரி அமைந்திருக்கின்றன. பின்புறம் உள்ள நடுநாலு தூண்களில் மட்டும் விசித்திரமான சிற்ப வேலைப்பாடுகளைக் காணலாம். செதுக்கு வேலை செய்த ஆசனம் ஒன்றும் இங்கே இருக்கிறது. கேடயம் போன்ற சிற்ப அமைப்பை இங்கே விசேஷமாகக் காணலாம். இரண்டு பக்கமும் கடை வாசற்படிக்கு மேலே சுவரோடு ஒட்டினுற்போலப் போர் வீரர்களின் உருவங்கள் அமைந்திருக்கின்றன. இறகுகளால் ஆன ஆடம்பரமான உடை உடுத்து, தலைப்பாகையில் இறகு செருகிப் பல ஆபரணங்கள் அணிந்திருப்பதுபோல் அவைகளைச் செதுக்கியிருக்கிறார்கள். அவைகளின் இடது கையில் இறகு வைத்த ஈட்டியும் வலது கையில் சக்கரமும் இருக்கின்றன. சில இடங்களில் நாகங்கள் இணைந்திருப்பதுபோல் செதுக்கியிருக்கிறது. ஒரு கோடியில் ஒன்றின் தலையையும் இன்னென்றின் வாலையும், மறுகோடியில் ஒன்றின் வாலையும் இன்னென்றின் தலையையும் காணலாம். இங்கேயுள்ள ஒவ்வொரு சிற்பத்துக்கும் சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம் இப்படிப் பல வர்ணம் தீட்டியிருப்பதாக எண்ணிப் பார்த்தால் அந்தக் காட்சி அற்புதமாகத்தான் இருக்கும்!

இங்கே உள்ள குகல்கன் என்ற நாகராஜனின் உருவம் மதுரை ஆயிரக்கால் மண்டபத்தில் இருக்கும் நாக உருவம் மாதிரியே இருக்கிறது. மத்திய அமெரிக்காவிலுள்ள இன்னும் சில தெய்வ உருவங்கள் நம் கணேசர், விஷ்ணு, ஹநுமான் இவர்களைப் போலவே தான் இருக்கின்றன. சிசன் இட்ஸாவில் சிவனைப் போலவே ஒரு தெய்வ உருவம் இருக்கிறது. சிவப் பிந்தியக் கட்டிட, சிற்ப அமைப்பு முறையும் நம் பழைய முறையும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. இதிலிருந்து நம் நாகரிகம் தென் அமெரிக்கா, மெக்ஸிகோ, ஹோண்ரோஸ் இங்கெல்லாங்கூடப் பரவியிருக்கிறது என்று ஊகிக்கலாம். இதுவரையில் ஆராய்ந்த ஐரோப்பிய அமெரிக்க நிபுணர்கள் இந்திய நாகரிகத்தோடு இதற்குச் சம்பந்தமுண்டு என்ற ரீதியில் ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. இனிமேல் கீழ்நாட்டு நாகரிக சம்பந்தமாக ஆராய்வோர் இதைப்பற்றி அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இவர்கள் (1) தற்கால ஆராய்ச்சி முறைப்படி அமெரிக்க இந்தியரைப்பற்றிச் சரியான தகவல்களைச் சேகரித்து எழுதவேண்டும்; (2) அந்த மக்களின் பழைய கலை, நாகரிகம் இவைகளுக்குப் புத்துயிரளித்து அவர்களை முன்னுக்குக் கொண்டு வர உதவ வேண்டும். அப்போதுதான் எதிர் காலத்தில் அமெரிக்க இந்தியர் சீரும் சிறப்புமாக வாழ முடியும்.

அவன் யார்?

காரியதரிசி: டெலிபோனில் ஒரு கனவான் கூப்பிட்டார். உம் வியாபார வெற்றியின் ரகசியம் என்ன என்று கேட்டார்.

முதலாளி: நல்ல காரியம். ஆனல், அது யாரோ? பத்திரிகை நிருபனு, ரகசியப் போலீஸ்காரனு? இது தெரிந்தால் தேவலை.

மனித யந்திரம்!

★

மனிதனின் உடம்புபற்றிப் பல புதிய உண்மைகள் இன்று புலனுகி விட்டன. ஆனுல் அதில் உயிர் என்று ஒன்று வந்து ஒட்டிக்கொண்டிருக்கிறதே! எப்படி? அது எப்படியானுலும் அறிந்த உண்மைகளே ஆச்சரியமாயிருக்கின்றன. 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையில் வால்டிமார் கீம்பெர்ட் என்பவர் எழுதியுள்ள விஷயங்களை ஆதாரமாகக் கொண்டது இந்தக் கட்டுரை.

மனித உடம்பு எப்படிப்பட்டது? நூற்ருண்டுக் கணக்காக இதுபற்றிய அபிப்பிராயம் மாறி மாறி வந்திருக்கிறது. "சகல ஜீவராசிகளிலும் சிறந்தவன் நானே; கடவுளுக்கு அடுத்தபடி நான்தான்" என்று மனிதன் சில காலம் பெருமை பேசியிருக்கிருன். பிறகு, வெகு ஜாக்கிரதையாகத் தன்னையும் பிற ஜீவராசிகளையும் ஒப்பிட்டுப் பார்த்து, "ஓஹோ ஹோ! நான் குரங்கிலிருந்து அல்லவா வந்திருக்கிறேன்!" என்று மனம் சோர்ந்திருக்கிருன். அதன் பின் நவீன விஞ்ஞான சாஸ்திரங்கள் வளர்ந்தன. பற்பல ஆச்சரிய யந்திரங்கள் தோன்றின. "பூ! இவ்வளவுதானு! என் உடம்பும் இந்த மாதிரி ஒரு யந்திரந்தான்" என்று தீர்மானித்துவிட்டான். இந்த அபிப்பிராயங்களிலெல்லாம் ஓரளவு உண்மை இருக்கத்தான் இருக்கிறது. ஆனுல், இவையே முழு உண்மை அல்ல.

மனிதனுக்கும் எஞ்சினுக்கும் பல ஒற்றுமைகள் இருக்கின்றன. எஞ்சின் வேலை செய்ய எண்ணெய், நிலக்கரி முதலிய எரிபொருள்கள் அவசியம். இதேபோல மனிதனுக்கும் உணவு தேவை. ஸிலிண்டர், பிஸ்டன் போன்ற உறுப்புக்கள் இல்லாவிட்டாலும், மனிதனின் வயிறு ஓர் அடுப்பைப் போலவே வேலை செய்கிறது. உணவைக் 'கலோரி' என்ற உஷ்ண அளவாகக்கூடக் கணக்கிடுகிருர்கள். அடுப்பிலே ஓர் அவுன்ஸ் சர்க்கரை போய்ச் சேர்ந்தால் எவ்வளவு உஷ்ணம் உண்டாகுமோ அதே அளவு உஷ்ணம், அது வயிற்றிலே போய்ச் சேர்ந்தாலும் உண்டாகிறது. நீராவி யந்திரங்களில் கரியையும் விறகையும் சேமித்து வைக்க இடமுண்டு. இதேபோல் சர்க்கரை முதலியவற்றைக் கல்லீரல் (லிவர்), தசைகள் (மஸில்ஸ்) இவற்றில் நமது உடம்பும் சேகரித்து வைத்துக்கொள்ளுகிறது.

எண்ணெய் எஞ்சின்களை ஒத்திருக்கிறது ஒரு விஷயத்தில் நமது உடம்பு. உடம்பிலே புகும் உணவு, சர்க்கரை ஆகிறது; சர்க்கரை, மது (ஆல்கோஹால்) ஆகிறது; மது வெடித்து, நம் தசைகளை இயக்குகிறது.

உடம்பிலே கோடி கோடிக்கணக்கான உயிரணுக்கள் (ஸெல்ஸ்) இருக்கின்றன. அவற்றில் புகும்

சர்க்கரை, அணுவிலும் அணுவாயிருக்கும். இதனால்தான் அந்தச் சர்க்கரையின் வெடிச் சப்தம் நமக்குக் கேட்பதில்லை. என்றாலும், எண்ணெய் வெடியால் ஓடும் எஞ்சினைப்போல்தான் மனித யந்திரமும் சர்க்கரை வெடியால் வேலை செய்கிறது.

பந்துகளும் குழியும் உள்ள இணைப்பு (பால்-அண்டு-ஸாக்கட் ஜாயிண்ட்) யந்திரங்களில் இருக்கிறது. இதே போன்றவைதான் நம் தோள் பட்டையில் புஜ எலும்பும் இடுப்பில் தொடை எலும்பும் சேரும் மூட்டுகள். தாடை எலும்புகள் 'லீவர்' என்ற இடுக்கிபோல் இருக்கின்றன. 'பிவட்' என்ற கம்பியின்மீது சுழலும் கருவிகள் அமைந்திருப்பதுபோல, முதுகு எலும்புச் சங்கிலியின்மீது மண்டை எலும்பு உட்கார்ந்திருக்கிறது. தள்ளவும் இழுக்கவும் உள்ள கருவிகளைப் போலத் தசை நார்கள் வசதியாக நம் உடம்பில் அமைந்திருக்கின்றன. 'பெல்லோஸ்' என்ற துருத்தி மாதிரி வேலை செய்வது இருதயம். அது நெருப்பை விசிறவில்லை, ரத்தத்தைச் சுத்தப்படுத்துகிறது என்பது உண்மையே. ஆனால், அதுவும் பிராணவாயுவைத்தான் வீசுகிறது. ஓய்ச்சல் ஒழிவில்லாமல் 250 கோடி தடவை இருதயம் ஒரு மனிதனின் ஆயுட்காலத்தில் அடித்துக்கொள்வதும் ஓர் ஆச்சரியமே.

சுவாசப் பை (லங்ஸ்), சிறுநீர்க் காய்கள் (கிட்னீஸ்) இவை பற்றியோ கேட்க வேண்டியதில்லை. இவை போன்ற செயற்கைக் கருவிகளை இப்போது விஞ்ஞானிகள் அமைத்துவிட்டார்கள். உடம்பிலுள்ள ரத்தத்தைச் சுத்தம் செய்து கழிவு நீரை வெளியேற்றச் சிறுநீர்க் காய் தவறும்போது, அந்தக் காரியத்தைச் செயற்கைக் கருவி ஒன்று இப்போது செய்து விடுகிறது. இருதயத்துக்கு ஓய்வு கொடுத்து, அந்த வேலையை மேற்கொள்ளக் கூடிய இரும்புச் சுவாசப் பைகளும் இப்போது தோன்றியிருக்கின்றன.

தண்ணீர் இறைக்கும் யந்திர (ஹைட்ராலிக்ஸ்) வேலைகளும் உடம்பில் நடக்கின்றன. ஒன்றே கால் காலன் ($7\frac{1}{2}$ புட்டி) ரத்தத்தை உடம்பிலே இறைத்துச் சுழல விட்டுக்கொண்டேயிருக்கிறது இருதயம். இது போக, மண்ணீரல், கல்லீரல் முதலிய உறுப்புக்களில் கையோடு காவலாக இருப்பு ரத்தம் இருக்கிறது. உடம்பில் நிகழும் ரத்தச் சுழற்சியை உயிர் அருவி என்று சொல்லலாம். அதைக் குலைத்தால் மரணம் நேரும். ஆனால் அந்த ரத்தச் சுழற்சியை ஜலதாரைக்கும் ஒப்பிடலாம். ஏனென்றால் உடம்பின் கழிவுப் பொருள்களையெல்லாம் திரட்டிச் செல்வதும் அதுவே.

இதுவரையில் சொன்னதெல்லாம் உடம்பும் யந்திரமும் ஒத்திருப்பதைக் காட்டுகிறது. இனி அந்த இரண்டுக்கும் உள்ள வேற்றுமைகளைப் பார்க்கலாம். யந்திரம் இறைத்த தண்ணீர் ஓடும் குழாயிலே, நிணநீர் (ஸீரம்) எதையாவது ஊசி மூலம் பாய்ச்சுங்கள். அதனால் விசேஷ நிகழ்ச்சி ஒன்றும் ஏற்படாது. ஆனால், உடம்பின் ரத்தக் குழாய் ஒன்றிலே இப்படி நிணநீரை ஏற்றினால், ஓர் ஆச்சரியம் நிகழ்கிறது. 'எதிர் வஸ்துக்கள்' (ஆண்டி பாடீஸ்) என்ற ஒரு வகைப் பொருள் நம் ரத்தத்திலே இருக்கிறது. உள்ளே புகுந்த 'அந்நிய'னை, அந்த 'எதிர் வஸ்துக்கள்' படை திரண்டு வந்து எதிர்த்

துப் போராடும். இந்தப் போராட்டத்தில் பிரயோகப்படும் ஆயுதங்கள் என்ன தெரியுமோ? அத்தனையும் ரசாயன ஆயுதங்கள்! 'அப்ஸோனின்' என்று ஒருவகை எதிர் வஸ்து உண்டு. 'அப்ஸோனின்' என்றால், 'விருந்து சமைப்பவன்' என்று அர்த்தம். இந்தப் பெயர் வந்ததற்குக் காரணம் உண்டு. உள்ளே புகுந்த நிணநீரின் உயிரணுக்களை ருசியுள்ள பதார்த்தமாக மாற்றுவதுதான் இந்த எதிர் வஸ்துவின் வேலை. அந்தப் பதார்த்தத்தை விழுங்கி ஜீர்ணம் செய்து விடுகின்றன, நம் ரத்தத்திலுள்ள 'பாகொஸைட்' என்ற ஒருவகை அணுக்கள். ரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்கள் (வொயிட் கார்ப்பஸில்ஸ்) எல்லாம் பெரிதும் இந்த ரகத்தைச் சேர்ந்தவை. 'அக்ளூடினின்' என்ற ஒரு வகைப் பிசுக்கும் நம் உடம்பில் இருக்கிறது. பாகு வைத்துப் பிடித்த பணியாரத்தைப்போல் அந்நிய உயிரணுக்கள் இந்தப் பிசுக்கிலே ஒட்டிக்கொண்டு கட்டியாகிவிடுகின்றன. அந்தக் கட்டிகளை அப்படி அப்படியே நம் வெள்ளையணுக்கள் சௌகரியமாய்ச் சூழ்ந்து விழுங்கி விடுகின்றன.

நம் ரத்தச் சுழற்சி பல இடையூறுகளைத் தாங்கிக்கொள்ளும். ஆனால், அதற்கும் ஓர் எல்லை உண்டு. உங்கள் ரத்தத்திலே உஷ்ணம் அதிகரித்தால், பிதற்றுவீர்கள்; சீதளம் அதிகரித்தால், சாகும்போதுகூட ஆனந்தமாயிருப்பீர்கள். ரத்தத்திலிருந்து பிராணவாயுவை வெளியேற்றினால், பகுத்தறிவை இழப்பீர்கள். அதில் உள்ள சுண்ணாம்புச் சத்தை (கால்ஷியம்) அரைவாசி நீக்கினால், இசிவு ஏற்பட்டு, பிரக்ஞை பிசகி, செத்தே போவீர்கள். அதே சுண்ணாம்புச் சத்தை இரண்டு மடங்காக அதிகரித்தால், உங்கள் ரத்தம் தடித்துப் போம்; ஓடாது நின்றுவிடும்.

உடம்பைப் பெரிய அடுப்புக்கு ஒப்பிடுவதும் முழுவதும் பொருந்தாது. உஷ்ண சக்தி (தெர்மோ-டைனமிக்ஸ்) விதிகள் எல்லாம் உடம்புக்குப் பிரயோகமாகவில்லை. யந்திரத்திலே உஷ்ண நிலையோ, (ஹீட் லெவல்) நீர் மட்டமோ (வாட்டர் லெவல்) திடீரென்று எவ்வளவுக்கெவ்வளவு குறைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு சக்தி வெளிப்பட்டு வேலை செய்யும். உடம்போ இப்படியில்லை. நாம் என்ன உண்டாலும் சரி, உண்ணாமல் தள்ளினாலும் சரி, பாரன்ஹீட் 98.6 டிகிரி உஷ்ணம் உடம்பிலே எப்போதும் ஒரே நிலையாக இருக்கும். ஆபீஸில் உட்கார்ந்து வேலை செய்வதைவிட மரத்தை வெட்டும்போது, உடம்பின் உஷ்ண சக்தி (கலோரி) அதிகமாய்ச் செலவழிகிறது. ஆனால், வேர்வை விடுவதன் மூலம் உடம்பு தன் உஷ்ணத்தை ஒரே மட்டத்தில் இருக்கும்படி பாதுகாத்துக்கொள்கிறது.

கலம் நிறையச் சோறும் தீனியும் வைத்துக்கொண்டு தின்னலாம். என்றாலும், நம் உடம்பு பசியால் வாடக்கூடும். 'வைட்டமின்' என்ற சத்துக்கள் நம் உணவிலே உடம்புக்கு ஏற்ப இல்லையானால், அது பட்டினிக்கே சமம். அதனால் பல வியாதிகள் உண்டாகின்றன. இதையெல்லாம் பார்க்கும்போது, 'நம் உடம்பு ஓர் எஞ்சின் மட்டும் அல்ல; ரசாயன அமைப்புமாகும்' என்று சொல்லத் தோன்றுகிறது. இந்த ரசாயன அமைப்பில், பலவித ரசாயனப் பொருள்களும் தம் தம் அளவிலே துளி ஏறினாலும் சரி,

இறங்கினாலும் சரி குற்றம் நேரும். அவை மிகவும் கணக்காக இருக்க வேண்டும்.

உடம்பிலே இன்னோர் ஆச்சரியம். எந்த யந்திரமும் தன்னைத்தானே பழுதுபார்த்துக்கொள்ளாது. ஆனால் உடம்பு அப்படிப் பழுது பார்த்துக் கொள்கிறது. தன்னைத்தானே பழுது பார்த்துக்கொள்ளும் சக்தியை உடம்பு இழக்கும்போது தான், வெளி உதவி அதற்குத் தேவையாகிறது. சுய உதவியோ வெளி உதவியோ எதுவானாலும் சரி, ரசாயனச் சரக்குகளைக் கொண்டு தான் பழுது பார்க்கும் வேலை நடக்கிறது.

ஆனால், யந்திர மோகம் கொண்டவர்கள் இன்னோர் உதாரணம் சொல்லலாம். இரண்டாயிரம் மின்சார வால்வுகள் (வாக்குவம் ட்யூபு) வரைக்கும் கொத்த சில கணித யந்திரங்கள் இப்போது தோன்றியிருக்கின்றன. அந்த மின்சார யந்திரங்கள், மனித மூளையும் தோற்றுப் போகும்படி அபூர்வ வேலைகளைச் செய்கின்றன. ஒரு கணித நிபுணர் பல மாத காலம் வேலை செய்தும் விடை காண முடியாத ஒரு கணக்கைச் சில நிமிஷ நேரத்தில் செய்து அந்த யந்திரங்கள் விடை சொல்லுகின்றன. மனிதனின் ஞாபக சக்திக்கும் சிந்தனை சக்திக்கும் இணையாக இருக்கிறது அவைகளின் சக்தி.

மொத்தத்தில், மனித உடம்பை யந்திரத்துக்கு ஒப்பிடுவதை அடியோடு கைவிட முடியாது. சொல்லப் போனால், உடம்பியல்கள் பலவற்றை விளக்க, யந்திர உதாரணம் மிகவும் சௌகரியமாயிருக்கிறது. மனித உடற்கூறுகளை ஆராயும் பலவித விஞ்ஞானிகளும் பெரும்பாலும் யந்திர உதாரணத்தைக் கையாளுகிறார்கள். ஆனால், இதில் ஒரு வேடிக்கை. "இதென்ன, பக்குவமாய் அமையாத யந்திரமாயிருக்கிறதே!" என்று உடம்பை அவர்கள் கொஞ்சம் அவமதிக்கிறார்கள். ஏனென்றால், உடம்பிலே சில அநாவசியக் கருவிகளும், வெகு காலத்துக்கு முன்பே மறைந்திருக்க வேண்டிய கருவிகளும் இருக்கின்றன.

மனிதனின் பரிணாம (இவல்யூஷன்) ரீதியிலே ஏற்பட்டது இந்த விபரீதம். அவன் முதல்முதல் பின்னங்கால்களை ஊன்றி நிற்க ஆரம்பித்தபோது, குடல் சற்றுச் சரிந்தது. அதனாலேயே 'குடல் இறக்கம்' (ஹெர்னியா) என்ற நோய் வரத் தொடங்கியது. வளைந்த முதுகு, இரண்டே கால் இவற்றின்மீது உடம்பின் பாரம் முழுவதையும். எந்த எஞ்சினீரும் சுமத்தமாட்டார். பூமியின் ஆகர்ஷண சக்திக்கு எதிராக ரத்தத்தை மேல்நோக்கி இறைக்கும்படி ஒரு 'பம்பை' இருதயத்தில் அவர் அமைத்திருக்கவும் மாட்டார்.

உயிர்ப் பிராணிகள் பரிணாம ரீதியாக வளரும்போது, சில உறுப்புக்கள் பயனற்றுப் போகின்றன. ஆனால், அந்த உறுப்புக்களை உடம்பு கழற்றி எறிவதில்லை. சூம்பிக் குறுகி அவை உடம்பில் இருந்துகொண்டே யிருக்கின்றன. அந்தப் பழைய உறுப்புக்களோடு துணையாகவே புதிய உறுப்புக்கள் வந்து முளைக்கின்றன. நம் கண்ணின் முனையில், அதிகப்படி இமை ஒன்று இருப்பதைக் கவனித்தால் இது தெரியும். உச்சி மண்டைக்குள்ளே ஒரு 'சுரப்பி' (கிளாண்டு) இருக்கிறது. அது என்ன தெரியுமோ? நமக்கு இருந்த மூன்றாவது கண் தான்! முது

கெலும்பு நுனியில் உள்ள குட்டி வாலைப்பற்றித்தான் எல்லாரும் கேள்விப்பட்டிருப்பீர்களே.

நமது மூளை ஒன்றல்ல; ஒன்றுக்குமேல் ஒன்றாகப் பல மூளைகள் வந்து ஒட்டிக்கொண்டிருக்கின்றன. முன் பக்கம் உள்ள மூளையால்தான் சிந்திக்கிறோம். இதுவும் பல சிக்கலாய்க் குழம்பியிருக்கும் 'கார்ட்டெக்ஸ்' என்ற ஒரு பகுதியுந்தான் கடைசியாகத் தோன்றியவை. மின்சார-ரசாயன (எலெக்ட்ரோ-கெமிக்கல்) யந்திரமாக இருக்கிறது நமது மூளை. ஆனால், எந்த மின்சார யந்திரமும் இதைப்போல் வேலை செய்ய முடியாது.

மனிதனின் மூளை இன்னும் அபூர்வமாய்ப் பக்குவமடையாது என்றோ, அவனுடைய மனம் இன்று இருப்பதைவிட அற்புதமான சக்திகளைப் பெறாது என்றோ யார் சொல்ல முடியும்? மனிதனிலே இருபது முப்பது ரகங்கள் தோன்றி மறைந்துவிட்டன. இன்றைய ரகமும் மறைந்து அதியாச்சரியமான புதிய மனிதன் இனித் தோன்ற மாட்டான் என்றுதான் யார் சொல்ல முடியும்?

அந்த அதிசய மனிதன் உதயமாக இன்னும் ஐந்து லட்சம் வருஷங்கள் ஆகலாம். நம்மைப் பீடிக்கும் பீனசம், குடல் அநுபந்தம் (அப்பெண்டிஸைட்டிஸ்), குடல் இறக்கம் (ஹெர்னியா), கூனல் முதுகு போன்ற உபத்திரவங்களெல்லாம் அவனைப் பீடிக்கமாட்டா. நம் மூளையைப்போல் இருபத்தைந்து மடங்குள்ள பெரிய மூளை அவனுக்கு இருக்கும்.

அந்த அதிசய மனிதனுக்கு முன்மாதிரியாக, இன்றைப் பெண்களையே சுட்டிக் காட்டுகிறார் ஸர் ஆர்த்தர் கீத் என்ற பிரபல விஞ்ஞானி. முன் கால மனிதனுக்கு இருந்தது போலவே ஆணின் புருவம் இன்னுங்கூடச் சிறிது முன்புறம் தொங்கிக்கொண்டிருக்கிறது. பெண்ணுக்கோ இப்படியில்லை. பெண் இந்த விஷயத்தில் ஆணை ஐந்து லட்சம் வருஷம் முந்திக்கொண்டு விட்டாள் என்பது அந்த விஞ்ஞானியின் கருத்து.

மொத்தத்தில் மனிதன் எப்படிப்பட்டவன்? யந்திரமா? ரஸாயன பிண்டமா? ஒன்றும் திட்டமாகச் சொல்ல முடியவில்லை. ஏனென்றால், 'உயிர் என்பது என்ன?' என்று எந்த விஞ்ஞானியாலும் விளக்க முடியவில்லை. அது இன்று வரை விஞ்ஞானிகளுக்கு விளங்காத ஒரு பெரும்புதிராகவே இருக்கிறது.

குற்றமற்ற குடிகாரன்

கணவன்: சாயங்கால வேளையில் கிளப்புக்குப் போய்ச் சிறிது நேரம் உல்லாசமாக இருந்துவிட்டு நான் வருவதில் என்ன தப்பு? அதை ஏன் நீ ஆட்சேபிக்கிறாய்? நேற்றிரவு நான் வீடு வந்து சேர்ந்தபோது, ஏதாவது சத்தம் போட்டேனா?

மனைவி: இல்லை. ஆனால் உங்களைத் தூக்கிக்கொண்டு வந்து வீட்டிலே சேர்த்தார்களே, அந்த மூன்று பேரும் போட்ட சத்தத்தைத்தான் சகிக்க முடியவில்லை.

—'ஸ்பார்க்லெட்,' கேப் டவுன்.

உரக்கப் படி

சார்லஸ் லாட்டன் என்பவர் பிரபல ஆங்கில நடிகர். 'எட்டாம் ஹென்ரி', 'லே மிஸரபிள்ஸ்', 'நாட்டர்டாம் கூனன்' முதலிய படங்களில் நடித்துக் கீர்த்தி பெற்றவர். கொஞ்சகாலமாக அவர் தமக்கு இஷ்டமான சில புத்தகங்களைப் பொறுக்கி எடுத்துப் பல கூட்டங்களில் படித்துக் காட்டிக்கொண்டே நாடு நாடாகச் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார். லாட்டன் படித்துக் காட்டிய ஒரு கூட்டத்தில் 6,000 பேருக்கு மேல் வந்திருந்தார்களாம்.

"இன்றைக்குத்தான் எனக்கு இந்த நாடகம் முழுதும் நன்றாகப் புரிந்தது" என்று பதில் அளித்தார் ஆசிரியர்.

ஒரு சமயம் காலேஜ் ஒன்றில் ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர்கள் கூட்டத்தில் ஷேக்ஸ்பியரின் 'பன்னிரண்டாம் இரவு' என்ற நாடகத்திலிருந்து சில பகுதிகளைப் படித்துக் காட்டினார். அப்போது ஒரு வாலிப ஆசிரியர், "நீங்கள் செய்வது அநியாயம்! கேட்பதற்கு ரசமாக இருக்கும் என்று அந்தப் பகுதிகளைச் சற்று மாற்றிப் படிக்கிறீர்கள்" என்றார்.

அதற்கு லாட்டன், "இல்லையே!" என்றார். படித்த விதம் ரசமாக இருந்ததே வாலிபரின் மயக்கத்துக்குக் காரணம்.

சென்ற மகாயுத்தத்தின்போது அடிபட்டு ஆஸ்பத்திரியில் கிடந்தவர்களுக்கு இவர் பைபிளிலிருந்தும் ஷேக்ஸ்பியரின் நாடகங்களிலிருந்தும் பல பகுதிகளைப் படித்துக் காட்டினாராம். பைபிள் ரசமில்லாத நூல் என்று எண்ணியிருந்த பலர் அதிலுள்ள கதைகளை ஆவலோடு கேட்டு ரசித்தார்களாம். ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் வரும் வீரர்களும் தங்களைப்போலவே துன்பம் அநுபவித்ததை அறிந்ததும் இவர்களுக்கும் சற்று ஆறுதல் ஏற்பட்டதாம்.

"ஆரம்பத்தில் எப்படிப் படிப்பது என்று தயங்குவோம். அதற்குச் சரியான வழி, நமக்கு மிகவும் பிடித்த ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டால் போதும். அப்புறம் தங்கு தடையே இராது. முதலில் ஒரு கதையையோ, ஒரு செய்யுளையோ, ஒரு நாவலின் ஓர் அத்தியாயத்தையோ படித்துப் பழக வேண்டும். நடுநடுவே தடை ஏற்பட்டாலும் அதோடு விட்டுவிடக் கூடாது. ஆனால் கவனம் தப்ப ஆரம்பித்தால் நிறுத்திவிட வேண்டியதுதான். இன்னும் ஒரு விஷயம்: நாம் பேசுகிற ரீதியில் சகஜமாகப் படித்தால் போதும். சாயங்கால நேரத்தில் இப்படிப் படித்து முடித்த பிறகு சும்மா இருக்கக் கூடாது. அதைப்பற்றி நாலு பேரோடு பேச வேண்டும். அப்போது அவர்களுடைய அபிப்பிராயம் நமக்குத் தெரியும். பேச்சும் ரசமாக இருக்கும்" என்கிறார் லாட்டன்.

—'திஸ் வீக் மகஸீன்'

வனவாசத் தீர்மானம்

கூனியின் சொல்லைக் கேட்டுக் கொண்டு கைகேயி கோபக்கிருகத்தில் படுத்திருந்தாள். அப்போது தசரதன் வந்து பலவிதமாக அவளைத் தேற்றப் பார்த்தான். அப்படியும் அவள் கோபம் தணியவில்லை. அவன் தனக்கு முன்னே வாக்களித்தபடி இரண்டு வரங்களையும் கொடுக்கச் சொன்னாள். ஒன்று, ராமன் பதினாலு வருஷம் காட்டில் கழிக்க வேண்டும்; மற்றொன்று, பரதனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட வேண்டும். தசரதன் இதைக் கேட்டு மிகுந்த வேதனையுற்று வெகு நேரம் நினைவு தப்பியிருந்தான். பிறகு இரா முழுதும் சமாதானம் சொல்லியும் அவள் தன் பிடிவாதத்தை விடவில்லை.

காலையில் வசிஷ்டர் பட்டாபிஷேக ஏற்பாடுகளை நடத்த அரண்மனைக்கு வந்தார். தேரோட்டியான சுமந்திரனை அவர் அழைத்து, முகூர்த்தம் நெருங்கி விட்டதைத் தசரதனிடம் தெரிவிக்கச் சொன்னார். அவன் அந்தப்புரத்துக்கு வந்து இதைத் தெரிவித்தான். தசரதன் துக்க மிகுதியால் பதில் பேசாமல் இருந்தான். கைகேயி அப்போது சுமந்திரனிடம் நடந்ததைச் சொல்லி ராமனை அழைத்துவரச் செய்தாள். ராமன் வந்து தந்தையை வணங்கி நின்றான். அவர் பேசாமல் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டு விஷயம் என்ன என்று கைகேயியைக் கேட்டான். கைகேயி, "உன்

வால்மீகி ராமாயணம் மகோன்னதமான காவியம் என்பது உலகப் பிரசித்தம். அதன் முக்கியப் பகுதிகள் ஒவ்வொன்ருக 'மஞ்சரி'யில் வரும். இது ஐந்தாவது பகுதி.

தந்தை நீ பதினுலு வருஷம் காட்டில் வசிக்க வேண்டும் என்றும், பரதனுக்குப் பட்டம் கட்ட வேண்டும் என்றும் விரும்புகிருர்'' என்ருள். ராமன் சிறிதும் மனமாற்றம் இல்லாமல் அப்படியே நடப்பதாக வாக்களித்தான். பிறகு அவளிடமும் தன் தாயான கௌசல்யையிடமும் விடை பெற்றுக்கொண்டு அவன் காட்டுக்குப் புறப்பட்டான். தர்மத்தை விடாமல் கடைப்பிடிப்பவளாகையால் அவளும் அவனை ஆசீர்வதித்து அனுப்பினுள்.

பிறகு ராமன் சீதையைக் காணத் தன் அரண்மனைக்குப் புறப்பட்டு வந்தான். சீதைக்கு விஷயமே தெரியாது, பாவம். அவள் ராமனுக்கு அன்று பட்டாபிஷேகம் நடக்கப் போகிறது என்று எண்ணிக்கொண்டிருந்தாள். பூஜையை முடித்துவிட்டு ராமனுடைய வரவை எதிர்பார்த்தபடி இருந்தாள்.

ராமனுடைய அரண்மனையை அழகாக அலங்கரித்திருந்தார்கள். அநேக மக்கள் அங்கே மகிழ்ச்சியோடு நின்றிருந்தார்கள். வெட்கத்தால் சற்றுத் தலை குனிந்தபடி அவன் உள்ளூற வருத்தத்தோடு அரண்மனையில் நுழைந்தான். இதைக் கண்டு சீதை கலக்கமுற்று அவனிடம் தாவிச் சென்ருள். ராமனுக்குத் துக்கம் பொங்கி வந்தது. சீதை, ''பிரபுவே, இதென்ன?...இன்று தங்களுக்கு உகந்த இந்தப் புஷ்ய நட்சத்திரத்

தில் பட்டாபிஷேகம் என்று அந்தணர்கள் சொன்னார்களே! நீங்கள் ஏன் இப்படி மனம் கலங்கி நிற்கிறீர்கள்? நீரின் நுரைபோன்ற வெண் கொற்றக் குடை எங்கே? முகத்தின் இருபுறமும் நிலவுபோல் வீசும் வெண்சாமரம் எங்கே? பாணர் முதலியவர் ஏன் உங்களோடு வரவில்லை? அந்தணர்கள் ஆசீர்வதித்துத் தெளித்த தேனும் தயிரும் உங்கள் தலையில் காணாதது ஏன்? மந்திரிகளும் பிரதானிகளும் எங்கே? நாலு குதிரைகள் பூட்டிய 'புஷ்ய ரத'மோ அலங்காரம் செய்த யானையோ ஏன் உங்களுக்கு முன்னால் வரவில்லை? பட்டாபிஷேக சமயத்தில் ஏன் இப்படி உங்கள் முகம் மாறியிருக்கிறது?" என்றாள்.

"சீதையே, அப்பா என்னைக் காட்டுக்குப் போகச் சொல்லியிருக்கிறார். நான் இங்கே வந்த காரணம் இதுதான். மகாராஜா சத்தியம் தவறாதவர். முன்னே அவர் நம் தாயான கைகேயிக்கு இரண்டு வரம் கொடுப்பதாக வாக்களித்திருந்தார். அவைகளை இப்போது கொடுக்கும்படி அவள் கேட்டாள். முதல் வரத்தின்படி நான் பதினாலு வருஷம் தண்டகாரண்யத்தில் போய் வசிக்க வேண்டும். இரண்டாவது வரத்தின்படி பரதனுக்கு இளவரசுப் பட்டம் கொடுக்க மகாராஜா சம்மதித்துவிட்டார். ஆகவே, நான் காட்டுக்குப் புறப்படுகிறேன்; அதற்குமுன் உன்னைப் பார்க்க வந்தேன். பிரபுக்கள் மற்றவர் புகழ்ச்சியைக் கேட்கச் சகிக்க மாட்டார்கள்; ஆகையால் என்னைப்பற்றிப் பரதனிடம் புகழ்ச்சியாகச் சொல்லாதே! பரதன் உன்னை விசேஷ மரியாதையோடும் ஆதரவோடும் கவனித்து வரும்படி நடந்துகொள்ளாதே! மகாராஜா அவனுக்கே நிலையாகப் பட்டம் சூட்டியிருக்கிறார். ஆகையால் அவனுக்கு அநுகூலமாக இருந்து வா. இனி நீ விரதமும் உபவாசமும் அநுஷ்டித்து வர வேண்டும். காலையில் எழுந்து தெய்வத்தை வழிபட்டதும் தசரத மகாராஜாவை வணங்கு. கடமையே பெரிதென்று எண்ணிக் கௌசல்யா தேவியிடம் மிகவும் பணிவாக நடந்துகொள். மற்றத் தாய்மார்களிடமும் மரியாதை செலுத்தி வா. என் உயிருக்கு ஒப்பானவர்கள் பரத சத்துருக்னர்கள். அவர்களை உன் சகோதரராகவும் மக்களாகவும் எண்ணவேண்டும். பரதனுக்கு ஒருபோதும் தீங்கு நினைக்காதே! அவன் மனம் கோணாதபடி நடந்துகொள். நான் இதோ காட்டுக்குப் புறப்பட்டுவிட்டேன்" என்றான் ராமன்.

இதைக் கேட்டதும் சீதை அன்பு மிகுதியால் சற்றுக் கோபத்தோடு, "ஆரியபுத்திரரே, வெகு சுலபமாகச் சொல்லிவிட்டீர்களே! இதைக் கேட்டு எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. தந்தை, தாய், சகோதரன், சகோதரி, மகன், மருமகள் எல்லாரும் தங்கள் தங்கள் சுக துக்கங்களைத் தாங்களே அநுபவிக்கிறார்கள். மனைவி ஒருத்தியே கணவனின் சுக துக்கங்களைத் தானும் அநுபவிக்கிறாள்; ஆகையால், நானும் உங்களோடு காட்டுக்கு வரத்தான் வேண்டும். நான் உங்களுக்கு முன்னே முள்ளையும் தர்ப்பையையும் மிதித்து நசுக்கிக்கொண்டே போகிறேன். நீங்கள் என்னை அழைத்துக் கொண்டுதான் போக வேண்டும். அரண்மனையில் வாழ்வதையும் விமானத்தில் போவதையும்

விடக் கணவனின் அடி நிழலில் இருப்பதே தகுதியானது. என் தந்தையும் தாயும் இதைத்தான் எனக்கு முக்கியம் என்று உபதேசித்திருக்கிறார்கள். பிறந்த வீட்டில் இருப்பதுபோல் மிருகங்கள் நிறைந்த காட்டில் உங்களோடு பழமும் கிழங்கும் தின்று உங்களுக்குப் பணிவிடை செய்து வாழ்வேன். மற்ற எல்லாரையும் காப்பவர் நீங்கள். அப்படியிருந்தும் என்னை ஆதரிக்கத் தயங்குவானேன்? உங்களோடு வருவதென்று தீர்மானித்து விட்டேன். இனி அதை மாற்ற முடியாது'' என்றாள்.

ஆனால் ராமன், காட்டில் ஏற்படக்கூடிய இன்னல்களை எண்ணி, அவளைக் கூட அழைத்துச் செல்ல இணங்கவில்லை; சீதை கண்ணீர் விட்டுக் கலங்கி நின்றாள். ராமன் அவளைத் தேற்ற, ''உன்னுடைய நன்மைக்காகத்தான் சொல்கிறேன். காட்டில் எவ்வளவோ கஷ்டம் அநுபவிக்க வேண்டியிருக்கும். எப்போதும் மலையருவியின் இரைச்சலும் சிங்கத்தின் உறுமலும் கேட்டுக்கொண்டேயிருக்கும். அப்போது உனக்குப் பயமாக இருக்கும். அங்கே மத யானைகள் திரியும். மற்றக் கொடிய விலங்குகள் நம்மேல் பாய வரும். ஆறுகளில் முதலைகள் இருக்கும். வழி முழுதும் முள்ளும் புதரும் நிறைந்திருக்கும். இடையிடையே குட்டைகளில் நீரே இராது. எவ்வளவு களைப்புற்று இருந்தாலும் இரவில் சருகுகளின் மேல்தான் படுக்க வேண்டியிருக்கும். காட்டில் புயல் காற்று, கும்மிருட்டு, கடும்பசி, பாம்பு போன்ற விஷஜந்துக்கள் இத்தனையும் இருக்கும். ஆகவே, நீ அங்கே வரவேண்டாம்'' என்றான்.

சீதை மிகவும் வருத்தமுற்றுக் கண்ணீர் பெருக, ''நீங்கள் எனக்குச் சிரமம் என்று சொன்னதெல்லாம் உங்கள் மேலுள்ள அன்பினால் இன்பமாகவே தோன்றுகின்றன. மான், சிங்கம், சரபம் எதுவாக இருந்தாலும் உங்களைக் கண்டால் பயந்தோடிவிடும். என் தாயும் தந்தையும் உங்களோடு கூடவே இருக்கும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள். நான் பிறந்த வீட்டில் இருந்தபோது, 'நீ காட்டில் வசிக்க வேண்டியிருக்கும்' என்று சில அந்தணர்களும் ஒரு பிச்சைக்காரியும் சொல்லியிருக்கிறார்கள். அப்படியே உங்களோடு நானும் காட்டுக்குப் புறப்பட்டு வருகிறேன். கணவனே எனக்குத் தெய்வம்; வேத வாக்கைக் கடைப்பிடித்து மறு பிறப்பிலும் உங்களைத் தொடர்ந்து வருவேன். அப்படி நீங்கள் என்னை அழைத்துப் போக மறுத்தால் நான் விஷத்தைத் தின்றோ நீரில் மூழ்கியோ உயிரை விட்டுவிடப் போகிறேன்'' என்று சொல்லி எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். அப்படியும் ராமன் சம்மதிக்கவில்லை. அப்போது சீதை சற்று ரோஷத்தோடு, ''ஹே ராமா, என் தந்தை புருஷ வடிவு கொண்ட பெண் என்று உங்களை மருமகனாகக் கொண்டார்? சூரியனிடம் வெயில் இல்லை என்று யாராவது சொல்வார்களா? உங்களிடம் பராக்கிரமம் இல்லை என்று சொல்ல முடியுமா? என்னை அழைத்துப் போகா விட்டால் உங்களிடம் பராக்கிரமம் இல்லை என்றல்லவா உலகம் நினைக்கும்? வீணாக என்னை விட்டுச் செல்லவே இப்படிப் பயம் காட்டுகிறீர்கள்! த்யுமத்ஸேனன் மகன்

சாவித்திரியைப்போல் நான் உங்களை விடாமல் தொடருவேன். பதிவிரதையான என்னை இப்படிக் கூத்தாடிபோல் பிறரிடம் விட்டு விட்டுப் போகப் பார்க்கிறீர்களே! தவமோ காடோ சொர்க்கமோ எதுவாக இருந்தாலும் நீங்கள் இல்லாமல் எனக்கு வேண்டிய தில்லை. இலையோ காயோ பழமோ எதை நீங்கள் கொடுத்தாலும் அதுவே எனக்கு அமிர்தம். காட்டு முள்ளே எனக்குப் பஞ்சணை. புழுதியே எனக்குச் சந்தனம். நீங்கள் என்னை அழைத்துப் போகா விட்டால் நான் விஷம் உண்பேன்" என்று கதறி, அக்கினியை அரணி கக்குவதுபோல் உஷ்ணமாகக் கண்ணீர் சொரிந்தாள். பறித்த தாமரை போல் அவள் முகம் வாடியது.

கடைசியில் ராமன் அவளை அணைத்துக்கொண்டு, "தேவி, சொர்க்கமாக இருந்தாலும் சரி, உனக்கு வருத்தந் தருவது எதவும் எனக்கு வேண்டாம். உன் அபிப்பிராயம் என்ன என்று தெரிந்து கொள்ளாமல் காட்டுக்கு அழைத்துப் போகக்கூடாது என்றுதான் எண்ணினேன். என்னோடு வனவாசம் செய்வதற்காகவே பிரம்மா உன்னைப் படைத்திருக்கிறார். நீ என்னைத் தொடர்வது நம் முன்னோர் கடைப்பிடித்த தர்மந் தான். சூரியனைச் சுவர்ச்சலா தேவி பின் தொடரவில்லையா? குலத்துக்கேற்றபடியே நடந்து கொண்டிருக்கிறாய். சரி, காட்டுக்குப் புறப்பட்டுச் செல்லலாம்; அதற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய். ஆபரணங்களை அந்தணருக்குக் கொடுத்துவிடு. ஏழைகளுக்கு அன்னம் இடு. யார் யாருக்கு என்ன செய்ய வேண்டுமோ எல்லாம் செய்து முடி" என்றான்.

சீதையும் மகிழ்ச்சியோடு அவன் கட்டளையை நிறைவேற்ற முனைந்தாள்.

வீட்டுக்காரியின் கண்ணீர்

ஒரு வாலிப மாணவன் தான் தங்கியிருக்க அறை கிடைக்குமா என்று ஒரு வீட்டிலே போய் விசாரித்தான்.

அந்த வீட்டுக்கார அம்மாள், "அறை இருக்கிறது. ஆனால், உன்னைத் தெரிந்தவர் யாருடைய விலாசமாவது சொல்லு; அவர்களை விசாரிக்கிறோம். உன் நடத்தை நல்லது என்று அவர்கள் உறுதி கூறினால், உனக்கு இடம் தருகிறோம்" என்றாள்.

"பூ! என்னைப்பற்றி இப்படியெல்லாம் நீங்கள் பயப்படத் தேவையில்லை. வீணே விசாரித்துத் தொல்லைப் பட வேண்டாம். நான் மிகவும் ஒழுங்கானவன். முன்னே நான் தங்கியிருந்த வீட்டுக்காரர்கள் என்ன செய்தார்கள், தெரியுமா? நான் அதைவிட்டுக் கிளம்பியபோது, அந்த வீட்டுக்கார அம்மாள் கண்ணீர் விட்டுவிட்டாள்" என்றான் வாலிபன்.

"சரிதான், தம்பி. அது இங்கே நடக்காது. முன்னாடியே நாங்கள் அட்வான்ஸ் பணம் வாங்கிவிடுவோம்" என்றாள் இந்த வீட்டுக்காரி.

—மான்செஸ்டர் கார்டியன்'

குழந்தைகள் குறும்பு

இவை போன்ற துணுக்குகளை, தாங்கள் கண்டு கேட்ட அநுபவங்களிலிருந்து யாரும் நமக்கு அனுப்பலாம். பிரசுரிக்க அங்கீகரித்த ஒவ்வொரு துணுக்குக்கும் 2 ரூபாய் சம்மானம் அளிக்கப்படும். பிரசுரிக்காதவற்றைத் திருப்பி அனுப்ப முடியாது. பதிலும் எழுத முடியாது. —ஆசிரியர்.

சமீபத்தில் சலவைத் தொழிலாளர் மகாநாடு ஒன்று நடைபெற்றது. அதன் பலனக எங்களூரில் சில லாண்டிரிகளின் முன் புதிய விளம்பரப் பலகை ஒன்று தொங்கத் தொடங்கியது; "சலவையில் துணிகள் கிழிந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பாளி இல்லை" என்று அதில் எழுதியிருந்தது.

எட்டு வயதுள்ள என் தம்பியும் நானும் இப்படிப்பட்ட ஒரு லாண்டிரிக்குச் சென்றோம். "இதென்ன அண்ணு, இப்படி எழுதியிருக்கிறதே?" என்று தம்பி கேட்டான்.

"சும்மா இரு. இதெல்லாம் தொழிலாளர்களுடைய உரிமை" என்று நான் பதில் சொன்னேன்.

வீட்டுக்குத் திரும்பும்போது, ஒரு ஸலூன் வாசலில் தம்பி நின்றுகொண்டான். "ஏன் அண்ணு, இங்கே ஒன்றும் விளம்பரம் போடவில்லை?" என்று கேட்டான்.

"இங்கே என்ன எழுதிப் போடுவது?" என்று நான் கேட்டேன்.

"என்ன எழுதுவதா? 'கத்தி பட்டு ரத்தம் வந்தால் நாங்கள் பொறுப்பாளி இல்லை' என்று எழுதிப் போடலாமே" என்றான் தம்பி.

—இராசரத்தினம், ஆனையப்ப பிள்ளை சந்து, பெரியகுளம்.

கோபுவுக்கு ஐந்து வயது இருக்கும். அவனுக்கு அடிக்கடி மூக்குக்கு மேல் கோபம் வந்துவிடும். உடனே 'உர்' என்று முகத்தை வைத்துக்கொண்டு யாருடனும் பேசாமல் இருப்பான்.

ஒரு நாள் இப்படி அவன் கோபித்து முறைத்துக்கொண்டதைக் கண்ட மாமா, "அடே கோபு, இதோ நான் சொல்வதைக் கேள்: ஒன்று, இரண்டு, மூன்று, நாலு என்று பன்னிரண்டு வரை எண்ணிக்கொண்டு போ. உன் கோபம் போய் விடும்" என்று சிரித்துக்

கொண்டே சொன்னார். பிறகு, ஏதோ வேலையைக் கவனிக்கச் சென்றார்.



சற்று நேரத்தில் திரும்பி வந்தார். "ஏண்டா, நான் சொன்னபடி செய்தாயா? கோபம் போச்சா?" என்றார்.

"முக்கால்வாசிக் கோபம் போச்சு; கால்வாசி பாக்கியிருக்கு" என்றான் கோபு.

"அதென்னடா அது! கால்வாசி பாக்கியிருக்கா?"

"ஆமாம்; எனக்கு ஒன்பது வரைக்குந்தானே எண்ணத் தெரியும்! அப்புறம் தட்டுக் கெட்டுப் போறதே" என்றான் சிறுவன்.

—ஆர். சுகந்தவல்லி, c/o தாசில்தார், ஹோசூர்.

"சந்திரா, நீ ராத்திரியிலும் படிப்பதில்லை; காலையிலும் படிப்பதில்லை. ராத்திரி எட்டு மணிக்குத் தூங்கிவிடுகிறாய். காலையில் ஏழு மணிக்கு எழுந்திருக்கிறாய். இப்படித் தூங்குமூஞ்சியாக இருந்தால், எப்படிப் பரீட்சையில் தேறுவாய்?" என்று ஒருநாள் என் தம்பியைக் கோபித்துக்கொண்டேன்.

"சின்னப் பையன்களெல்லாம் ராத்திரி எட்டு மணிக்குமேல் கண் விழிக்கக்கூடாது என்று எங்கள் வாத்தியார் கண்டிப்பாய்ச் சொல்லியிருக்கிறார்" என்றான் அவன்.

"அப்படியா! காலையில் எத்தனை மணிக்கு எழுந்திருக்கச் சொல்லியிருக்கிறார் அவர்?" என்று நான் கேட்டேன்.

"ஆறு மணிக்கு."

"நீ ஏன் அப்படி எழுந்திருப்பதில்லை?"

"அவர் சொன்ன இரண்டையும் கடைப்பிடிக்க முடியவில்லை. ஒன்றைக் கடைப்பிடிக்கிறேன்" என்றான் தம்பி.

—வி. சேஷாத்திரி, C/o ஹெட் காஷியர், இம்பீரியல் பாங்கி, மதுரை.

ஒரு சமயம் நாங்கள் குடும்பத்தோடு ஹூக்ளி நதிமீது நீராவிப் படகில் பிரயாணம் செய்துகொண்டிருந்தோம். படகின் ஓரத்தில் நின்றுகொண்டு நான்கு வயதுள்ள என் தம்பி ராஜூ வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான்.

அப்போது என் மாமா தமாஷாக ராஜூவைத் தூக்கி, "இதோ பார்! உன்னை ஜலத்தில் போட்டேப் போறேன்" என்று சொல்லி, போட்டுவிடுவது போல் அவனை ஜலத்தை நோக்கி இறக்கி, "போட்டேட்டுமா?" என்றார்.

ராஜூ, "போடாதே, மாமா! என் புது ஸில்க் ஷர்ட்டு நனைஞ்சு போயிடுமே" என்று கூச்சலிட்டான்.

—எஸ். டி. ராகவன், 13, லண்டன் தெரு, கல்கத்தா.

முந்திரி சர்பத்தும் எண்ணெயும்

முந்திரிப்பழம் நல்ல மஞ்சள் நிறத்துடனே ஆரஞ்சுநிறத்துடனே இருக்கும். இதில் நிறைய ரசம் இருக்கும். முந்திரிப் பழத்திலிருந்து சர்பத் தயாரிக்கிறார்கள். முந்திரிப் பழங்களைத் தண்ணீரில் கழுவிய பிறகு இரண்டாகவோ, நான்காகவோ நறுக்கவேண்டும். பிறகு துணியில் வைத்து ரசத்தைப் பிழிந்துகொள்ள வேண்டும். ரசம் பிழியும்போது இரும்பை உபயோகிக்கக்கூடாது. அது ரசத்தின் நிறத்தைமாற்றிவிடும்.

பழ ரசத்தைச் சீக்கிரமாகக் கொதிக்கவைத்து உடனே குளிரச் செய்யவேண்டும். இதைக் கண்ணாடி அல்லது அலுமினியப் பாத்திரத்தில் ஊற்றி இரவு முழுவதும் வைத்துவிடவேண்டும். தெளிந்த ரசத்தில் 0·2 சதம் சிட்ரிக் அமிலம் (புளிப்புச் சத்து) இருக்கும். புளிப்புக் குறைவாக இருந்தால் எலுமிச்சை ரசமோ சிட்ரிக் அமிலமோ சேர்த்துக்கொள்ளலாம். எலுமிச்சை ரசத்தைச் சேர்த்தால் கசடு படரும்; விரைவில் கீழே இறங்கியும் விடும். பின்பு போதிய அளவு சர்க்கரையைக் கலக்கவேண்டும்.

எஞ்சிய அழுக்கைப் போக்குவதற்காக மீண்டும் காய்ச்சவேண்டும். உடனே 120 டிகிரிவரை குளிரப்படுத்தவேண்டும். நெடுநாள்வரை கெடாதிருப்பதற்காகப் பழ ரசத்தில் ‘பொடாஸியம் மெட்டா பைசல்பைட்’டைக் கலக்கவேண்டும். அப்புறம் சுத்தமான பாட்டில்களில் ஊற்றினால் நமக்கு வேண்டும் பொழுது முந்திரிப்பழ சர்பத் எடுத்துக்கொள்ளலாம். முதலில் சர்பத் சிறிது துவர்ப்பாகவும் தொண்டையைப் பிடிப்பதாகவும் இருக்கும். மூன்று மாதங்களில் இந்தத் தன்மை நீங்கிவிடும்.

முந்திரி ஓட்டிலிருந்து எடுக்கும் எண்ணெய் குழம்புபோல இருக்கும்; விஷமுங்கூட. உடலில் பட்டால் சுட்டுவிடும். இது பிளாஸ்டிக் செய்வதற்கு மிகவும் முக்கியமான மூலப் பொருள். அமெரிக்காவில் பிரேக்லைட் லைனிங்குகள், தொழிற் சாலைத் தளங்கள், போலி ரப்பர் செய்யும் தொழில் முதலிய பல தொழில்களில் இது உபயோகப்படுகிறது.

முந்திரி எண்ணெய் இது போன்ற எத்தனையோ விதங்களில் உபயோகமாகிறது. என்றாலும் இந்தியாவில் சிறிது ஆராய்ச்சிதான் இதுபற்றி நடந்திருக்கிறது. எண்ணெய் பிழிந்த ஓட்டிலிருந்து ஒருவகைக் கரிப்பொடி தயாரிக்கிறார்கள். கடப்பை ஜில்லாவைச் சேர்ந்த கோவூரில் உள்ள பழ ஆராய்ச்சிச் சாலையில் முந்திரிப்பழ சர்பத்துக்கள், பானங்கள் தயாரிக்கும் முறைகளை ஆராய்ந்து வகுத்து வைத்திருக்கிறார்கள்.

—‘மேழிச் செல்வம்’

சிறுகதை:

பெரிய மணி

லப்காடியோ ஹார்ன்



ஐரிஷ்-கிரேக்கப் பெற்றோருக்குப் பிறந்து யாகுமோ காய்ஸுமி என்ற பெயருடன் ஜப்பானில் குடியேறியவர் இந்த ஆசிரியர். ஆங்கிலத்தில் ஜப்பான் சம்பந்தமாகப் பல நூல்கள் எழுதியவர். 1850-முதல் 1904-வரை வாழ்ந்தார்.

தாச்சுங் என்ற நகரத்தின் பெரிய மணிக் கூண்டில் உள்ள நீர்விசைக் கடிகாரத்தின் சிறிய முள், இதோ ஒரு மணிக் குறியை எட்டிவிட்டது. அதில் வெண்கல அசுரனின் நாக்குப்போல் பிரம்மாண்டமாய் அகன்றிருக்கும் சேமக்கலத்தில் போய் மோதுவதற்காக, அதன் எதிரே இருக்கும் சுத்தியல் எழும்பிவிட்டது. அந்தச் சேமக்கலத்தில்தான் பௌத்த தர்ம வாசகங்கள் எத்தனை பொறித்திருக்கின்றன! பா-ஹ்வா-கிங் என்ற பௌத்த நூலில் லிங்-யென்-கிங் என்ற அத்தியாயத்திலிருந்து எடுத்தவை அந்த வசனங்கள்.

அந்தப் பெரிய மணி அடிக்கும் சத்தத்தைக் கேளுங்கள்! நாக்கு இல்லாவிட்டாலும் அதன் நாதம் எப்படிக் கணீரென்று எழுகிறது!— **கோன்காய்!** பச்சைநிற மச்சின் இறவாணமெங்கும் செதுக்கிப் பொன் முலாம் பூசியிருக்கும் சிற்ப சர்ப்பங்களெல்லாந்தான் எப்படி அந்த ஒலியலையில் அதிர்ந்து தலைமுதல் வால்வரைக்கும் நடுங்குகின்றன! ஆலயத்தின் சந்நிதிகளில் இருக்கும் நூற்றுக் கணக்கான சின்னஞ் சிறு மணிகளும் கோஷமிட ஆசை கொண்டது போல் குலுங்குகின்றன! **கோன்காய்!** பச்சை நிறமும் பொன் முலாமும் பூசிக் கோயில் கூரையில் வேய்ந்திருக்கும் ஓடுகளெல்லாம் கிடு கிடு என்று ஆடுகின்றன; அவற்றின் மேலுள்ள சொர்ண மீன் குஞ்சுகள் வானை நோக்கித் துள்ளப் போவது போல் நெளிகின்றன; வாசனைத் தூபங்களின் நீலப்புகை சூழ வணங்கி நிற்கும் பக்தர்களின் தலைக்கு மேலே விண்ணைச் சுட்டிக் காட்டும் விரல் போல் நீண்ட கோபுரத்

தூபியுங்கூடக் குலுங்குகிறது! கோன்காய்! என்ன இடியோசை! அரண்மனை மூலைகளில் அரக்கி னல் மெருகிட்ட குட்டிச்சாத்தான் பதுமைகளெல்லாம் தங்கள் தீ நிற நாவுகளை நீட்டி நெளிகின்றன! சேமக்கலத்தின்மீது ஒவ்வொரு தடவையும் அந்தச் சுத்தியல் விழுந்தவுடனே, பலவித ஒலிகள் அற்புதமாய்க் கலந்து இசைக்கும் சொர்ண கலசத்தின் சோகக் குரல் ஒன்று வீரிட்டெழுகிறது; பின்பு அது எப்படி மெல்ல மெல்ல மங்கி, வெள்ளிக் கும்பத்தின் மெல் லோசை ஒன்று - கிசு கிசுக்கும் பெண் குரல் போல் - 'ஹியாய்!' என்று கூவுகிறது!

சென்ற ஐந்நூறு வருஷகாலமாக இந்தப் பெரிய மணி ஒவ்வொரு நாளும் இப்படியே ஒலித்துக் கொண்டிருக்கிறது - கோன்காய்! முதலில் இடி முழக்கம்; பிறகு அளவிறந்த சோகத்தைக் காட்டும் சொர்ண கலசக் குரல்; கடைசியில் 'ஹியாய்!' என்ற வெள்ளிக் கும்பக் கிசுகிசுப்பு! சீனவின் பழமையான தாச்சுங் நகரில் விதம் விதமான களியாட்டங் களோடு வாழும் சின்னஞ்சிறு வருக்கெல்லாம் இந்தப் பெரிய மணியின் கதை தெரியும். யாரைக் கேட்டாலும் அதை நமக்குச் சொல்லுவார்கள்.

க்வாங் -ட்சா - பூ நகர்வாசி யான யூ-பாவோ-ட்சென் என்ற பேரறிஞர் பி-ஹ்யாவோ-டே-சூ என்ற நூலில் இந்தத் தாச்சுங் நகரத்துப் பெரிய மணியின் கதையை எழுதியிருக்கிறார். அது இதுதான்:

சுமார் ஐந்நூறு வருஷங்களுக்கு முன்னே தெய்வ மாட்சி வாய்ந்த தேவகுமாரனை யாங்-லோ என்ற மன்னன் ஆண்டுவந்தான். அவன் மிங் வம்சத்தைச் சேர்ந்தவன். குவான் - யூ என்ற உத்தம அதிகாரியை அந்த மன்னன் அழைத்து, "நீ ஒரு பெரிய மணி செய்விக்க வேண்டும். அதை அடித் தால் அதன் ஓசை நூறு லீ தூரம் (சுமார் 33 மைல்) கேட்கவேண்டும். பித்தளையின் உரமும் தங்கத்தின் ஆழமும் வெள்ளியின் இனிமையும் அந்த மணியோசையிலே கலந்து இசைக்கவேண்டும். அதன் முகத்தி லும் நாக்குகளிலும் புண்ணியக் கிரந்தங்களில் உள்ள தூய வாசகங் களைச் செதுக்கியிருக்க வேண்டும். தலைநகரின் நடு மத்தியிலே அந்த மணியைத் தொங்கவிடவேண்டும். பல வர்ண விசித்திரங்கள் நிறைந்த பீக்கிங் நகரெங்கும் அதன் ஒலி முழங்கவேண்டும்" என்று கட்டளை யிட்டான்.

சீன சாம்ராஜ்யத்திலேயே சிறந்த வார்ப்பட நிபுணர்களையும் கீர்த்தி பெற்ற மணிக் கொல்லர்களையும் பெயரும் திறமையும் பெற்ற கன் னர்களையும் அதிகாரி குவான்-யூ அழைத்தார். அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து வேலை செய்யத் தொடங்கினார்கள். பலவித உலோகங்களையும் அளந்தெடுத்துக் கொண்டார்கள்; அவற்றைப் பக்குவ மாய்ப் பதப்படுத்தினர்கள்; வார்ப் பட அச்சுக்கள், தீ, கருவி, பிரம் மாண்டமான கொப்பரை எல்லாம் தயாரித்தார்கள். எல்லா உலோகங் களையும் உருக்கி ஒன்று சேர்த்துக் குழம்பாக்க அசுர முயற்சி செய்தார் கள். இரவும் பகலும் ஊணுறக்கந் துறந்து ஓய்ச்சல் ஒழிவின்றி உழைத்தார்கள். தேவகுமாரனின் கட்டளைப்படியே மணியைச் செய்து முடிக்க முழு முயற்சியும் கைக் கொண்டார்கள்.

ஆனால், உலோகக் குழம்பை மண் அச்சிலே வார்த்தார்களோ இல்லையோ, அவர்களுடைய முயற்சி யெல்லாம் வீணாயிற்று. உலோகங் கள் ஒன்றோடொன்று ஒட்டாமல் முரண்டு செய்து பிரிந்தன. பித்தளையைத் தங்கம் எள்ளி ஒதுங் கியது; இரும்போடு வெள்ளி சேரமாட்டேன் என்று விலகியது. அச்சை மீண்டும் சித்தம் செய்தார்கள்; தீயை மீண்டும் தூண்டிவிட்டார்கள்; உலோகங்களை மீண்டும் உருக்கினார்கள். எல்லா வேலைகளையும் மீண்டும் அரும்பாடு பட்டு இயற்றினார்கள். இதையெல்லாம் கேள்விப்பட்ட தேவகுமாரன் மகா கோபம் கொண்டான். ஆனால் அதை அடக்கிக்கொண்டு,பேசாதிருந்தான்.

இரண்டாம் முறையும் மணியை வார்த்தார்கள். பலன் முன்னிலும் மோசமாயிற்று. உலோகங்கள் ஒன்றுடன் ஒன்று சேராமல் பிடிவாதமாய் முரண்டின. மணியின் அமைப்பு ஒத்தாற்போல் இல்லை; விரிசலும் பொரிசலுமாயிருந்தது. நாக்குகள் பிளந்து தொங்கின. அத்தனை வேலைகளையும் மூன்றாம் முறை செய்ய நேர்ந்தது. அதிகாரி குவான் - யூ பெருந்துயரம் அடைந்தார். தேவகுமாரன் இதைக் கேள்விப்பட்டதும், முன்னிலும் அதிகக் கோபம் கொண்டான். எலுமிச்சம் பழ வர்ணப் பட்டிலே ஒரு கடிதம் வரைந்தான். அதிலே நாகராஜ முத்திரையை இட்டான். அதிகாரிக்கு அதை ஒரு தூதன் மூலம் அனுப்பினான். அந்தக் கடிதத்தின் வாசகம் இதுவே:

"மாட்சிமை மிக்க யாங்-லோ, ராஜகம்பீர டைட்ஸூங், தெய்விக தேஜஸ் வாய்ந்த மிங் மன்னன் சமுகத்திலிருந்து—குவாங்-யூ என்னும் பூ-யின் அதிகாரிக்கு வரும் விகிதமாவது: நாம் அருள் கூர்ந்து உம்மிடம் ஒப்படைத்த காரியத்தை இரண்டுமுறை நீர் கெடுத்து விட்டீர். நம் கட்டளையை நிறைவேற்றாமல் மூன்றாம் முறையும் நீர் தவறினீரானால், உமது தலையை உமது உடலிலிருந்து தனியே பிரித்துவிடுவோம். நடுங்கிக் கீழ்ப் படிவீராக!"

இங்கே ஒரு விஷயம்: இந்தக் குவான்-யூ என்ற அதிகாரிக்கு ஒரு மகள் உண்டு. ஜகஜ்ஜோதியான அழகு வாய்ந்தவள். கோன்காய் என்பது அவள் பெயர். கவிகளெல்லாம் அவளைப் பாடிப் போற்றினார்கள். அவள் மேனியழகைவிட அவள் உள்ள அழகு இன்னும் சிறந்தது. கோன்காய்க்குத் தன் தகப்பனாரிடம் மிகுந்த அன்பு. நூற்றுக் கணக்கான வாலிபர்கள் அவளை மணப்பதற்காக வந்தார்கள். வீட்டில் தன் தந்தையைத் தனியே விட்டுச்செல்ல அவளுக்கு மனமில்லை. தனக்கு வந்த வரன்களையெல்லாம் அவள் மறுத்துவிட்டாள். நாகராஜ முத்திரையிட்ட அந்தச் சின்னஞ்சிறு மஞ்சள் கடிதத்தைக் கண்டதும் அவளுக்கு மூர்ச்சை போட்டுவிட்டது. அது தெளிந்து சுயநினைவு வந்தபோது, அவள் தன் தகப்பனாருக்கு வந்திருக்கும் அபாயத்தை எண்ணி ஊணுறக்கமின்றிக் கவலைப்பட்டாள். ரகசியமாய்த் தன் நகைகளையெல்லாம் விற்றாள். அதில் கிடைத்த பணத்தை எடுத்துக்கொண்டு, ஒரு ஜோஸ்யனிடம் சென்றாள். அவனுக்குப் பெருந் தொகை கொடுத்தாள். தன் தகப்பனாரை அபாயத்திலிருந்து மீட்க உபாயம் சொல்லும்படி கேட்டாள்.

வான நிலைகளையெல்லாம் ஜோஸ்யன் ஆராய்ந்தான். 'வெள்ளி அருவி' (பால் வீதி) என்ற தாரா

கணங்களின் பார்வையைக் கவனித்தான். கிரக நிலைகளைச் சோதித்தான். பஞ்சாங்கத்தைப் புரட்டினான். ரசவாத சாஸ்திரத்தை அலசினான். நீண்டநேரம் மௌன சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு, அவளுக்குப் பதில் சொன்னான்: "தங்கமும் பித்தளையும் மணந்து கூடாது; வெள்ளியும் இரும்பும் ஒன்றையொன்று தழுவாது. ஆனால் அவைகளும் ஒன்று சேர வழி உண்டு. அவைகளைப் போடும் கொப்பரையிலே கன்னி கழியாத ஒரு கட்டழகியின் தளிர்மேனி உருக வேண்டும்; அவளுடைய ரத்தம் அந்த உலோகங்களோடு கலக்க வேண்டும். அப்போதுதான் அவைகளெல்லாம் தழுவி ஒன்று சேரும்."

இதைக் கேட்ட கோன்காய், தன் உள்ளத்திலே துக்கம் தோய்ந்தவளாக வீடு திரும்பினாள். ஆயினும், தான் கேட்ட விஷயத்தைத் தன் மனத்திலே ரகசியமாய் வைத்துக் கொண்டாள். ஒரு பிராணியிடமும் சொல்லவில்லை.

கடைசியில் அந்தப் பயங்கர நாளும் வந்தது—மூன்றாம் முறை இறுதியாகப் பெரிய மணியை வார்க்கவேண்டுமே, அந்த நாள். கோன்காய் தன் தோழி ஒருத்தி துணைவர, தகப்பனாரோடு கூடவே உலைக்களத்துக்குச் சென்றாள். உலோகங்கள் உருகிவரும் குழம்பையும், வெந்து புழுங்கிக்கொண்டு அவற்றை உருக்கும் கன்னார்களையும் மேலே இருந்தபடி பார்க்கக் கூடிய ஒரு மேடை அங்கே இருந்தது. தன் தோழியும் தானுமாக அந்த மேடைமீது உட்கார்ந்து கொண்டாள் கோன்காய். தொழிலாளிகள் அத்தனை பேரும் வாய் பேசாமல் வேலை செய்துகொண்டிருந்தார்கள். பரம மௌனம் நிலவியது. சொட சொட என்று உலோகங்கள் உருகும் முணுமுணுப்புமட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. அது மெல்ல மெல்ல வலுத்துப் புயலைப் போல் ஒலித்தது. செக்கச் செவேல் என்று ரத்தம் போல் சிவந்திருந்த உலோகக் குழம்பு, சூரியோதயத்தின் குங்கும வர்ணமெனப் பிரகாசித்தது; பின்பு அது, தகதகவென்று ஜொலிக்கும் சொர்ணமாய் மின்னியது; அந்தச் சொர்ண ஒளியும் மாறிப் பூர்ண சந்திரனின் முகத்தில் துலங்கும் வெள்ளி நிறம்போல் கண்ணைப் பறித்தது. குமுறும் தீவாய்க்கு விறகு போடுவதைத் தொழிலாளிகள் இதோடு நிறுத்திவிட்டார்கள். அத்தனை பேரும் குவான்-யூ என்ற அதிகாரியையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். உருகிய உலோகக் குழம்பை அச்சிலே வார்க்கக் கட்டளை கொடுக்க அவரும் சித்தமானார்.

ஆனால், அவர் தம் விரலைத் தூக்கிச் சமிக்ஞை செய்யப்போகும் தருணத்தில், யாரோ கோஷமிடும் சத்தம் கேட்டது. அதிகாரி திரும்பிப் பார்த்தார். பாடும் குயிலின் இன்பக் குரல்போல் இருந்த அது, கோன்காய் போட்ட கோஷந்தான்.

"அப்பா, இது தங்களுக்காகவே!"

தீயின் பேராரவாரத்தையும் மிஞ்சும்படி இப்படிக் கோஷமிட்டுக் கொண்டே, அவள் அந்த வெள்ளிக் குழம்பிலே தாவிக் குதித்துவிட்டாள். கொப்பரையில் தள தள வென்று கொதித்துக்கொண்டிருந்த உலோகக் குழம்பு, அந்தச் சுந்தரக் கன்னியை ஆர்வத்தோடு வரவேற்பதுபோல் ஆர்ப்பரித்தெழுந்து, நாலு திசையும் தீக்கக்கும் சுடர்

முத்துக்களை வீசியது. அதில் எழுந்த சுழலிலே பல வர்ண விசித்திரங்கள் தோன்றின. பின்பு அந்தக் குழம்பு ஆடி ஆடி அடங்கி அமைந்தது. இடையிடையே இடி மின்னலும் சொட சொடவென்ற முணுமுணுப்பும் மிகுந்திருந்தன.

அப்போது கோன்காயின் தகப்பனார் அளவிறந்த துயரம் அடைந்தார். மகளைத் தொடர்ந்து தாமும் அந்த உலோகக் குழம்பிலே குதிக்கப் போனார். ஆனால், தொழிலாளிகளுக்குள்ளே வலிமை வாய்ந்த சிலர் வந்து அவரைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டார்கள். ஆயினும் கோன்காயின் தகப்பனாருக்கு மூர்ச்சை போட்டுவிட்டது.

பிணம்போல் பிரக்ஞையற்றுப் போன அவரை அவருடைய வீட்டுக்குத் தூக்கிக்கொண்டு போனார்கள். கோன்காயின் தோழி தலை கறங்கிப் பேச்சற்றுச் சிலைபோல் அந்தக் கொப்பரையின் முன்னிலையிலேயே இன்னும் நின்றுகொண்டிருந்தாள். அவள் கையிலே ஒரே ஒரு ஜோடு, மிருதுவான சின்னஞ்சிறு ஜோடு, வர்ணப் பூப்போட்டு முத்துக்கள் கோத்த ஜோடு இருந்தது. அழகில் சிறந்த எஜமானி கோன்காயின் ஜோடுதான் அது. தன் எஜமானி தாவிக் குதித்தபோது அவளைத் தடுப்பதற்காக அவள் காலைப் பிடித்துக்கொள்ள முயன்றாள் அந்தத் தோழி. ஆனால், ஜோடு தான் பிடிபட்டது; கால் நழுவிச் சென்றுவிட்டது. அந்த ஜோட்டையே வெறித்து வெறித்துப் பித்தியைப்போல் பார்த்துக்கொண்டிருந்தாள் தோழி.

எது எப்படிப் போனால் என்ன? தேவகுமாரனை மன்னனின் கட்டளையை நிறைவேற்றியாக வேண்டுமே; மணியை வார்க்கும் வேலையிலே கன்னார்கள் முனைந்தார்கள். என்ன ஆச்சரியம்! உலோகக் குழம்பு முன்னைவிடத் தூய்மையாய், வெண்மையாய் இருந்தது. அந்தச் சுந்தரப் பெண்ணின் உடம்பு அதில் விழுந்து முழுகிய சுவடே தெரியவில்லை.

பிரம்மாண்டமான அந்தப் பெரிய மணியையும் கன்னார்கள் வார்த்துவிட்டார்கள். உலோகக் குழம்பு குளிர்ந்தபோது, பார்ப்பதற்கு மகா அழகாக இருந்தது பெரிய மணி. அதன் அமைப்பிலே அப்பழுக்குச் சொல்ல முடியாது. வேறு எந்த மணிக்கும் இல்லாத அற்புத நிறம் ஒன்றை அது பெற்றிருந்தது. கோன்காயின் மேனி அதில் கலந்த சின்னமே இல்லை. ஏனென்றால், மதிப்பரிய அந்த உலோகக் குழம்பிலே அவள் இரண்டறக் கலந்துவிட்டாள். தங்கமும் பித்தளையும் தழுவ, வெள்ளியும் இரும்பும் கலக்க, அந்த எல்லாவற்றோடும் அவள் ஒன்றிவிட்டாள்.

இந்தப் பெரிய மணியை அடித்துப் பார்த்தார்கள். உலகத்திலே வேறு எந்த மணியின் ஒலியையும் விட ஆழ்ந்ததாக, இனிமை ததும்புவதாக, வலிமை மிக்கதாக இருந்தது இதன் ஒலி. நூறு லீ தூரத்துக்கும் அப்பாலேகூடச் சென்று, கோடையிடி போல் கேட்டது அது. ஆயினும் அது ஏதோ ஒரு நாமத்தை - பெண்ணின் பெயரை - ஜபிப்பதுபோல் தோன்றியது. அந்த ஜபநாமந்தான் 'கோன்காய்!'

பண்ணை வாழ்க்கை



ச. கு. கணபதி ஐயர்
எம். ஏ.

ஆசிரியர் விவசாயத் துறையில் நீண்ட காலமாய் ஆராய்ச்சி புரிந்து வருபவர். அதுபற்றித் 'தோட்டக் கலை', 'சிங்காரத் தோட்டம்', 'காய்கறிப் பயிர் முறை', 'தென்னை வளர்ப்பு', 'கோழிப் பண்ணை', 'ஆடு வளர்ப்பு' முதலிய உபயோகமுள்ள பல நூல்கள் எழுதியிருக்கிறார்.

காப்பிரைட்; 'பண்ணை வாழ்க்கை' (தமிழ்ப் புத்தகம்); பிரசுரித்தவர்; கிராம ஜோதி நூலகம், 15/1, மந்தைவெளி லேன், மயிலாப்பூர். விலை: ரூ. 4-0-0.

பண்ணை வாழ்க்கை

விவசாயி தம் சொந்த பூமியிலேயே வீடு கட்டிக்கொண்டு தம் விவசாயத்தைக் கண்காணித்து வருவதுதான் பண்ணை வாழ்க்கை. குடும்பத்துக்கு வேண்டிய தானியங்கள், காய் கறிகள், பழங்கள், பால், விறகு முதலிய எல்லாம் தம் நிலத்திலேயே கிடைக்கும்படி விவசாயத்தைப் பல துறைகளில் பெருக்கிக்கொள்வதே பண்ணை வாழ்க்கையின் தத்துவம். பண்ணை வாழ்க்கையினால் நிலம் திருந்தும்; விளைவு அதிகமாகும். விவசாய முறைகளில் ஒன்றில் நஷ்டம் ஏற்பட்டால் மற்றொன்றில் அந்த நஷ்டத்தை ஈடு செய்ய முடியும்.

சொந்த நிலத்தை உடையவர்கள் நகரங்களில் இருந்தால், அவர்கள் தங்கள் நிலங்களுக்குச் சென்று அங்கே வீடு கட்டிக்கொண்டு பண்ணை வாழ்க்கையை நடத்த வேண்டும். பணம் இருக்கிறவர்கள் சில ஏக்கர் நிலங்களை விலைக்கு வாங்கி அங்கே போய்க் கிராம வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். பண்ணை வாழ்க்கை ஸ்திரமாகிவிட்டால், பண்ணைச் சொந்தக்காரர் பிறருக்கு அடிமையாக இல்லாமல் சுதந்தரமுள்ளவர் ஆகிறார். செல்வம் பெருக்கும் வழி அவருக்குச் சொந்தமாகிறது. பண்ணையே அவருக்கு உத்தியோக சாலையும் வீடும் விநோதப் பொழுது போக்குக்கு ஏற்ற இடமும் ஆகிறது.

பண்ணைகளில் பலவகை உண்டு. பயிர் விவசாயம் முக்கியம். அதோடு காய்கறி விவசாயமும் அவசியமே. மற்றொன்று கால்நடை வளர்ப்பு. பால் பண்ணை இன்னொன்று. கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்புப் போன்றவை வேறு ரகம். மேலே சொன்னவற்றில் இரண்டு அல்லது மூன்று கலந்த பண்ணைகளும் உண்டு.

நிலவள ஆராய்ச்சி: பண்ணைக்கு நிலம் வாங்க வேண்டுமானால் அந்த நிலம் விவசாயத்துக்கு ஏற்றதா, அதன் வளப்பம் எப்படி என்று ஆராய்வதற்குச் சில வழிகள் இருக்கின்றன.

ஒரு நிலத்தில் முளைத்திருக்கும் செடிகளின் வகை, அவை முளைத்திருக்கும் தன்மை முதலியவை களைப் பார்த்து அந்த நிலத்தின் வளத்தை ஒருவாறு தீர்மானிக்க முடியும்.

வெள்வேல், இலந்தை, ஈந்து முதலிய சில முள் மரங்கள் வளப்பம் இல்லாத நிலங்களிலும் வளர்ந்து விடும். வளப்பமுள்ள நிலங்களாக இருந்தால், அவைகளில் இந்த முள் மரங்களுக்குப் பதிலாக வேறு ரகமான சிறந்த மரங்கள் தென்படலாம். வளப்பமற்ற நிலத்தில் வளரும் மரங்கள் ஒழுங்காகவும் நேர்மையாகவும் வளரமாட்டா. அவைகளின் அடி மரம் கரடு முரடாக இருக்கும். அதில் பல முடிச்சுகள் விழுந்திருக்கும்.

களைச் செடி அதிகமாக முளைக்கும் நிலமே வளப்பமுடையது.

மண்ணோடு ஈரமும் பல வகைக் களைச் செடிகளுக்குக் காரணம். அவை உள்ள நிலமே வளமுள்ள நிலம்.

சில நிலங்களில் களைச் செடிகள் நெருக்கமாக எல்லா இடங்களிலும்

பரவியிருக்கும். வேறு நிலங்களில் அவை இங்குமங்குமாக இருந்து நடு நடுவில் காலி இடங்கள் இருக்கும். இப்படிக் காலி இடங்கள் உள்ள நிலங்கள் வளமுடையவை அல்ல.

விளை நிலமாக இருந்தால் அதில் என்ன என்ன தாவரங்களைப் பயிர் செய்திருக்கிறார்கள் என்றும், அவைகளின் வளர்ச்சி எப்படி இருக்கிறது, பலன் திருப்திகரமாக இருக்குமா என்றும் கண்டு கொண்டு நிலவளத்தை நன்றாக ஊகிக்கலாம்.

இலை முதலியவை மட்கி அதிகமாகக் கலந்துள்ள மண் கரு நிறத்தோடு இருக்கும். காடுகள், குளம், குட்டை முதலிய பிரதேசங்கள் அழிந்த நிலங்களில் இப்படிப்பட்ட மண்ணைக் காணலாம். இந்த நிலங்கள் விசேஷமானவை.

செந்நிறமுள்ள மண்ணும் நல்லதே. பாறைகளின் பொடிகள், சில உப்பு வகைகள், இரும்புச் சத்து முதலியவையே செந்நிறத்துக்குக் காரணம். நிலத்துக்கு அவசியமான எரு உப்புக்கள் இந்த மண்ணில் மிகுதியாகக் கலந்திருப்பதால் வேளாண்மைக்கு இதுவும் சிறந்ததே.

பழுப்பு அல்லது சாம்பல் நிறமுள்ள மண் சில இடங்களில் தென்படும். இந்த நிலங்களில் எப்போதும் ஈரம் இருந்து கொண்டே இருக்கும். அதனால் இந்த மண் பெரும்பாலும் வேளாண்மைக்கு - முக்கியமாகப் பழச் சாகுபடி, பிராணி வளர்ப்பு இவைகளுக்கு - உதவாது. ஆனால், வடிகால் நன்றாக அமைந்திருந்தால், இதுவும் ஏற்றதுதான்.

சில வகை மண்ணில் பிசிபிசிப்பு இருக்கும். ஈரமாக இருக்கும் அதை விரலால் நெருடிப் பார்த்தாலே தெரியும். மணல் அதிகமாக இருக்கும் மண்ணில் பிசிபிசிப்பே இராது. அதில் தாவரங்களுக்கு வேண்டிய ஆகாரப் பொருள்கள் இல்லை. அவற்றின் வேர்களும் அதில் சரிவர நிலை கொள்ள வசதி இராது. களி நிலத்தில் பிசிபிசிப்பு அதிகம். அதை நெருடிப் பார்த்தால் கற்களின் குறு நொய்கள் விரல்களுக்குப் புலப்படாவிட்டால் அதுவும் பழ உற்பத்தி முதலிய வற்றுக்கு லாயக்கில்லை. நொய்க் கற்கள், குறுங்கல் முதலியவை மண்ணோடு கலந்திருப்பது மண்ணின் வாசிக்கு ஆக்கம் தரும்.

விளை நில விஸ்தரிப்பு: தரிசாக உள்ள பண்பழி நிலங்களை அதன் அதன் தகுதிக்கு ஏற்றபடி ஐந்து முதல் பத்து ஏக்கர் துண்டுகளாகப் பிரித்து, ஒவ்வொரு துண்டையும் விளைவுக்கு ஏற்றதாகத் திருத்தும் பொறுப்பை ஒவ்வொரு குடும்பத்தாரிடம் ஒப்படைக்க வேண்டும். அந்தக் குடும்பங்கள் பண்ணை வாழ்க்கையை மேற்கொண்டு திருத்தும் வேலைகளைச் செவ்வனே செய்து வந்தால் பண்பழி நிலங்கள் விரைவில் திருந்தக்கூடும்.

நிலத்தை, ஒவ்வொரு துண்டும் ஒரு குடும்பத்தின் ஜீவனத்துக்கு ஏற்றபடி துண்டித்த பிறகு வேலி கட்டவேண்டும். சொந்தப் பணத்திலோ சர்க்காரின் பண உதவி பெற்றோ கிணறு வெட்ட வேண்டும். மின்சாரம் அருகில் இருந்தால் அதை உபயோகித்துக் கிணற்றுப் பாசனத்தை எளிதாக்கிக்கொள்வது நல்லது.

நிலத்தின்மேல் மண், மழை, காற்றுக்களால் அரிப்பு ஏற்பட்டு அது பண்பழிந்திருக்குமானால், மேலும் மண்ணரிப்பு ஏற்படாமல் மழைநீர் ஓடும் திசையை அறிந்து

கொண்டு நிலச்சரிவுக்குக் குறுக்கே 10, 15 அடி தூரத்துக்கு ஒன்றாக வரப்புக்களை அமைக்க வேண்டும். கோடைக் காற்றிலுள்ள பிரதேச மானால், நிலத்தின் மேற்குக் கங்கில் சவுக்கு முதலிய மரங்களைக் காற்றடைப்பு வேலிகளாக நட்டு, மேல் காற்றின் பாதையைத் தடைப்படுத்த வேண்டும்.

நிலம் பண்பட்டுக் குடும்பத்துக்குப் போதிய அளவில் விளைவைக் கொடுக்கச் சில வருஷங்கள் செல்லும். அதுவரைக்கும் பண்ணைக் குடும்பத்துக்குப் பிழைப்பு வேண்டுமே. அந்தக் குடும்பம் சில கறவை மாடுகளை வாங்கி வைத்துக்கொள்ளலாம். பால், தயிர், நெய் விற்பனையினால் சிறிது வருவாய் வரக்கூடும். மாடுகளால் எருச் சேரும்; எருவினால் நிலம் திருந்தும்.

நிலத்தில் இடம் வசதியாக இருந்தால் அதில் பள்ளமான ஒரு புறத்தில் 20 அடி சதுரமுள்ள ஒரு குட்டையை அமைத்துக்கொள்ளலாம். நிலத்தின் ஓரத்தில் இந்தக் குட்டை அமைய வேண்டும். பெய்யும் மழைநீரின் மிகுதியான பாகம் வழிந்து ஓடுமே; அது இந்தக் குட்டைக்கு வந்து சேரும்படி வழிகளை அமைத்து வைக்க வேண்டும்.

மழைக் காலத்தில் குட்டையில் நீர் நிறைந்துவிடும். சில மாதம் வரையில் அதில் ஜலம் இருந்து கொண்டேயிருக்கும். குட்டையில் நீர் ஆவியாக வெளியேறுவதைத் தடுக்கும் பொருட்டு அருகில் நெருக்கமாகக் கருவேல மரங்களைப் பயிர் செய்ய வேண்டும். இந்த மரங்கள் எளிதில் வளர்ந்து விடுகின்றன. இவற்றின் இலையும் காயும், ஆடுகளுக்கு நல்ல ஆகாரம்; கட்டை, உழவுக்கு அவசியமான கலப்பை முதலிய கருவிகளைச் செய்ய உறுதியானது.

குட்டையில் ஜலம் எப்போதும் இருந்து வருமானால், பண்ணையில் வாத்துக்களை வளர்த்து வரலாம். வாத்து வளர்ப்பு நல்ல வருவாயைத் தரும். வெயில் காலத்தில் நீர் வற்றிப்போன சமயத்தில் குட்டையின் மண்ணையும் வெட்டி எடுத்து நிலத்துக்கு எருவாக உபயோகப்படுத்தலாம்.

பண்ணைக் கட்டிடங்கள்: பண்ணையே குடும்பத்தின் வாசஸ்தானம். அதனால் பண்ணைக் கட்டிடங்களில் வீடே முக்கியமானது. பண்ணையின் சொந்தக்காரருடைய வீட்டைத் தவிர, வேலைக்காரருக்கு அவசியமான வீடுகள் அடுத்தபடி முக்கியம். வேலைக்காரர்கள் தங்கள் குடும்பத்துடன் நம் பண்ணையிலேயே இருப்பது பல வகைகளில் நமக்கு நல்லது. அவர்களின் இருப்பு நமக்குப் பாதுகாவல். வேலைக்காரர் பண்ணையிலேயே இருந்துகொண்டு தொழில் செய்யும் போது தொழில் சரிவர நடக்கும். வேலைக்காரரின் குடும்பத்தில் இரண்டொருவர் தங்களால் இயன்ற வேலைகளைச் செய்து அவைகளுக்குத் தக்கபடி ஊதியம் பெறுவார்கள்; அதனால் பண்ணை ஆட்களின் வருவாய் நிலை திருப்திகரமாய் இருக்கும்.

குடியிருக்கும் வீடுகளைத் தவிர, பண்ணையில் நாம் வளர்க்கும் மாடுகளுக்குத் தொழுவம், ஆடுகளுக்குத் தனியாகத் தொழுவம், கோழி வீடுகள் முதலியவையும் அவசியம். இவைகளும் நம் வீடுகளைப் போலவே சிக்கன முறையிலும் சாஸ்திரீய முறையிலும் அமைய வேண்டும்.

தானியம் முதலிய விளை பொருள்களைப் பாதுகாத்து வைக்கும் கிடங்குகள், தீவன அறை, தொழிற்கூடம், ஒரு களம், கக்கூஸ் முதலியவற்றையும் அமைத்துக்கொள்வது அவசியம்.

வீடு என்பது குடியிருப்புக்கு மாத்திரம் அல்ல. வீட்டில் உள்ளவர் பொழுதுபோக்க வசதிகள் அதில் இருக்கவேண்டும். ஒரு ரேடியோ, சிறிய புத்தகசாலை, சிங்காரத் தோட்டம் இந்த மூன்றும் இந்தக் காலத்தில் அவசியமாகிவிட்டன. பண்ணை வீடுகளுக்கும் இவை இன்றியமையாதவை.

களைச்செடிகளின் அக்கப்போர்: நீண்ட காலம் பயிர் செய்யாமல் பண்பழிந்திருக்கும் நிலத்தில் களைச் செடிகள் நிலையாக இருக்கும். ஒரு முறை முளைத்த செடியின் விதைகள் அங்கேயே மண்ணில் புதைந்து போய், நெடுநாள் தங்கியிருந்து, தரையில் ஈரம் கண்டவுடன் குபீர் என்று முளைத்து விடுகின்றன. களைச் செடிகளுக்கு உழவு, எரு வடித்தல், நீர் பாய்ச்சுதல் ஒன்றும் வேண்டியதில்லை. எப்படியோ அவை தள தளவென்று செழித்து வளர்ந்துவிடுகின்றன. அவைகளை உடனுக்குடன் அப்புறப்படுத்தாவிட்டால் வேளாண்மையில் லாபம் வரும் என்று சொல்ல முடியாது. 'களை எடாதவன் விளைவெடான்.'

நிலத்தை அடிக்கடி உழுது சால்களின் வழியே வரும் களைச்செடிகளை அப்புறப்படுத்திவிட்டுப் பயிர் செய்ய வேண்டும். பயிர்கள் இருக்கும்போது களைச் செடிகள் அதிகமாகத் தோன்றுவதில்லை. சில மாதம் நாம் நிலத்தைத் தரிசாக விட்டுவைத்தால் தொலைந்தபடிதான். மறுபடியும் களைகள் தோன்றி விடுகின்றன. ஒன்று போனால் மற்றொன்றாகப் பல பயிர்களைப் பயிரிட்டு வந்தால், களைச்செடிகள் இடம் பெறுமல் ஒழிகின்றன.

இப்படிப் பல பயிர்களைத் தோற்றுவிக்க, அதற்கேற்ற மாற்றுப் பயிர் முறை அவசியம். ஒரு பயிருக்கு ஒருவிதமான பூசாரம் வேண்டியிருக்கும். மற்றப் பூசாரங்களை அது தொடுவதே இல்லை. அவை நிலத்தில் அப்படியே இருக்கின்றன. அதனுல் மறுதடவை வேறு வகையான பயிரை அங்கே பயிரிட வேண்டும். சில பயிர்கள் உள்ள நிலத்தில் அவற்றுக்குத் தொடர்பான களைச் செடிகள் மட்டும் தோன்றும். மாற்றுப் பயிர் முறையினுல் அவை அடுத்த தடவை நிலத்தில் இருப்பதில்லை.

நிலத்தில் களைச் செடிகள் பூத்து விதை விடும் வரையில் அவற்றை விட்டு வைக்கக்கூடாது. இளமையிலேயே அவற்றைக் களைந்துவிட வேண்டும். நான்கு மாத காலப் பயிர், ஆறு மாத காலப் பயிர் இவைகளுக்கு இரண்டு முறை களை எடுக்க வேண்டும். நிலத்தைக் கொத்திவிட்டோ உழுதோ களை பறிக்கவேண்டும். களைகள் மிகுந்த பூமிகளில் சில வருஷங்கள் வரையில் மூன்று முறை களை எடுப்பது நல்லது.

விதை தோன்றிய களைச் செடிகளைப் பசுந்தழை உரம் தயாரிக்கும்போதோ குப்பை எருவைச் சேகரிக்கும் சமயமோ குழிகளில் சேர்த்து வைக்கக்கூடாது.

எதையும் வீணுக்கலாகாது: பண்ணையில் சில தொழில்களுக்கு வசதிகள் இருந்தும் பண்ணைச் சொந்தக்காரர் அவைகளை உபயோகித்துத் தொழிற் பெருக்கத்தை உண்டாக்கிக்கொள்ளாத தோஷத்தினுல் எத்தனையோ வழிகளில் அவருக்கு

ஊதியம் இல்லாது போகிறது. உதாரணமாக, பாத்திகளுக்குக் கிணற்றுநீர் பாயும் வாய்க்கால் ஓரங்களில் மாட்டுத் தீவனப் புல் வகைகளைப் பயிர் செய்யலாம். வாழைத் தோட்டத்தில் குளிர்ச்சி மிகுதியாக இருப்பதால், இங்கிலீஷ் காய்கறிகளை உற்பத்தி செய்யலாம். தென்னந்தோப்பில் ராகி முதலிய தானியங்களைப் பயிர் செய்ய முடியும். நம் பண்ணையிலும் சுற்றுப்புறங்களிலும் தேனீக்களுக்கு ஏராளமாக மேய்ச்சல் நிலம் இருக்கலாம். தேன் கூடுகளை நாம் வைத்துக்கொள்ளாதிருப்பது ஒரு வகையில் நஷ்டம். கிணற்று ஜலத்தில் மீன்களை வளர்க்கலாம்.

பண்ணைப் பிராணிகள்: பண்ணையின் வேலைகளுக்கும், அங்கே வசிப்போரின் சொந்த உபயோகத்துக்கும், ஒழுங்கான வருவாய்க்கும் பிராணி வளர்ப்பு அவசியம். பிராணி வளர்ப்பு இல்லையானல் பண்ணை வாழ்க்கையும் இல்லை. பிராணிகளின் தரத்தை நாம் பண்ணைகளின் மூலமாகத்தான் எளிதில் உயர்த்த முடியும். மற்ற இடங்களில் வளரும் பிராணிகளைவிடப் பண்ணைப் பிராணிகள் சிறப்பாக இருப்பதற்கு, அவை பெறும் தூய பச்சை உணவும் ஆரோக்கியமான சூழ்நிலையுமே காரணம்.

பால், முட்டை, இறைச்சி முதலியவற்றுக்காக நல்ல கறவைப் பசு, ஆடு, எருமை, சில கோழிகள், டர்க்கிக் கோழி, கினியாக் கோழி, வாத்து, புரு, இவைகளையும் இரண்டொரு முயல்களையுங்கூட வளர்க்கலாம். இரண்டொரு வெள்ளாடுகள் இருந்தால், அவற்றின் பால், குழந்தைகளுக்கும் நோயினல் மெலிந்து போனவருக்கும் சிறந்த ஆகாரமாகும்.

பண்ணையின் காவலுக்கு இரண்டு நாய்கள் இருப்பது நல்லது.

ஊதிய முறை: பண்ணையின் ஊதியத்துக்குக் காரணமாக இருப்பவை இரண்டு. ஒன்று, நிலத்தின் தன்மை; மற்றது, பண்ணைச் சொந்தக்காரரின் திறமை. இயற்கை நமக்கு உதவியாக இருக்கும்வரையில் இந்த இரண்டு வசதிகளும் ஊதியம் தரக்கூடும். காலபேத விபரீதங்களால் மழை இல்லாமற்போவது, மிகுதியான அழிமழை பெய்வது, பயிர்களில் நோய் விழுவது இவை நேர்ந்தால் வருவாய் கெடும். இந்த விதமான பாதகங்கள் குறுக்கிடும் போது பண்ணைச் சொந்தக்காரர் பண்ணையில் அதிக நஷ்டம் வராத படி தம்முடைய திறமையினல் சமாளிப்பது சாத்தியம். ஆகவே, நிலவளத்தைக்காட்டிலும் பண்ணைச் சொந்தக்காரரின் திறமையே முக்கியம்.

திறமை என்பது என்ன? புத்தியையும் கையையும் உபயோகித்து இன்னது செய்யவேண்டும் என்கிற அறிவே திறமை. புத்தி, உழைப்பு இந்த இரண்டும் சேர்ந்தது திறமை. ஒன்று இல்லாவிட்டால் மற்றென்றுல் பயனில்லை.

முன் யோசனை, முன் ஏற்பாடு இவை இல்லாமல் ஒன்றையும் செய்யக்கூடாது. வருஷத் தொடக்கத்திலேயே, 'இந்த வருஷம் நாம் எதை எதைப் பயிரிடலாம்? அவற்றை எங்கெங்கே பயிரிடுவது? எப்படி எப்படி நம் பயிர் முறை அமையவேண்டும்? உத்தேசமாக எந்த எந்த மாதத்தில் என்ன என்ன விதமான வேலைகள் பண்ணையில் நடைபெற வேண்டும்? ஒவ்வொன்றுக்கும் எந்த விதமான உழைப்பும் உதவியும் வேண்டியிருக்கும்? அந்த அந்தக் காலத்தில்

அவை கிடைக்குமா? பருவம் அந்தப் பயிர் முறைக்கு ஏற்றதா? அந்தப் பயிருக்கு ஆகக்கூடிய செலவு எவ்வளவு? செலவு போக வருமானம் உத்தேசமாக எவ்வளவு கிடைக்கும்?' என்று சிந்தித்து ஆராய்ந்து எழுதி வைத்துக்கொள்ளும் முறைதான் திட்டம் அல்லது முன் ஏற்பாடு. பண்ணை வாழ்க்கையில் இரண்டு மூன்று வருஷ அநுபவம் ஏற்பட்டு விட்டால், திட்டம் போடும் விதம் எளிதில் தெரிந்துவிடும். புத்தக அறிவும் நமக்கு ஒரு வகையில் நல்ல துணையாக இருக்கும்.

பண்ணை நிலத்தில் இரண்டொரு பாத்திகளை ஒதுக்கி வைத்து, அவற்றில் பின்வரும் மூன்று விதமான பரிசோதனைகளைச் செய்வது நல்லது: 1. குறித்த நிலப்பரப்புப் பற்றியது. 2. குறித்த உழைப்புப் பற்றியது. 3. குறித்த மூலதனம் பற்றியது.

இன்ன மண்ணில், இன்ன எருக்களை இட்டு, இன்ன பயிர் முறையை மேற்கொண்டால் விளைவு அதிகமாகக் கூடும் என்பது முதல் பரிசோதனை. செடிக்குச் செடி விட வேண்டிய இடைவெளி, நீர் பாய்ச்சும் கால இடையீடு முதலியவை பயிர் முறையில் அடங்கும். இன்ன அளவுள்ள நிலத்தில் இவ்வளவு விளைச்சலை எடுக்க எவ்வளவு உழைப்பும் எவ்வளவு திறமையும் வேண்டும் என்று ஆராய்வது இரண்டாவது பரிசோதனை. இவ்வளவு பரப்புள்ள நிலத்தில் இவ்வளவு விளைவைப் பெறவேண்டுமானல் அதற்குத் தொடக்கத்திலிருந்து ஆகும் செலவு மொத்தம் எவ்வளவு, செலவு போக இறுதியில் தேறக்கூடிய ஊதியம் எவ்வளவு என்று ஆராய்வது மூன்ருவது பரிசோதனை.

இந்த மூன்று பரிசோதனைகளும் ஊருக்கு ஊர் நிலத்துக்கு நிலம் அங்கங்கே உள்ள கால இயல்புக்கும் மண்ணின் தன்மைக்கும் ஏற்றபடி வேறுபடும். பரிசோதனையை மேற்கொள்பவருக்கு நிதானமும் பொறுமையும் நுட்ப புத்தியும் அவசியம். உடனுக்குடன் பலனை எதிர்பார்க்க முடியாது. பல தடவை பரிசோதனை செய்து பார்த்தால் முடிவில் வெற்றி நிச்சயம். விவசாயத் துறையில் அநுபவம் வாய்ந்தவர்களின் யோசனைகளும் பரிசோதிப்பவருக்கு உதவியாக இருக்கும்.

விவசாயத் துறையில் நம் நாட்டுப் பழமையை வெறுக்க முடியாது. அது மற்ற நாட்டு விவசாய முறைகளிலும் சிறந்தது. மேல்நாட்டு விவசாய விஞ்ஞானிகளின் புதிய ஆராய்ச்சிகளின் முடிவுகளில் பல, நம் பழைய முறைகளை ஒத்திருக்கின்றன. ஆகவே, பழமையை முற்றும் அகற்றிவிட்டுப் புதிய துறைகளில் செல்வது நல்லதல்ல.

பண்ணை வாழ்க்கையும் கூட்டுறவும்: பண்ணை விவசாயிகளுக்கு உற்பத்தி முறையில் யோசனைகளும் உதவிகளும் அவசியம். உற்பத்தியாகும் பொருள்களை விற்பதற்கும் உதவி வேண்டும். பண்ணைச் சொந்தக்காரர் தம் வீட்டு உபயோகத்துக்கும் பண்ணை அபிவிருத்திக்கும் பல பொருள்கள் வாங்கவேண்டியிருக்கும். நல்ல பொருள்கள் எங்கே கிடைக்கும் என்று விசாரித்து அவைகளை மலிவான விலைக்கு வாங்குவதற்குக் கிராமங்களில் உள்ள பல விவசாயிகளுக்குத் தெரியாது. தெரிந்தவர்களுக்கும் அவைகளை வாங்கி வர நேரம் இராது. மேலும், ஒவ்வொருவரும் தமக்கு வேண்டிய பொருள்களைத்

தனியாக வாங்குவதனுல், உழைப்பும் கூலியும் பொருள்களின் விலையும் அதிகமாகிவிடக்கூடும். பண்ணைச் சொந்தக்காரர் பலர் ஒன்று கூடித் தங்கள் குறைகளைச் சர்க்காருக்கு எடுத்துரைக்கக் கூட்டுறவுச் சங்கத்தைவிடச் சிறந்த சாதனம் வேறில்லை. இவை எல்லாம் விவசாயிகளுக்கு முக்கியமான கூட்டுறவுத் துறைகள்.

முடிவு: நாட்டிலே உணவுப் பற்றுக்குறை தீரவேண்டுமானுல் அதற்குப் பண்ணை வாழ்க்கை அவசியம்; பண்பழி நிலங்கள் சீர்திருத்தப்பட வேண்டுமானுல் அதற்குப் பண்ணை வாழ்க்கை வேண்டும்; நிலங்கள் வளப்பட்டு விளைவு விகிதம் வேறு சில நாடுகளைப்போல் இங்கே உயரவேண்டுமானுல் அதற்கும் பண்ணை வாழ்க்கை இன்றியமையாதது. பண்ணை வாழ்க்கை முறையிலேயே இன்று உலகின் பல்வேறு பகுதிகளில் வேளாண்மை நடைபெறுகிறது.

க்விஸ் விடை

(1) ஒன்றும் நடக்காது. 1910-இல் தோன்றிய ஹாலி வால் நட்சத்திரம் பூமியைத் தொட்டிருக்க வேண்டும் என்றே பல விஞ்ஞானிகள் ஊகிக்கிருர்கள். ஆனுல், சூரியனுக்கு மிக அருகே வரும்போது அந்த வால் நம் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. இதனுல், நமக்குத் தெரியாமலே அது பூமியைத் தொட்டிருக்கலாம். (2) முடியாது. அங்கே தண்ணீருக்குச் சிறிது சூடேறியதும் அது கொதித்து விடுகிறது. அப்புறமும் கொதிக்கவைத்தால் ஆவியாய்ப் போய்விடும். இதற்குக் காரணம் அங்கே உள்ள சூழ்நிலை அழுத்தம் (அட்மாஸ்பியரிக் ப்ரஷர்) தான். (3) இந்திய யானைக்கு நான்கு நகங்கள். ஆப்பிரிக்க யானைக்கு மூன்று நகங்கள். (4) மைசூர். (5) '......பகைவர் உறவும் உறவோ?' (6) பிரெஞ்சு மன்னன் ஏழாம் லூயி; பிரிட்டிஷ் மன்னன் இரண்டாம் ஹென்ரி; ராணி எலீனர். (7) அவர் நெற்றியில் இருந்ததும் சந்தனப் பொட்டுத்தான். அவர் சிந்தித்த விதம் இது: "என் நெற்றியில் சாந்துப் பொட்டு இருந்தால், நண்பர் ம தம் நெற்றியில் சந்தனப் பொட்டு இருக்கவேண்டும் என்றே நினைப்பார். இல்லையானுல் ப வெளியே கிளம்பியிருப்பார் அல்லவா? அவரைப் போலவே தம் நெற்றியில் சந்தனப் பொட்டுத்தான் இருக்கவேண்டும் என்று ம வும் என் நெற்றியைப் பார்த்து ஊகிப்பார். இதனுல்தான் அவர்கள் இருவரும் கிளம்பவில்லை. ஆகவே, என் நெற்றியிலும் சந்தனப் பொட்டே இருக்கவேண்டும்."

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

சுதந்தரமும் உண்டா?

'என் சுதந்தரம்', 'உன் சுதந்தரம்' என்று பெருமை பேசுகிறோமே; அப்படி ஒன்று உண்டா? நான் எல்லார்மீதும் சார்ந்திருக்கிறேன்; எல்லாப் பொருளையும் சார்ந்திருக்கிறேன். மனிதருக்கு நடுவே, மனிதரோடு மனிதராகவே நான் வாழவேண்டும்.

என் முன்னோர்களின் ரத்தம் என் உடம்பிலே ஓடுகிறது. என் இயல்புகளெல்லாம் அவர்களிடம் நான் பெற்ற பிதிரார்ஜிதம்.

என் இயல்புகளில் பல என் குழந்தைகளை அடையும். நான் என் முன்னோரையும் பின்னோரையும் இணைக்கும் தையல்; பெருக்கெடுத்தோடும் நதி வெள்ளத்தில் ஒரு நீர்த்துளி; மலையிலே ஒரு மணல் பொடி; மரத்திலே ஓர் அணு.

என் அபிநயம், பழக்க வழக்கம் எல்லாம் இரவல் வாங்கியவை.

மதம் என்பது தனிப்பட்டவனுக்குரியதல்ல; சமூகத்தைச் சேர்ந்தது. யூத குலத்திலே பிறந்ததாலேயே ஒருவன் யூதனுகிறுன். இதே மாதிரி காரணத்தாலேயே ஒருவன் கத்தோலிக்கன், ஒருவன் பௌத்தன், ஒருவன் மார்மன். மதங்கள் என்னும் இந்தத் தேன் கூண்டுகளை மனிதத் தேனீக்கள் ஏற்கனவே கட்டி வைத்திருக்கின்றன. நாம் பிறக்கும்போதே இவைகளுள் ஒன்றில் புகுந்துவிடுகிறோம்.

அசல் கருத்துக்களா? அவைகளை எங்கே காண முடியும்? இன்றுள்ள அத்தனை கருத்துக்களும் மனித சமுத்திரத்திலே மிதக்கின்றன. நான் ஒரு முத்துச்சிப்பி போல் அவற்றில் சிலவற்றைக் கிரகித்துக்கொள்கிறேன்.

நாம்தான் எத்தனை விசித்திரமான அகங்காரம் கொள்கிறோம்! ஒய்யார நடை போட்டுக்கொண்டு, கையையும் காலையும் ஆட்டிக்கொண்டு, 'நான்' என்றும் 'என்னுடையது' என்றும் பெருமை பேசுகிறோம். கடைசியிலே, யாரும் அறியாத பெரும் பிரளயத்தில் போய்க் கலக்கும் கால நீர்வீழ்ச்சியிலே விழுந்து மறைகிறோம்.

ஆதலால், கேவலமான அகங்காரத்தை விடுவோம்; கட்சிப் பிரதிகட்சிக் குரோதங்களை உதறுவோம்; மனித குலத்தின்மீது அன்பு செலுத்துவோம்; நம் சிந்தனை அனைத்தும் உணர்ச்சியனைத்தும் மனித சமூகம் முழுவதையுமே பற்றிச் செல்லட்டும்.

—டாக்டர் பிராங்க் க்ரேன், 'ஐந்து நிமிஷக் கட்டுரைகள்'.

April, '51 Regd. No. M. 4975

மஞ்சரி

கர — சித்திரை

ஊரும் உலகமும் 1

ருஷிய ஸினிமா . . . . ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம் 6

கடற்கன்னி நாடு . . . . ரா. ஸ்ரீ. தேசிகன் 9

பாபுராவ் பதில் சொல்லுகிறார் . . . . பில்மிந்தியா 14

க்விஸ் 16

வழி வழி வந்த வசனநடை: ஆண்டாள் பெருமை 17

கன்னட அம்மன்கள் . . . . கர்மவீர் 19

கார்ட்டூன் கதம்பம் 22

குட்டிச்சாத்தான் வேலை ! 24

அருகி வரும் பட்டு நெசவு . . . திருவாங்கூர்-கொச்சின் நியூஸ் 29

சங்கங்களைத் தொலைக்க வழி 33

பிரிட்டிஷ் பத்திரிகைகள் . . . . ஸ்வதந்த்ரா 34

விவேகானந்தர் - வாழ்வும் வாக்கும் 40

ராவணன் தேர்ப்பாதை . . . . ஸ்ரீலங்கா 43

டீயின் கதை . . . . அமிர்த பஜார் பத்திரிகை 45

அமெரிக்காவில் இந்தியத் தெய்வங்கள் . . . . மாடர்ன் ரெவ்யூ 49

மனித யந்திரம் 54

உரக்கப் படி 59

வனவாசத் தீர்மானம் 60

குழந்தைகள் குறும்பு 65

முந்திரி சர்பத்தும் எண்ணெயும் . . . . . . மேழிச் செல்வம் 67

பெரிய மணி (சிறு கதை) . . . . . . லாப்காடியோ ஹார்ன் 68

பண்ணை வாழ்க்கை (புத்தகச் சுருக்கம்) ச. கு. கணபதி ஐயர், எம்.ஏ. 73

சுதந்தரமும் உண்டா? . . . . மூன்றும் அட்டை